www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.

குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப்



பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும் பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நாம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.

***ஷமீலா செனவிரத்ன***
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

GRANT McCANN

***வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்*** **Shell GAS**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அமுது

# அமுதக் கடலில்...


அமுத வாசல் . . . . . . . . . . . . . . . 2
தேனி, துளித்துளியாய் நீ சேர்த்த... . 5
**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . . . 6
**அரசியல் அரங்கம்:**
பொதுபொதுத்துப் போன
பொது வேட்பாளர் . . . . . . . . . . . . 8
தேர்தல் களக் குடுமிப்பிடிச் சண்டை . 10
**பேட்டி:** தேர்தல் குறித்து
**தமிழ்க் கட்சிகளின் பேட்டி** . . . . . . . . 12
ரமேஷின் மரணம் . . . . . . . . . . . . . . 16
**கவிதை:** நீங்கள் தூவிய மலர்கள் . . 17
அரோஹரா! பக்தி வதை . . . . . . . . . . 18
**குட்டிக் கதை:**
புதிருக்குள் புதிர் . . . . . . . . . . . . . . 21
**சிறுகதை:**
சாபம் . . . . . . . . . . . . . . . . . . 22
**கவிதை:**
பிரபுத்தன் . . . . . . . . . . . . . . . . . 24
**சிறுகதை:** R # 2i-x^(-5) . . . . . . . . 25
கட்டித் தங்கம் வெட்டி எடுத்து... . . . . 26
மொறு மொறு சிப்ஸ்... . . . . . . . . . . . 29
**சிறுகதை:**
காதலாகிக் கசிந்து... . . . . . . . . . . . 30
ஆட்டோக்காரன் ஆட்டோக்காரன். . . . 33
மில்லேனியம் - அழுவதா சிரிப்பதா?. . . 36
இப்படித்தான் இருக்கவேணும்
பொம்பள . . . . . . . . . . . . . . . . . . 39
**குங்.ஃபூ:**
தாய் சீ - உள்ளுறைந்த சக்தி . . . . . 40
**சினிமா:**
வழிபாடும் வன்முறையும் . . . . . . . . 44
**நோயற்ற:** குழந்தைகள் கவனம் . . . 46
கிரக சஞ்சாரம் . . . . . . . . . . . . . . 47


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283, 421181 Ext 347**
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அமுதே! உன் சகல அம்சங்களிலும் படிப்பினைகள் பொதிந்திருக்கிறது.



அகதிகள் பற்றிய பிரச்சினையை தெட்டத் தெளிவாக பகிரங்கப்படுத்தியதற்கு சபாஷ்! அப்பாவிகளை அகதிகளாக்கி அவஸ்தைப் பட வைக்கும் பசுத்தோல் போர்த்தியவர்கள் எப்போது திருந்துவார்களோ? தரமான செய்திகளைத் தரும் அமுதுக்கு நன்றி.

**பர்வீன்,**
**நாச்சியாதீவு.**

அமுதே உன் வாசலுக்கு வாழ்த்து வரைய வார்த்தைகள் வசப்படவில்லை. வந்த வார்த்தைகளைக் கொண்டுவாழ்த்துகிறேன். வளர்க வண்ண மலரின் தொண்டு. ஒவ்வொரு பக்கத்தைப் புரட்டும் போதும் உன் பக்கம் இழுக்கிறது என் மனதை. எப்போதும் நடுநிலைமை தவறாதீர்கள். பணத்தாலோ பயத்தாலோ பக்கம் பாடாதீர்கள். இதுவரையும் போல எப்போதும் உண்மையையே எழுதுங்கள். எங்களுக்கு அமுது நத்தை வேகத்தில்தான் வருகிறது. கொஞ்சம் விரைவுபடுத்துங்கள்.

**ஞா. இந்திரன்,**
**வல்வெட்டி.**

புலிகளின் மூர்க்கத்தனமான செயலால் யாழ்ப்பாண முஸ்லிம்கள் படும் கஷ்டங்களை யாவரும் அறிந்திருப்பார்கள். புலிகளின் செயல்களால் மூவின மக்களும், சொத்துக்களும் அழிவதையும், பொருளாதார வீழ்ச்சியையும் தவிர வேறு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. சமாதானம் ஏற்படப்போவதும் இல்லை, பதவி ஆசை பிடித்த அரசியல் வாதிகளும் பேரினவாத, இனத் துவேசப் பைத்தியக்காரர்களும் இருக்கும் வரையில் இந்த நாடு அழிந்துகொண்டேதான் இருக்கும்.

**அன்பழகன்,**
**தெரணியகலை.**

எங்கள் இதயத்தில் இடம்பிடித்த அமுதே, இமை கொட்டாமல் பார்க்கத் தூண்டும் அமுதே, நீங்கள் தூவிய மலர்களின் பக்கங்கள் நீளுமா? முன்னழகு தெள்ளமுது. பக்கங்களோ கண்களைப் பறிக்கிறது! நீ சில போட்டிகள் நடத்தினால் என்ன?

**மல்லிகை ஸ்ரீதரன்,**
**மூதூர்.**

அமுதுக்கு 1வது பிறந்த தினம்! நான் மிக்க மகிழ்கிறேன். அபார வளர்ச்சி கண்டு வியக்கிறேன். கம்பீரம், வீறுநடை, துணிவு, தெளிவு, சுவை இவையே அமுதின் வளர்ச்சிக்கு உற்ற நண்பர்கள் என்பதில் ஐயமில்லை.

**ஜே. எம். ரி. றொட்றிக்கோ,**
**யாழ் - பல்கலைக்கழகம்.**

எம்மை எழுத்துக்களால் வசீகரித்து விட்ட "அமுது"க்கு வயதும் ஒன்றாகி விட்டதை நினைக்கையில் பெருமையாக உள்ளது... மேலும் பல்லாண்டு காலம் வளர வேண்டும்... உன்னில் விளையாட்டு அம்சங்களையும் தொடர்ந்து சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**எம். எச். எம். சியாஜ் (னா),**
**கற்பிட்டி.**

அமுது அள்ளிவரும் தகவல்களைப் படிக்கின்றபோது பசியே வராது போலிருக்கிறது. அதிலும் என்னை மிகவும் கவர்ந்தது உங்கள் சிறுகதைத் தெரிவுகள்... என்னை அப்படியே திகைக்க வைத்துவிட்டது. அமுது வளர என் நல் வாழ்த்துக்கள்.

**ஏ. ஆர். முஸம்மில்,**
**திருகோணமலை.**

இலங்கையில் வெளிவரும் மாத வெளியீடுகளில் தன் பெயரை சிறப்பு முத்திரையாகப் பதித்துள்ள "அமுது" தாங்கி வரும் அனைத்து அம்சங்களுமே எம்மை கொள்ளை கொள்கின்றது. ஒக்டோபர் இதழில் இடம்பெற்ற "கொலைக் கணிதச் சமன்பாடு" நெற்றிக் கண் நக்கீரன் வழங்கிய கட்டுரை, நமது நாட்டுக் கொலைகள் பற்றி விரிவாகவும் சிந்தனையைத் தொடுவதாகவும் அமைந்திருந்தது. போட்டி நிகழ்ச்சிகள், கேள்வி பதில் போன்றவற்றையும் சேர்த்து வெளியிட்டால் மேலும் மெருகேறுமல்லவா.

**ஏ. சீ. எம். முஸம்மில்,**
**வட்டதெனிய.**

தமிழர்களின் உப கலாசாரம் பற்றி எழுதப்பட்டிருந்தது அருமை. வீரமான சண்டைத் திறனையும், சிறுசிறுவெற்றிகளையும் வியந்து எழுதிக் கொண்டிருக்கும் நம் பத்திரிகைகள் யுத்தத்தினால் பாதிக்கப்படுகின்ற எமது மக்களின் அவலம் பற்றி வெறும் சம்பிரதாயமான அனுதாபமே கொண்டிருக்கின்றன.

**வீ. இராகுலன்,**
**கொழும்பு 13.**

அமுது வெளிவரத் தொடங்கியதிலிருந்து படித்து வருகின்றேன். முன்னேற்றமுண்டு. நேர்காணலில் அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமா இடம்? கலைஞர்கள், அறிஞர்களுக்கு இடமில்லையா? பிக்பொக்கட், சில்மிஷங்கள் போன்ற விடயங்களுக்காக அவ்வளவு பக்கங்கள் தேவைதானா? உலக நடப்பு, பண்பாட்டம்சங்கள் பற்றியும் கவனம் செலுத்தலாமே.... மேலும் ராஜினி திரணகம பற்றிய கட்டுரை துணிச்சலான முயற்சி. இப்படியான அம்சங்களும் தேவைதான். மேலும் பல நல்ல அம்சங்களைத் தர முயற்சியுங்கள்.
வாழ்த்துக்களுடன்,

**பாரதி**
**யாழ்ப்பாணம்.**

கண்ணுக்கு விருந்தாக உள்ளத்துக்கு இதமாக மாதம் ஒரு முறை வந்து கோலமிடும் பொன்னமுதே! தாயும் சேயும் போன்று எம் அன்புபிணைப்புமாதந் தோறும் வளர்ந்து வருகிறது. உன் சகல அம்சங்களிலும் படிப்பினைகள் பொதிந்திருக்கிறது! சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றேன்.

**எம். எச். எம். பஸ்லி,**
**கட்டுகொடை.**

வாசலைத் தாண்டிய கடிதம், மக்களில் பலர் அடக்கிவைத்திருக்கும் உணர்வுகளை வெளியேற்றும் வடிகாலாக உதவுகிறது. ஏனைய பத்திரிகைகள் பூசி மெழுகி வாய்ச்ச பக்கத்திற்கு குறிசுட்டு, அதையே வெகுஜனக் கருத்தாகப் பரப்பி வரும் அறியாமைக்கு அல்லது வஞ்சகத்தனத்திற்கு வாசலைத் தாண்டும் கடிதங்கள் சாட்டையடிகளாக அமைகின்றன.

**கு. சகாயசீலன்,**
**சாவகச்சேரி.**

அமுதின் ஒரு வருட பெறுபேறு என்ன? சொல்லப்படாத - அச்சத்தாலோ தமிழனின் அறுப்புக் குணத்தாலோ சொல்ல விருப்பப்படாத பக்கங்களைச் சொல்லும் துணிச்சலைக் காட்டியதுதான். இது பரவும். வாழ்த்துக்கள்.

**எம். ரமேஷ்,**
**கொக்குவில்.**

அமுது நவம்பர் மாத இதழ் படித்தேன். படித்த பிறகு, ஏதோ ஓர் முழுமையின்மை தெரிந்தது. "மகரம்" கதையும் லொட்ஜ், எக்ஸில் கட்டுரையும் மற்றும் இளநீர், வாசலைத் தாண்டிய கடிதம், அரசியல் கட்டுரைகள் மிகச் சிறப்பானவை. தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தீபாவளி பற்றியும் ஏதும் சிறப்பம்சங்களை சேர்த்துக் கொண்டிருக்கலாம்....?

**அனார்,**
**சாய்ந்தமருது.**

அமுது
டிசம்பர் - '99
இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை



# நல்லதோர் வீணை செய்தே....

பிரதமஆசிரியர்:
**எஸ். மனோரஞ்சன்**
இணையாசிரியர்:
**து. பாஸ்கரன்**
ஆசிரிய பீட ஆலோசகர்:
**டி. பி. எஸ். ஜெயராஜ்**
கட்டுரையாசிரியர்:
**சி. சிவகுமார்**

ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
**எம். எச். எம். ஷம்ஸ்**
**எம். எஸ். எம். ஹிஷாம்**

பிரதம வடிவமைப்பாளர்:
**சி. முரளீதரன்**
ஓவியர், கார்டூனிஸ்ட்:
**இ. ப்ரகீத்**
பக்க வடிவமைப்பு (கணனி):
**ஜெரால்ட் எஸ். நடேசன்**
எழுத்தமைப்பு (கணனி):
**எஸ். எம். ப்ரேம்குமார்**

விளம்பர முகாமையாளர்:
**வருண மல்லவஆராச்சி**
தயாரிப்பு முகாமையாளர்:
**அடய அமரதாஸ**
அச்சமைப்பு முகாமையாளர்:
**ந. சற்குணநாதன்**
விற்பனை முகாமையாளர்:
**அனுர அபேரத்ன**

அச்சிட்டு வெளியிடுவோர்:
**அசோஸியேட்ட் நியூஸ் பேப்பர்ஸ்**
**ஒஃப் சிலோன் லிமிடெட்**
**இல. 35, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.**

Chief Editor:
**S. Manoranjan**
Associate Editor:
**T. Baskaran**
Editorial Consultant:
**D. B. S. Jeyaraj**
Features Editor:
**S. Sivakumar**

Other Editorial Staff:
**M.H.M. Shums**
**M.S.M. Hisam**

Chief Designer:
**C. Muralitharan**
Computer Graphic Artist/Cartoonist:
**P.R.B.Ekkneligoda**
Computer Page make-up:
**Gerald S. Nadesan**
Computer Typeset:
**S. M. Premkumar**

வீழ்ச்சி!

இதைக் கண்டு நாம் எல்லோருமே அஞ்சுவதுண்டு. இது பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கின்றோம். எக்காரணத்தைக் கொண்டும் வீழ்ந்துவிடாதிருக்க பகீரதப் பிரயத்தனம் செய்கிறோம். எம் சொந்த வாழ்வில் பொருளாதார நிலையில், கல்வியில், உடல் நலத்தில், மனோ நிலையில், எம் புகழில், எக்காரணம் கொண்டும் வீழ்ந்து விடுவதை நாம் எப்போதும் விரும்புவதில்லை. வீழ்ச்சி என்பது எமக்கு எதிரானவர்களிடமிருந்து தான் எப்போதும் வரும் என்றே நாம் சிந்திக்கின்றோம். எனவே எம்மோடு கருத்து முரண்பாடு உள்ளவர்களை பற்றி நாம் எச்சரிக்கை அடைகிறோம். அவர்கள் எம்மை வீழ்த்துவதற்கு முதல் அவர்களை நாம் வீழ்த்தி விட எத்தணிக்கிறோம். அதற்காக எவ்விதமான வழிவகைகளையும் பாவிக்க நாம் தயங்குவதில்லை. ஏனெனில் அவர்களை வீழ்த்தாவிட்டால் எமது வளர்ச்சி என்பது சாத்தியமில்லை என்று நாம் கருதுகிறோம். இது எமது தனிப்பட்ட வாழ்வில் மட்டுமல்ல சமூக வாழ்வு, எம் தொழிலோடு சார்ந்த விடயங்கள், ஏன்... அரசியலில் கூட இப்படித்தான் நடந்துகொள்ளுகிறோம். ஒரு தனி மனிதனின், ஒரு அமைப்பின், ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சியில் எப்போதும் எம் சார்ந்த அகவயமான காரணிகள் எவ்வளவு பங்களிப்புச் செய்கின்றனவோ அதே அளவுக்கு புறவயமான காரணிகளும் பங்களிப்பும் செய்கின்றன என்பதை நாம் மறுப்பதில்லை அல்லவா? அதே போல்தான் ஒரு தனி நபரின் ஒரு ஸ்தாபனத்தின், சமூகத்தின் வீழ்ச்சியின் போதும் தனியாக புறவயமான காரணிகள் மட்டும்தான் பங்களிபுச் செய்கின்றன என்பதல்ல. மாறாக எமது வீழ்ச்சிக்கு எம்மை அறியாமல் நாம், அதாவது எமக்கு உள்ளேயுள்ள அகவயமான காரணிகளும் பங்களிப்புச் செய்கின்றன என்பதை மறந்துவிடலாகாது. ஏனெனில் எமது வீழ்ச்சிக்கு வெளிச் சக்திகள் மட்டும்தான் காரணமென எண்ணி நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளை எமக்குள்ளே உருவாகி வருகின்ற பல மோசமான பண்புகள், தவறான நடைமுறைகள் என்பன எம்மால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு, தீர்க்கப்பட முடியாத அளவிற்கு வளர்ந்து வேரூன்றி விடும். அதன் பின் புறவயமான காரணிகள் எவ்வளவுதான் நமக்குச் சாதகமாக உருவாகினாலும், நமது அகச் சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கும் சீரழிவு நிலை என்பது எமது வீழ்ச்சியை தீர்மானிக்கும் பிரதான சக்தியாக மாறி விடும். அது ஒரு எல்லைதாண்டி சென்று விட்டதன் பின் எந்த ஒரு சக்தியாலும் எமது வீழ்ச்சியை தடுத்து நிறுத்திவிட முடியாது. மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிப்பதுதான் ஒரே வழியாகிவிடும்.

வேறு விமோசனம் இல்லை!

ஆ-ர்



www.tamilarangam.net


# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

**11%**

**செமிப்பு கணக்குகளுக்கு**

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK
**பிரமுக**
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
**வங்கி**
லிமிட்டட்
*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதான நகர்க் கிளை தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தேனீ

## துளித் துளியாய் சேர்த்ததெல்லாம்...

இனிப்புச் சுவையை இன்னும் இனிப்பாகச் சொல்ல தேன் என்று சொல்கிறோம். அந்தத் தேனைத் தரும் தேனீக்கள் மிகச் சிறிய பூச்சிகள். பல்லாயிரக் கணக்கான தேனீக்கள் பூவுக்கு பூ தாவி உணவருந்தி தம் வயிற்றில் சேர்த்து வரும் திரவம் பல நிறங்களை உள்ளடக்கிய ஒரு சுவை மிகுந்த பானமாக மாறுகிறது.

எல்லாவிதமான பூக்களிலிருந்தும் உணவருந்தும் இந்தத் தேனீக்கள் தனியாக ஒரு தேனீ மாத்திரம் உணவருந்துவதில்லை. ஏனைய தேனீக்களுக்கு தானறிந்த அந்தத் தேன் இருக்குமிடத்தைச் சொல்லும் முறை இரகசியமாகவே இருக்கிறது.

ஒரு தேனீ உணவருந்திவிட்டு வந்து ஏனைய தேனீக்களின் முன்பாக நடனமாடும். உணவு இருக்கும் தூரத்திற்கு ஏற்ப அந்த நடனம் வித்தியாசப்படும். அதைப் புரிந்து கொண்டு ஏனைய தேனீக்களும் அந்த இடத்தை நாடிச் செல்லும்.

பூக்களின் சாறும் தேனீ சுரக்கும் திரவமும் சேர்ந்து தேனாக உருவாகும் பானம் ஆயுர்வேத வைத்தியத்துறையில் ஆதிகாலம் தொட்டே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதோடு அதன் பயனும் கண்டறியப்பட்டுள்ளது.

இன்றும் ஆண்மைக் குறைவு நோய்க்கு ஆயுர்வேத வைத்தியத்தில் சிபார்சு செய்யும் சக்திமிக்க மருந்தாக தேன் திகழ்கிறது.

மலைகளிலும், மரங்களிலும் அடர்ந்த காடுகளுக்குள்ளும் கூடுகள் அமைத்து தமது வாழ்விடங்களை உருவாக்கிக் கொள்ளும் இந்தத் தேனீக்கள் சுறுசுறுப்பானவை. சோம்பேறித்தனம் என்பது மருந்துக்கும் கிடையாது.

தேனீக்கள் கூட்டமாக ஒன்றாகவே வாழ்கின்றன. தனியாக வாழும் சில இனங்களும் இருக்கின்றன.

எல்லாத் தேன் கூடுகளிலும் 3 வகையான தேனீக்கள் காணப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான தேனீக்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஒரு பெண் தேனீ. அதுதான் ராணி. அந்தக் கூட்டில் இருக்கும் எல்லாத் தேனீக்களுக்கும் தாய் அந்த ராணிதான்.

இந்த ராணித் தேனீ எந்த வேலையுமே செய்யாது. முட்டையிடுவது மட்டும்தான் இதன் வேலை. ஆனால் இதற்கு ஏனைய தேனீக்கள் ஊழியம் செய்து கொடுக்க வேண்டியது கட்டாயம்.

ஆண் தேனீக்கள் ஏனைய தேனீக்களை விடப் பெரியவை. வாட்டசாட்டமானவை. கட்டழகர்கள் மட்டுமல்லகதாநாயகர்களும். ஆனால் என்னதான் அழகும் வாட்டசாட்டமும் இருந்தாலும் ஆண் தேனீக்கள் சோம்பேறிகள். வேலையாட் தேனீக்கள் கொண்டு வரும் தேனை கள்ளமாக உறிஞ்சிக் குடித்துவிட்டு இருந்து விடுவது இவற்றின் தொழில்.

மூன்றாவது வகையினர், வேலையாட் தேனீக்கள். இவைகள் தமக்குள் வேலைகளைப் பிரித்துக் கொண்டு வேலை செய்யும்.

சிலது தேன் சேர்க்கும். சில ராணிக்குத் தீனி போடும். இன்னும் சில ராணி இடும் முட்டைகளைப் பாதுகாக்கும்.

சேர்த்து வைத்திருக்கும் தேனை யாரும் உடைத்துவிடாமல் பாதுகாக்க ஒரு பாதுகாப்புப் படையும் இருக்கும். இவை வெளியே நின்று தேன்கூட்டைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும். இன்னும் சில கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்யும் வேலையைச் செய்யும். இவை படு பிஸியாக வேலை செய்யும் பொழுதே ம்.... ம்... என்ற ஓசை நமக்கு கேட்கிறது.

ராணித்தேனீ தன் ஜோடியாக ஒரு ஆண் தேனீயை மாத்திரம் தேர்ந்தெடுத்து ஏனையவற்றுக்கு சர்வாதிகாரக் கட்டளை இடும். வேலையாட் தேனீக்கள் கட்டளையை நிறைவேற்ற ஓடிவரும். சோம்பேறிகளான ஆண் தேனீக்கள் எல்லாம் வேலையாட் தேனீக்களால் கொல்லப்பட்டு விடும்.

எல்லாத் தேன் கூட்டிலும் அதிகமான தேனீக்கள் வேலையாட் தேனீக்களே. தனியாக வேலை செய்வதுதான் இதன் பணி என்பதாலேயே இதற்கு வேலையாட் தேனீ என்ற பெயரும் வந்தது.

தேனைச் சேமிக்க வேலையாட் தேனீக்கள் கூடு கட்டியிருக்கும். அறுகோண வடிவில் அமைக்கப்பட்ட ராட்டுக்குள் தேனைச் சேமிக்கும். இந்த ராட்டுக்கள் மெழுகினால் பூசப்பட்டிருக்கும். தேனீக்களின் உணர் கொம்புகளால் மெழுகு அழக்காக்கப்படும்.

மிகக் கஷ்டப்பட்டு சேர்த்து வைக்கும் தேனை மனிதன் பணத்திற்காகவும், பல்வேறு தேவைகளுக்காகவும் அந்த வேலையாள் தேனீக்களுக்கே சூடு காட்டிவிட்டு தேன் கூட்டைக் கழற்றிக் கொண்டு போய்விடுகிறார்கள்.

ஒகஸ்ட் - செம்டெம்பர் மாதத்திலேயே அதிகமான தேன் கிடைக்கிறது. தேன் சேகரிப்பவர்கள் தேன் கூட்டுக்குக் கீழாக நெருப்பைக் காட்டியதும் தேனீக்கள் சிதறி ஓடும்.

இப்படிப் பெறப்பட்ட தேன் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. (கலப்படம் செய்துதான்) அதுமட்டுமன்றி காடழிப்பினாலும் தேனீக்கள் அழிந்து செல்கின்றன. மனிதனின் நடவடிக்கைகள் எந்த இனத்தைத் தான் விட்டுவைக்குமோ?

- எச். எஸ். டின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களை மந்தைகளாக்கும் அரசியல்

இந் நாட்டின் அரசியல் அதிகாரத்தின் தலைமைக்கான தேர்தல் சூடுபிடித்திருக்கிறது. சிங்கள மக்கள் வழமையான 'பச்சையா - நீலமா' என்ற கயிறிழுப்பில் ஈடுபட்டுள்ளனர். இத் தேர்தலில் தமிழ்த் தரப்பின் பங்களிப்பு யுத்தத்தின் பிரதிநிதித்துவம் மட்டுமா? அப்படித்தான் தெரிகிறது. அதைத்தான் இலங்கையின் தமிழ் பத்திரிகைத் துறையும் உறுதிப்படுத்த முனைகிறது.

இலங்கை ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் ஒரு வேற்று நிலத்தின் ஆட்சிக்கான தேர்தல், தமிழ்மக்களுடன்சம்பந்தமற்றதேர்தல் என்று கூறிக்கொள்ளும் இந்த யுத்தத்தின் தமிழ்த் தரப்பு இதே யுத்தத்திற்கூடாக தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் தனது சேதியினைச் சொல்ல விழைகின்றது

அச் சேதி, இருபுறத்துக்கும் வேறுவேறானதாக இருக்கிறது. அது தமிழ் மக்களுக்கு **'யுத்தத்தைத் தவிர வேறு மாற்று வழி எதையும் நாட வேண்டாம்'** என்ற வன்மையான உத்தரவாக அமைந்திருக்கும் அதே வேளை, சிங்கள மக்களுக்கோ **'உங்கள் அரசியலையும் எங்களால் ஆட்டிப்படைக்க முடியும்'** என்று கூறுவதாய் அமைந்துள்ளது.

தேர்தலில் பங்குபற்றாது இருந்து கொண்டே பங்குபற்றுவது என்பதற்கு உதாரணமே இது.

ஒரு தேர்தலில் எமது பங்களிப்பு நான்கு விதமாக இருக்கலாம்...

✍ அதில் நேரடியாகப் பங்குபற்றிக்கொண்டு அவ் விடயத்தில் ஈடுபாடு செலுத்துவது.
✍ பங்குபற்றிக்கொண்டு ஈடுபடாதிருப்பது.
✍ பங்குபற்றாமல் இருந்துகொண்டு ஈடுபடுவது.
✍ பங்குபற்றாதிருந்தபடியே ஈடுபடாமலுமிருப்பது.

இத் தேர்தலில் தமிழ் மக்களை, பங்குபற்றாதும் ஈடுபடாதும் இருக்கும்படியே அறிவுறுத்திக் கொண்டு, தாம் மட்டும் பங்குபற்றாதவாறு காட்டிக்கொண்டு ஈடுபடும் தந்திரமே தற்போது இந்த யுத்தத்தின் தமிழ்த் தரப்பால் கையாளப்படுகிறது.

அதாவது இத் தேர்தலில் ஏதாவது வகையில் ஈடுபாடு காட்டுபவர்கள் - அரசியல் கட்சிகளாகவிருந்தாலென்ன, வாக்குப் போடச் செல்லும் மக்களாக இருந்தாலென்ன - சகலரும் விடுதலைக்கு எதிரானவர்கள் எனக் கூறிக் கொண்டு, தாம் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையையும் அத் தேர்தலின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக செய்வது.

மக்களும் இத் தேர்தலில் பங்கு பற்றி ஒரு தாக்கத்தை வெளிப்படுத்தலாம். அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. ஒன்றில் தமது வாக்குகளை இரு பிரதான கட்சிகளிலும் ஒப்பீட்டளவில் சிறந்ததென அவர்கள் கருதும் ஒன்றிற்குப் போடலாம். அல்லது அவை தவிர்ந்த, தாம் விரும்பும் வேறொரு கட்சிக்குப் போடலாம். அல்லது தமது வாக்குகளை சிதைத்து எதிர்ப்பைத் தெரியப்படுத்தலாம்.

ஆனால் மக்களின் இச் சுதந்திரத்தை மறுத்து, அவர்களைப் பயமுறுத்தி, பங்குபற்றாது வைத்திருப்பதென்பது அடிப்படையிலே மக்களைத் தங்கள் றிமோட் கொன்ரோலரில் அசையும் றோபோக்களாக மட்டுமே வைத்திருக்க விரும்பும் சிந்தனையின் வெளிப்பாடே. இதுதான் தமிழ் அரசியலின் சாபக்கேடாகும்.

இந் நிலைமைக்கு, யுத்தத்தை எதிர்ப்பது போல் காண்பித்துக் கொண்டு யுத்தத்தை ஆதரிக்கும் சில பத்திரிகைகளின் தந்திரமும் ஒருபிரதானகாரணம். இவர்கள் யுத்தம் வேண்டாம் என்றே வெளிப் பார்வைக்கு கோஷிப்பார்கள். ஆனால் அது ஒருதரப்பை மட்டுமே வலியுறுத்துவதாயும் மறுதரப்பின் ஒவ்வொரு யுத்தச் செயற்பாட்டையும் பிரபல்யப்படுத்தி, உற்சாகப்படுத்திப் பாராட்டுவதாகவும் தான் அமைந்திருக்கும்.




நக்கீரன்

இதேவேளை இந்த யுத்தம் மக்கள் மீது செலுத்துகின்றபாரியநெருக்கடிகளைஉரிய முறையில் வெளிப்படுத்தவோ அதற்காகக் குரல் கொடுக்கவோ செய்யாது மாறாக அந் நெருக்கடியை செலுத்தியவர்கள் எந்தத் தரப்பினர் என்று பார்த்து அதற்கேற்பவே எழுதுவார்கள்.

இதற்கொரு நல்ல உதாரணம், தற்போதைய வன்னி யுத்தத்தால் வவுனியா மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை இந்தப் பத்திரிகைகள் வெளிப்படுத்திய விதம். வவுனியா மக்களை நகரைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டதை எந்தத் தமிழ்ப் பத்திரிகையாவது கண்டிக்க முன்வந்ததா?

மக்கள் பக்கத்தில் இருந்து பேசுவதாயின் வவுனியா மக்களுக்கு ஏற்பட்ட இப் பாரிய இடரை, அவர்களின் பரம்பரை பரம்பரையான சொத்துக்களுக்கு என்னாகுமோ என்று எழுந்த அச்சுறுத்தலை, அவர்களின் உயிர்களை, சிந்தனைகளை, கருத்துக்களை நினைத்த மாத்திரத்தில் துச்சமாக மாற்றி கட்டளைக்கு அடிபணிய வேண்டிய ஏவலாட்களின் தகுதிக்கு சிறுமைப் படுத்தியதை ஏன் இவை பேச முன்வரவில்லை. இப்படிச் செய்துகொண்டு தங்களை நடுநிலையானவர்களென்று எந்த முகத்தோடு சொல்லிக் கொள்கிறார்கள்?

முதுகெலும்புள்ள பத்திரிகைகளானால் இந்தக் கேள்விகளுக்கு அவர்களிடம் விடையிருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கட்டும்.

வவுனியா மக்களை இடம்பெயரக் கட்டளையிட்டது சரியா?

அவர்களின் உடமைகளுக்கும் உயிருக்கும் இது அச்சுறுத்தல் இல்லையா?

இது மனித உரிமை மீறல் இல்லையா? (அல்லது இப்படி அரசாங்கம் உத்தரவிட்டால் மட்டும்தான் மனித உரிமை மீறல், புலிகள் செய்தால் வேறு ஒன்றா...?)

இது மனித உரிமை மீறல் என்றால் மக்களின் பக்கத்தில் இருந்து பேச வேண்டிய பத்திரிகைகளாகிய நாம் இதற்கெதிராகக் குரல் கொடுத்தோமா?

இப் பத்திரிகைகள் அதை சித்தரித்த விதம் சரியாக தம் எஜமானனுக்கு முன் வாலைச் சுருட்டிக்கொண்டு குழைந்தபடி நிற்கும் விசுவாசமுள்ள நாயொன்றின் சுபாவமாகத்தான் தெரிகிறது.

புலிகள் வவுனியா மக்களை வெளியேறும்படி 'கட்டளை' இட்டதை இவர்கள் 'வேண்டுகோள்' எனஎழுதினர். உண்மையில் வேண்டுகோளுக்கும் கட்டளைக்கும் உள்ள வேறுபாடு தெரியாதா இவர்களுக்கு?

வேண்டுகோள் என்பது அதைச் செய்வதா வேண்டாமா என்பதை வேண்டப்பட்டவர்களது தீர்மானத்துக்கு விடுவது. ஆனால் செய்தேஆகவேண்டுமெனக் கூறப்படும் ஒரு விடயம் கட்டளையேயன்றி வேண்டுகோளல்ல. கட்டளையை வேண்டுகோளாக மாற்றிக் காண்பிப்பதில் பத்திரிகைகளின் மனச்சார்பு அம்பலப்பட்டதோடல்லாமல் மக்கள் சார்பு கைவிடப்பட்டும் போனது.

இதேபோல் இடம்பெயர்ந்த மக்கள் பல நாட்களாக அந்தரித்து அவதியுற்றபின் வவுனியாவில் தமது தாக்குதல் திட்டத்தை மாற்றிக்கொண்ட புலிகள் மக்களை மீண்டும் நகருக்கு வரலாமென 'அனுமதி' வழங்கியதை 'அழைப்பு' என்றுதலைப்பெழுதினர். வெற்றிலை பாக்கு வைத்து தமது கல்யாணம், பண்டிகைகளுக்கு அழைப்பதுபோல் ஒரு மங்கல அழைப்பாக ஏன் இவர்கள் இதை பொய்யாகக் குழைந்து சித்தரிக்கிறார்கள்?

யுத்தம் மட்டுமல்ல, யுத்த போதையை வியாபாரமாக்கும் இப் பத்திரிகைகளும் சேர்ந்தே மக்களை மந்தைகளாக்கி இருக்கின்றன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




## தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்
## - தந்தை செல்வா 1976ல்

மன விரிசல்களுக்கு விளைநிலமான இலங்கைத் தீவு மனவிரக்தியுற்ற மனிதர் நிறைந்த பூமியாக மாறிவிட்டது. இருதரப்பாரும் போர்தர்பாரில் வீர முழக்கமிடுகின்றனர். இளம் பருவத்தினரை பலியிடுகின்றனர். கள்ளமில்லா இளம் உள்ளங்களை பகை கொள்ளத் தூண்டுகின்றனர். வசந்த வாசலில் காலடி வைக்கும் இளம் மலர்கள் யுத்த சன்னத்தினால் சிதைக்கப்படுகின்றனர். வாழ்வை வளம்படுத்தும் இயற்கையின் கொடைகளை சின்னாபின்னப்படுத்துகின்றனர்.

கால காலமாக குடியிருந்த வீடுகள் அழிக்கப்பட்டு மண் மேடுகள் ஆகின்றன. சொந்த மண்ணை சொர்க்கமாய் நினைத்தவர்கள் அந்நிய நாடுகளில் மட்டுமன்றி சொந்த மண்ணிலும் அகதிகளாய் அல்லல்படுகின்றனர். கல்வியறிவு பெற்றவர்களைக் கொண்ட நாட்டில் உள்ள பாடசாலைகள் அகதி முகாம்களாகவும் இராணுவ முகாம்களாவும் மாற்றப்பட்டுள்ளன.

விருந்தளித்த வயல்வெளிகள் விதைப்பாரின்றி வெட்டை வெளிகளாகக் கிடக்கின்றன. சனங்கள் நிறையும் சாலைகள், சந்தைகள், சோலைகள் எல்லாமே உயிரைப் பறிக்கும் இடங்களாக மாறிவிட்டன.மரணபயம்தமிழ்மக்களைமட்டுமல்லாது சிங்களமக்களையும்,ஏன் நாட்டில் வாழும் அனைவரையும் கவ்விக் கொண்டுள்ளது.

இவ்வளவும் நடப்பதற்கு யார் காரணம். வாழ்வனுபவத்தில் தேர்ச்சி பெற்ற மனிதர்கள் இத்தீவில் இல்லையா? மனிதர் நாம் என்ற மனப்பக்குவம் நிறைந்தோர் இங்கு வாழவில்லையா? மானுடத்தை நேசிக்கும் மனிதர்களுக்கு இங்கு பஞ்சமா?

ஒரு சிலரின் அற்ப ஆசைகளினால் ஒரு நாட்டில் வாழும் முழு மக்களின் வாழ்வு சிதைப்படலாமா? ஒரு வீட்டில் பங்கு போட்டுக் குடியிருந்தவர்களிடையே பகைமையை ஏற்படுத்தலாமா? தலைவர்களின் சிந்தனையில் ஏற்பட்ட வக்கிர உணர்வு மக்களிடையே பரவி தீப்பிடித்ததினால் அழிந்தது சாதாரண மக்களின் வாழ்வுதான். தலைவர்கள் இன்னும் உயர உயர போய் பிரசங்கமும் பிரசாரமும் செய்கின்றனர். ஏழைகளின் பிள்ளைகளை யுத்தத்தின் வாயில் சோளம் பொரியாக்குகின்றனர்.

வெறும் இன உணர்வால் இதுநாள் வரை என்ன சாதித்தோம். அழிவும் துன்பமும் துயரமும்தான். அரை நூற்றாண்டுக்கு மேலாக வேற்றுமை பேசியே எம் சமூகத்தை சீரழித்து விட்டோம். பேச்சுக்கள் வார்த்தைகள் என்று கூடினதும் அறிக்கைகள் விட்டதும்தான் மிச்சம்.

ஏன் இது தீர்வு காணப்படாத பிரச்சினையாக தொடர்கின்றது. மக்கள் எப்போது யுத்தம் முடியும் என்று காத்து இருக்கையில் தொடர் யுத்தமாக காரணம் யாது? நாட்டின் தலைவர்கள், மக்கள் தலைவர்கள் இனப் பூசல் பிணக்குகளை பயன்படுத்தி பெரும் பணம் தேடியோர் யுத்தம் முடிவடைவதை விரும்பவில்லை. யுத்தம் முடிந்தால் எதைச் சாட்டி தாம் வயிறு வளர்ப்பது?

யுத்தத்தினால் எதிர்காலத்தில் பெரும் தலைவர்களாக திகழக்கூடிய சுயநலமற்ற இளைஞர்களே பலிகொள்ளப்படுகின்றனர். எதிர்காலத்தில் முதியவர்களாகி அவர்களின் நிழலில் இளைப்பாற வேண்டிய எங்களை பராமரிப்பவர்கள் யார்?

இரு இனத்திலும் நாட்டுப் பற்றும் பொது நலமும் உள்ள இளைஞர்களே அதிகளவில் பலியாகின்றனர். வெறும் சோற்றை தேடியுண்ணும் சுயநலமுள்ளவர்கள். அந்நிய நாடுகளில் அகதிகளாகவும் கூலிகளாகவும் வாழ்கின்றனர். தான் உண்டு. குடும்பம் உண்டு. நாடு என்னவாகப் போனாலும் நாம் மட்டும் வாழ்ந்தால் சரி என எண்ணுபவர்கள் மலிந்த தேசம். நாளை எப்படி தலை நிமிர முடியும்.

ஓயாத இவ்யுத்தத்தை நிறுத்தி சகலரும் உரிமையுடன் சுய கௌரவமுள்ள பிரசைகளாக எல்லோரும் வாழும் சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும். நேர்மையான சிந்தனையுடன் எமது பிரச்சினையை அணுகும் மூன்றாவது தரப்பை இருதரப்பாரும் ஏற்கவேண்டும். அம்மூன்றாவது தரப்பு ஒரு தனிப்பட்ட நாடாகவோ, உலக அமைப்பாகவோ கூட இருக்கலாம்.

நேர்மையுடன் அவர்களின் நியாய முடிவை ஏற்கும் மனப்பக்குவத்தை இருதரப்பாரும் வளர்த்துக்கொள்ளல் அவசியம். அற்ப குறுகிய இலாபத்துக்காக முழு நாட்டையும் சிதைக்கும் எண்ணத்தை அரசியல் செய்வோர் நிறுத்திக் கொள்வது அவசியமாகும்.

**- யாழினி**

"நீதியின் கதவுகள் திறக்கப்பட
அநீதியின் கதவுகள் உடைக்கப்பட வேண்டும்"

எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய இனிய தமிழ் அமுதே! எங்கள் மடலை பிரசுரிக்க முடியுமா?

உண்மை மறுக்கப்பட்டு தான்தோன்றித்தனங்கள் மலிந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில், கடந்த 25 வருட அரசியல் வரலாற்றை கண்ணால் கண்டு மனதுக்குள் எரிந்துகொண்டிருந்த எம் பிஞ்சு உள்ளங்களை பிரகாசிக்க நீ தரும் செய்திகளுக்கு இனிய வாழ்த்துக்கள்.

விடுதலை என்ற பேரில் தமிழ் இளைஞர்கள் ஒழித்து மறைக்கும் அதாவது கொலைகள், சித்திரவதைகள் போன்ற செயற்பாடுகளை மக்களின் மனக்கண்கள் கண்டு கதறுகின்றன. இனியும் கதறிக் கொண்டிருக்க மக்கள் தயார் இல்லை. அரசு என்ற நாகமும் புலி என்ற வேடனும் தயாரித்து வரும் கொலைக்கள மேடைகள் "உண்மை" என்ற மாபெரும் புரட்சியால் தூக்கியெறியப்பட்டு விடும்.

விடிவெள்ளிகளாகிய நாம் "கொலை கலாசார"த்திற்கு எதிராக மாபெரும் புரட்சி ஒன்றை கடந்த வருடம் ஆடி மாதம் 18ம் திகதியிலிருந்து ஆரம்பித்துள்ளோம். உனக்கும் உண்மைப் பணியில் ஒரு வயது. எமக்கும் உண்மைப் பயணத்தில் ஒரு வயது. ஆகவே நாம் நிச்சயம் வெல்வோம்.

நெருப்பில் பூத்த மலர்கள் - நாம்
புயலாகிப் பூமாலை கட்டுவோம்
கதிரவன் சிந்திய முத்துக்கள் - நாம்
கறுப்பு வானில் ஒளி வீசுவோம்

பூந்தளிர் மொட்டு எடுத்து புது புரட்சி பூணுவோம்
பூபாளராகம் தொட்டுபூவானவாழ்த்துகூறுவோம்.

புன்னகை நதியில் நீந்தி
புண்ணியம் செய்திடுவோம்
கண்ணிலொரு கள்ளமில்லாமல் -
எங்கள் உறவு காலத்தை வெல்லட்டும்.

மீண்டும் தொடர்வோம்.
**விடிவெள்ளிகள்**
**தியாகராஜா பார்கவி, யாழ்ப்பாணம்.**

www.tamilarangam.net



அரசியல் அரங்கம்

# பொது பொதுத்துப்போன
# பொதுவேட்பாளர்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தமிழ் அரசியல் வட்டாரங்களில் ஒரு சலசலப்பு. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஏதாவது பரபரப்பான ஒரு அரசியல் குழப்பத்தை உண்டு பண்ண முடியுமா என்ற முனைப்புத்தான் அது.

அரசாங்கத்தை, எதிர்க்கட்சியை, ராஜதந்திர வட்டாரங்களை, பத்திரிகைகளைசற்றேவிரிந்த கண்களுடன் தம்மைத் திரும்பிப்பார்க்க வைக்க, ஏதாவது செய்து காட்டுவது பயனுள்ளதெனத் தோன்றியிருக்க வேண்டும். அதனால் கிசுகிசுவாகி, பரபரப்பான வதந்தியாகி, பின் ஒரு எண்ணக் கருவாக அரசியல் களத்திற்கு வந்தது அந்த விடயம்.

அதுதான் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது என்ற முயற்சி!

மாறி மாறி பதவிக்கு வந்த இரண்டு அரசாங்கங்களும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவில்லை. எனவே நாம் தமிழர்களது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற கோஷத்துடன்தான் இந்தப் பொது வேட்பாளர் என்ற கருத்து வெளிப்பட்டது.

ஆனால் அதை - அந்த எதிர்ப்பை -ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்படுத்துவது எப்படி என்பதுதான் பிரச்சினை.

ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் ஒரேயொரு பிரதிநிதியை மட்டுமே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல். இத் தெரிவில் 'இது' அல்லது 'அது' என்பது தான் தெரிவாக இருக்க முடியுமேயன்றி 'பொது' என்பது ஒரு தெரிவாக அமைய முடியாது.

அதிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி, அல்லது ஐக்கிய தேசியக் கட்சி என்பதாகவுமன்றி சந்திரிகா குமாரதுங்க அல்லது ரணில் விக்கிரமசிங்க என்ற இருவரில் எவர் என்பதற்கான தெரிவாகவே யதார்த்தத்தில் இத் தேர்தல் இருக்கிறது. இவ் இருவர் தவிர தாம் விரும்பிய ஒரு மூன்றாம் நபரை தமிழ் மக்களென்ன, சிங்கள மக்கள்கூட ஜனாதிபதியாக்கி விட முடியாது என்பதுதான் இன்று இலங்கை அரசியலில் நிலவும் நிதர்சனநிலை. இந் நிலையில் தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டவென ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ் மக்களின் வாக்குகளை இவ் இருவருக்கும் வழங்காமல் விடுவதன் மூலம் இவர்கள் இருவரையும் தனிச் சிங்கள மக்களின் தலைவர்களாக ஆக்கிவிட்டு பின்னர் தமிழ் மக்கள் என்னத்தைச் சாதிக்க முடியும் என்பதே இப் பொது வேட்பாளர் முயற்சியைக் கண்ட எல்லோருக்கும் எழுந்த வினா.

**முதலில் இந்தப் பொது வேட்பாளர் என்ற கருத்து முளைத்தது ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வட்டாரத்திலிருந்துதான். ஆனால் இந்த எண்ணத்தால் கவரப்பட்ட டெலோ அமைப்போ அப்போது நிகழ்த்திய தனது மகாநாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பதைத் தீர்மானமாகவே எடுத்துக் கொண்டது. அதில் அது காட்டிய அவசரம் யாதென்றால் மற்றைய தமிழ்க் கட்சிகள் சார்பிலும் தானே அக் கருத்தை முன்வைக்க முனைந்ததுதான்.**


சுரேஷ்

ஆனால் அந்த வினாவுக்கு முகம்கொடுக்காது, இந்தத் தேர்தலொன்றும் எமது பிரச்சினையல்ல, தமிழ் மக்களின் அதிருப்தியை நாம் எப்படியும் தெரிவித்தாக வேண்டுமென்பதே எம் முன்னுள்ள பிரச்சினை என்று புறப்பட்டதுதான் பொது வேட்பாளர் தரப்பைச் சேர்ந்தவர்களது வாதம்.

இலக்கைத் தாக்கவேண்டுமென்பது விடயமல்ல எதிர்ப்பை தெரிவித்தால் மட்டும் போதும் என்று கூறி சூரியனை நோக்கி அம்பை எய்யும் பயனற்ற செயற்பாடாக இது அமைந்துவிடும் என்ற கவலை அவர்களுக்கு இருக்கவில்லை.

முதலில் இந்தப் பொது வேட்பாளர் என்ற கருத்து முளைத்தது ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வட்டாரத்திலிருந்துதான். ஆனால் இந்த எண்ணத்தால் கவரப்பட்ட டெலோ அமைப்போ அப்போது நிகழ்த்திய தனது மகாநாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பதைத் தீர்மானமாகவே எடுத்துக் கொண்டது. அதில் அது காட்டிய அவசரம் யாதென்றால் மற்றைய தமிழ்க் கட்சிகள் சார்பிலும் தானே அக் கருத்தை முன்வைக்க முனைந்ததுதான்.

அதனால் இக் கருத்துடன் உடன்படாத ஈ.பி.டி.பி. உடனடியாகவே இக் கருத்து டெலோவின் சொந்தக் கருத்தே எனத் தெரிவிப்பதற்கு வழி சமைத்தது.

இருப்பினும் பொது வேட்பாளர் என்பதில் உடன்பாடு கண்ட டெலோ, மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். தலைமைகள் புளொட், ஈரோஸ் ஆகிய அமைப்புக்களையும் தமது கருத்துப்பற்றி ஆராய அழைத்தன.

**அப்போதுதான் இக் கூட்டுக்கு வெளியே அவர்களது கண்கள் தாவின. தாவின மாத்திரத்தில் அவையும் கண்டன. 'கண்டேன் சீதையை' என்பதுபோல் தம் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு வந்து சொல்ல வல்ல அனுமானாக அவை கண்டது வேறு யாரையுமல்ல, குமார் பொன்னம்பலத்தைத் தான். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் மொத்த உறுப்பினர்களே குமார் ஒருவர்தான் என்று அக் கட்சியை நையாண்டி செய்து வந்த இந்தத் தமிழ்க் கட்சிகளுக்கு இப்போது அவரே ஒரேயொரு ஆபத்சகாயனாகத் தென்பட்டார்.**


குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






அடுத்து அப் பொது வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பதே கேள்வியாக எழுந்தது. டெலோ சார்பில் சிறீகாந்தாவை நிறுத்த, அவரை தமிழ் மக்களின் பொதுப் பிரதிநிதியாக ஏற்க மற்றையோருக்கு மனமில்லை.

இதேபோல் எந்தத் தமிழ்க் கட்சித் தலைவரையும் அங்கீகரிக்க மற்றவர்களுக்கு மனம் இருக்கவில்லை. அப்போதுதான் இக் கூட்டுக்கு வெளியே அவர்களது கண்கள் தாவின. தாவின மாத்திரத்தில் அவையும் கண்டன. **'கண்டேன் சீதையை'** என்பது போல் தம் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு வந்து சொல்ல வல்ல அனுமானாக அவை கண்டது வேறு யாரையுமல்ல, குமார் பொன்னம்பலத்தைத்தான்.

குமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இருந்த மொத்த உறுப்பினர்கள் இருவர் - ஒருவர் குமார், மற்றையவர் மோதிலால் நேரு. அதிலும் மோதிலால் நேரு கட்சியை விட்டு விலகியதோடு குமாரே ஏக உறுப்பினரும் ஏக தலைவருமானார்.

அத்தோடு எல்லாத் தீர்மானங்களும் ஒரேயொரு வாக்கினாலேயே நூற்றுக்கு நூறுவீதப் பெரும்பான்மையோடு நிறைவேறும் ஏக கட்சியாகவும் அவரது கட்சி ஆகிவிட்டது என்று நையாண்டி செய்து வந்த இந்தத் தமிழ்க் கட்சிகளுக்கு இப்போது அவரே ஒரேயொரு ஆபத்சகாயனாகத் தென்பட்டார்.

தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துவதாகக் கூறிக்கொண்ட இயக்கங்கள் எல்லாம் தம்முள் ஒரு தலைவரைக் கண்டு கொள்ள முடியாமல் தனது தயவை நாடி வந்திருப்பதைக் கண்ட குமாரும் தன்னை ஒரு பெரிய மனிதராக உணர்ந்தார்.

தேடி வந்த கட்சிகளுக்கு தனது பெறுமதியை மேலும் உணர்த்துவது நல்லதென எண்ணி அவர்களுக்கு நான்கு நிபந்தனைகளும் விதித்தார். அதாவது,

தமிழர்களுக்கான பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும்.

தேர்தலின் போது தமிழ் பகுதிகளில் இராணுவம் முகாம்களுக்குள் முடங்க வேண்டும்.

தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட வேண்டும்.

வாக்குச் சாவடிகளில் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் முகவர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

என்ற நிபந்தனைகளை விதித்துவிட்டு அவற்றை ஏற்றுக் கொண்டால், தான் இக் கோரிக்கையை பரிசீலிக்கிறேன் என்றார்.

எனினும் அவர் தனக்குச் சூட்டப்பட்ட இந்த மகுடத்தை ஏற்க வேறொரு அனுமதியும் தேவை என்பதை உள்ளூர உணர்ந்திருந்தார். அதனால், புலிகள் அனுமதித்தாலே நான் ஜனாதிபதித் தேர்தலில் நிற்பேன் என்று ஓர் அறிக்கை விடுத்தார்.

புலிகள் தன்னை அனுமதிக்க வேண்டும் என்பதே அவர் ஆதங்கமாக இருந்தது. ஆனால் புலிகளோ வேறுவிதமாகக் கருத்துத் தெரிவித்தனர். இது சிங்கள நாட்டின் ஜனாதிபதியைத் தெரிவு செய்கின்ற தேர்தல், இதில் தமிழீழ மக்கள் எந்த அக்கறையும் காட்டத் தேவையில்லை, என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

தனது எதிர்பார்ப்புக்கு மாறாக புலிகள் கருத்து இருக்கக் கண்டதும் குமார் பதறிவிட்டார்.

தானும் ஒரு துரோகியாக அடையாளப்படுத்தப்பட்டு விட்டுவிடுவாரோ என்ற பீதியுணர்வில் மறுபடி விழுந்தடித்து வேறோர் அறிக்கையை அவசர அவசரமாக விடுத்தார். 'நான் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவதை எதிர்க்கிறேன். நான் பொது வேட்பாளராக நிற்கப் போவதில்லை. இத் தேர்தலில் தமிழ் மக்களுக்குச் சம்பந்தமில்லை என உடனடியாக ஒரு குத்துக்கரணம் அடித்தார்.

ஆனால் இதே குமார்தான் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதும் திம்பு கோட்பாடுகளை ஏற்கும் வேட்பாளருக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என முந்திக்கொண்டு அறிக்கை விட்டவருமாவார்.

பாரிய தேகம் கொண்ட டைனோசர் போன்ற விலங்குகளுக்கு தன் சொந்த வாலில் பட்ட காயத்தைக் கூட உணர முடியாதாம். உடும்புக்கு தன் வாலைத் தானே கடித்தாலும் சுரணை இருக்காதாம். அதுபோல் சில அரசியல் வாதிகளும் தாமே சொன்னதை தாமே எதிர்க்கிறோம் என்ற எண்ணம்கூட இல்லாமல் நினைத்தபடி நினைத்த நேரத்தில் அறிக்கை விடுவார்கள். குமார் அதற்கு நல்ல உதாரணம்.

தான் சொன்னதைத் தானே மறுதலித்து, அதையே யாரோ செய்த துரோகச் செயல் போல் கண்டித்து இந்த அறிக்கையை விடுத்தார். அவர் போட்ட நிபந்தனைகளையும் அவரே தூக்கி வீசினார். அதெல்லாம் ஏதோ தான் கனவில் உளறிய வார்த்தைகளாக எவரும் கருதிக் கொள்ளட்டும் என்பதாகவே அதைப் பற்றி தானும் மறந்து மற்றையோரையும் மறக்கடிக்க முனைந்தார். அத்தோடு தன் தாள் பணிந்த இத் தமிழ்க் கட்சிகளையும் எத்தி உதறி விட்டார்.

இவ்வளவில், தாம் வரித்த திட்டப்படி தேர்தலில் நிறுத்த தமிழ் குடிமக்களில் ஒருவரைக்கூட கண்டுபிடிக்க முடியாத நிலையில் மெல்லவோ விழுங்கவோ என்று இத் தமிழ்க் கட்சிகள் மெல்லப் பின்வாங்கின. இதே வேளையில், சகலவித அரசியல் பித்தலாட்டங்களையும் பிய்த்து உதறி எழுதிவந்த தினமுரசு ஆசிரியர் அற்புதனுக்கு விழுந்த சூடு யாவரையும் கிலியிலாழ்த்தியது. எந்த ஒரு நகர்வின்போதும் காலடியில் கண்ணிவெடிகள் காத்திருக்கும் என்ற உணர்வு முள்ளந்தண்டு வழியாகப் பரவியது. அத்தோடு பொது வேட்பாளர் பற்றி ஒரு கதையும் இருக்கவில்லை. அதில் ஈடுபட்ட யாவரும் எதுவுமே நடவாதது போல் மௌனமாகி தத்தம் குகைகளுக்குள் முடங்கிக் கொண்டனர்.

பொது வேட்பாளர் புஸ்வாணமான கதை இதுதான். ●




அன்பை வெளிப்படுத்தும் முறைகளில் சக்திமிக்க செயற்பாடு முத்தம்தான். மௌனத்தைப் போல உயிரினங்களின் வலிமை மிக்க மற்றுமொரு வசீகரப் பொதுமொழி - முத்தம். இங்கே இருப்பது குழந்தைகளின் அன்பு முத்திரை. இனிவரும் பக்கங்களிலும் பல்வேறு முத்த வகைகளைப் பார்க்கவிருக்கிறீர்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 4வது ஜனாதிபதி தேர்தல்



இலங்கையின் 4வது ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்திருக்கிறது. பிரசார வேகம் வரலாற்றில் என்றும் இல்லாதபடி ஏவுகணை வீச்சுக்கள் போல் இருக்கிறது. இதில் பெரும் போட்டி இரண்டு வேட்பாளர்களுக்கிடையில்தான். ஒருவர் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. மற்றவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இலங்கையின் அரசியல் யதார்த்தத்தில் இவ்விருவரில் ஒருவர் தான் ஜனாதிபதியாக முடியும். ஏனைய வேட்பாளர்கள் எல்லோரும் ஒன்றில் இவ்விருவருக்கும் எதிரான கருத்துக்கள் கொண்டவர்களின் வாக்குகளை கைப்பற்றுவதை குறியாகக் கொண்டவர்கள்தான்.

அதிலும் குறிப்பாக ஜே. வி. பி. கட்சியைச் சேர்ந்த இடதுசாரி முன்னணி வேட்பாளர் நந்தன குணதிலக்கவும் ஜனநாயக கூட்டமைப்பின் வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார ஆகிய இருவருமே இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

பேராசிரியர் ஹரிஸ்சந்திர விஜேதுங்க என்பவர் அதிதீவிர சிங்கள பௌத்த கருத்தின் அடிப்படையிலமைந்த மக்களின் வாக்குகளை கோரி நிற்பவர்.

எது எப்படியிருப்பினும் தேர்தலென்று வரும்போது அதற்கான கட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு வாய்ப்பிருக்குமானால் தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரும் தேர்தலில் போட்டியிட முடியும்.

இரு பிரதான வேட்பாளர்களுக்கிடையில் இன்று நடக்கும் இக்கடும் போட்டியில் பதவியிலிருக்கும் ஜனாபதியைத் தோற்கடிக்க வேண்டும், தன்னிடம் பதவியைத் தரவேண்டும் என்று கோரி நிற்கும் ரணில் விக்கிரமசிங்க, தான்தான் இந்நாட்டிற்கு பொருத்தமான ஜனாதிபதி, தன்னிடம்தான் இன்று இந்நாடு முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய மந்திரக்



**சிங்கள இனவாத கருத்துக்களைப் பேசி சிங்கள மக்களின் வாக்குகளைக் கவரும் கலாசாரத்தை 1994ஆம் ஆண்டு தேர்தலில் மாற்றியமைத்த பெருமை சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சாரும். அன்றைய பொதுத் தேர்தலில் தமிழர்களின் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை. அதற்கு அரசியல் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் எனத் துணிந்து கூறியதன் மூலம் அமோக வெற்றி பெற்று இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தினார்.**

கோல் உண்டு, தன்னால்தான் அதனைச் செய்யவும் முடியும் என்கிறார்.

குறிப்பாக அவர் மூன்று விடயங்களையிட்டு தனது வாதங்களை முன்வைக்கிறார்.

ஒன்று, இனப்பிரச்சினையை தான் எப்படித் தீர்க்கப் போகிறார்? இரண்டாவது, இந்த நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு தனது திட்டமென்ன? மூன்றாவது, 21ம் நூற்றாண்டிற்குள் பிரவேசிக்கும் போது புதியதொரு சமூக அரசியல் கலாசாரத்தை தான் எந்த வகையில் உருவாக்கப் போகிறார்... என்பவைதான் அவை.

ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் வாதம், குறிப்பாக, கடந்த ஐந்தாண்டு கால பதவியில் தன்னால் முழுமையாக நிறைவேற்றப்பட முடியாமற் போன காரணங்களை முன்வைத்து, மீண்டும் அப்பதவியைத் தந்தால் தான் அவற்றை எப்படி நிறைவேற்றுவேன் என்பதையே தன் தேர்தல் பிரசாரத்தில் முன்வைக்கிறார்.

குறிப்பாக, தனது ஐந்தாண்டு காலத்துக்கான வேலைத் திட்டத்தில் முன்வைத்தபடி, இனப்பிரச்சினைக்கான தீர்வு எது? இந்நாட்டின் பொருளாதாரச் சுபீட்சத்தை எப்படிக் காண முடியும் என்பதையும், ஜனநாயகம் கருத்துச் சுதந்திரத்துடன் மனித உரிமைகளுக்கு மதிப்புக் கிடைக்கக் கூடிய விதமான, ஊழலும் பயங்கரவாதமும் அற்ற ஒரு சமூகச் சூழ்நிலையை எவ்வாறு உருவாக்கப் போகிறேன் என்பவையாகும்.

இரு வேட்பாளர்களும் முக்கியமாக எடுக்கும் விடயம், இனப்பிரச்சினைக்கான தீர்வை யாரால் திறம்பட முன்வைக்க முடியும் என்பதேயாகும். இதிலிருந்து இவ்விரு வேட்பாளர்களும் யுத்தத்தை விரும்பாத சிங்கள மக்களினதும் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களதும் வாக்குகளைப் பற்றி அதிக கவனமெடுப்பது புரிகிறது. இது ஒரு வரலாற்றுத் திருப்பம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், தேர்தல் காலங்கள் நெருங்குகின்ற போது யார் அதிகம் தமிழர்களுக்கு எதிரானவர்களெனக் காண்பித்து இனவாதத்தைக் கக்கி வாக்குகளைப் பெறும் அரசியல் மாறி யார் தமிழர்களோடு உள்ள பிரச்சினையை அதிகம் திறம்பட தீர்ப்பது என்ற நிலைக்கு இன்று மாறி வந்திருக்கிறது.

இதன்படி இத்தேர்தலில் விரும்பியோ விரும்பாமலோ இவ்விருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் இலங்கையின் சிறுபான்மை மக்கள் ஏதோ ஒரு வகைப் பொறுப்பை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அதாவது இருவரின் யார் இச் சிறுபான்மை இனப் பிரச்சினையில் அதிக அக்கறை காட்டுகிறவர்கள் என்பதில் எடை போட்டுப் பார்த்து வாக்களிக்க வேண்டிய நிலைக்கு சிறுபான்மை மக்களும் தள்ளிவிடப்பட்டுள்ளனர்.

ஒப்பீட்டளவில் பார்க்கும்போது நாட்டின் முக்கியமான தேர்தலின் போது சிங்கள இனவாத கருத்துக்களைப் பேசி சிங்கள மக்களின் வாக்குகளைக் கவரும் கலாசாரத்தை 1994ஆம் ஆண்டு தேர்தலில் மாற்றியமைத்த பெருமை சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சாரும். அன்றைய பொதுத் தேர்தலில் தமிழர்களின் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை. அதற்கு அரசியல் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் எனத் துணிந்து கூறியதன் மூலம் அமோக வெற்றி பெற்று இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தினார்.

எனினும் அது முறிவடைந்து யுத்தத்தில் முடிந்தது. யுத்தத்தின் மத்தியிலும் அரசியல் தீர்வு முயற்சியைத் தான் கைவிடவில்லை என்பதை நிரூபிக்க அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றை முன்வைத்தார். இதுவே இலங்கைச் சரித்திரத்தில் யாரினதும் அழுத்தமில்லாமல் ஒரு அரசாங்கத்தின் தலைமை சுயமாக முன்வைத்த அரசியல் தீர்வு என அரசியல் அவதானிகளால் கணிப்பிடப்பட்ட தீர்வுத் திட்டமுமாகும்.

எனினும் இத் திட்டத்தை அமுலாக்கக்கூடிய ஒத்துழைப்பு ஐக்கிய தேசியக் கட்சியால் வழங்கப்படாத நிலையில் அத் தீர்வுத் திட்டம் கிடப்பில் வைக்கப்பட்டதாக செயலாக்கத்தை எதிர்பார்த்து இன்னும் இருக்கிறது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குடுமிப்பிடிச் சண்டை



**ரணில் விக்கிரமசிங்கவின் வாதமெல்லாம் தான் பதவிக்கு வந்தால் புலிகளோடு பேசுவேன். பிரச்சினையைத் தீர்ப்பேன் என்பதாக இருக்கிறதே ஒழிய புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாக அவர் எதை முன்வைக்கப் போகிறார் என்பதைப் பற்றி எந்தவொரு அடிப்படையையும் இன்னும் வெளியிடவில்லை. அதே வேளை இவருடைய கடந்த கால அரசியல் வாழ்க்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக இவர் எடுத்த நிலைப்பாடுகள் மிக மிக மோசமானவை.**

இதுவரை நிறைவேற்ற முடியாமல் போன இத் தீர்வுத் திட்டத்தை எப்படி மீண்டும் பதவிக்கு வந்தால் மட்டும் நிறைவேற்றி விடப் போகிறார், இப்போது அதற்கு இருக்கும் தடைகள் அப்போதும் இருக்கத்தானே போகிறது, எப்படி அவற்றை வெற்றி கொள்ள இவரால் முடியப்போகிறது என்ற கேள்விகளே தமிழ் மக்களிடையே பலமாக உள்ளது. இதற்கு இவர் கொடுக்கக்கூடிய நம்பகரமான விடைதான் தமிழ் மக்களின் ஆதரவை வென்றெடுக்க உதவும்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை யாரை ஆதரிப்பது என்று வெளிப்படையாகச் சொல்வதில் தயக்கமான நிலையே காணப்படுகிறது. எனினும் அது சந்திரிகாவை ஆதரிப்பதா விடுவதா என்ற ஊசலாட்டமாகவே இருக்கிறதேயன்றி அதற்குப் பதிலாக ரணிலை ஆதரியுங்கள் என்று கூறத் துணியும் போக்கு அவர்களிடமில்லை.

ஈ.பி.டி.பி. வெளிப்படையாக சந்திரிகாவை ஆதரிக்கும்படி கூறுகிறது. தேர்தல் நெருங்க, நெருங்க ஏனைய தமிழ்க் கட்சிகள் யாரை ஆதரிப்பது என்று பட்டும் படாமலும் கோடிகாட்டலாம். சில கட்சிகள் மௌனமாகவே இருக்கலாம்.

அதேவேளை மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளில் இம்முறை ஒரு 'சென்ரிமென்டல்' உணர்வே செல்வாக்குச் செலுத்தப் போகிறது. மலையக மக்களின் நீண்ட நாள் தலைவராக விளங்கிய தொண்டமானின் மறைவு ஒரு வணக்கத்துடனான மரியாதை உணர்வை அவர்பால் ஏற்படுத்தியுள்ளது.

அதனால் அவரது கடைசி வாக்கியத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற எண்ணம் அபிப்பிராய பேதமற்று மலையக மக்களின் மனங்களில் நிறைந்துள்ளது. எனவே அவரது வேண்டுகோளை நிறைவேற்றும் கைங்கரியமாகவே மலையக மக்களின் வாக்களிப்பு இம்முறை நிகழவுள்ளது.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானகரமாக ஜனாதிபதி சந்திரிகாவையே ஆதரிக்கும்படி கூறியுள்ளது. அது அதிகாரத்தில் முஸ்லிம்களுக்கான பங்கை மையமாகக்கொண்டு இத் தீர்மானத்தை முன்வைத்துள்ளது.

முஸ்லிம் சமூகம் அதிகாரத்தில் பங்கு வகிக்கும் அரசியல் முறையை ஏற்றுச் செயற்படுவதால் அதில் அவர்களிடையே பாரிய மாறுபட்ட கருத்து எழ வாய்ப்பில்லை.

அத்தோடு வேறு எந்த வலுவான முஸ்லிம் கட்சியும் முஸ்லிம்களை ரணிலுக்கு வாக்களிக்கும்படி கூற முன்வரவும் இல்லை.

இந்நிலையில் ஐ.தே.க. வுடன் தொழில்ரீதியான தொடர்புடைய வர்த்தக முஸ்லிம் குழாமினரைத் தவிர்ந்த பொதுவான முஸ்லிம்களின் வாக்குகள் சந்திரிகாவுக்கு ஆதரவாக விழும் சாத்தியக்கூறே உள்ளதாக உணரமுடிகிறது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் இத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதே முடிவினை நிர்ணயிப்பதில் எழுந்துள்ள பிரதான கேள்வி.

1994 ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் நடந்துகொண்ட விதம் முன்னைய ஐ.தே.க. ஆட்சியைத் தூக்கி எறியும் அப்பட்டமான "எதிர்ப்பாகவே அமைந்திருந்தது. ஆனால் இப்போது சிங்கள மக்களுக்கு இந்த ஜனாதிபதி பதவிக்கு வந்த ஆரம்பத்தில் இருந்த பாரிய எதிர்பார்ப்புகள் நிறைவேறாத ஏமாற்றங்கள் இருந்தாலும், அது முன்னைய அரசாங்கத்துக்கு நடந்தது போன்ற பாரிய எதிர்ப்பின் வடிவத்தை எடுக்கவில்லை.

அதனால் இத் தேர்தலில் முன்னர் இருந்ததைவிட சந்திரிகாவுக்கு சிங்கள மக்களின் ஆதரவு குறையலாமென எதிர்பார்த்தாலும் அது அவரைத் தூக்கி வீசும் ஆவேசமாகி ஆட்சி மாற்றத்துக்கு வழிகோலும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் வாதமெல்லாம் தான் பதவிக்கு வந்தால் புலிகளோடு பேசுவேன். பிரச்சினையைத் தீர்ப்பேன் என்பதாக இருக்கிறதே ஒழிய புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாக அவர் எதை முன்வைக்கப் போகிறார் என்பதைப் பற்றி எந்தவொரு அடிப்படையையும் இன்னும் வெளியிடவில்லை.

அதேவேளை இவருடைய கடந்த கால அரசியல் வாழ்க்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக இவர் எடுத்த நிலைப்பாடுகள் மிக மிக மோசமானவை.

அதேவேளை சிங்கள மக்களையும் சிங்கள தீவிரவாதக் கருத்துக்களையும் திருப்திப்படுத்தும் முகமாக ரணில் விக்கிரசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியும் வீரவிதான மற்றும் பயங்கரவாதத் திற்கெதிரான தேசிய இயக்கம் போன்ற அதிதீவிர அமைப்புக் களுடன் உறவுகளையும் வைத்திருக்கிறார்.

இதனால் இவரால் எவ்வளவு தூரம் துணிந்து இப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க முடியும் என்ற சந்தேகம் பல மட்டங்களில் தொக்கி நிற்கிறது.

ஆனால், தான் ஜனாதிபதியாக வருவது இதுவே முதல் தடவை என்றும், எனவே இனிமேல்தான் தன்னால் துணிந்து நடவடிக்கை எடுக்க முடியும் என்று வாதிக்கிறார். இதை எவ்வளவு தூரம் தமிழ் - முஸ்லிம் மக்கள் நம்பப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

நாட்டின் பல விடயங்களை, தலைவிதியை தீர்மானிக்கும் பிரதான காரணியாக மாறிவிட்டுள்ள உள்நாட்டு யுத்தமானது ஒரு வியத்தகு கட்டத்தை அடைந்திருப்பதால் இப்பொழுது இவ்விரு வேட்பாளர்களின் பிரசாரங்களும் யுத்தத்தை மையப்படுத்தி அதி ஆக்ரோஷமாக நடைபெறுவது இங்கு தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இந்நிலையில் உக்கிரமடைந்துள்ள வன்னி யுத்தமும் அதில் அரசுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளும் அதனால் கிளந்துள்ள உணர்வலைகளும் தேர்தல் களத்திலும் பாதிப்பைச் செலுத்தக் கூடியதாக உள்ளது.

தேர்தலுக்கு முன் அங்கு ஏதும் பாரிய நிகழ்வுகள் ஏற்பட்டால் அவை ஏற்படுத்தும் கிலியுணர்வு இப் பொதுவான தேர்தல் போக்கில் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தி விடவும் வாய்ப்புள்ளது. •





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெளிவந்த வரதர்



## வரதராஜப் பெருமாள்!

இலங்கையின் முதலாவது தமிழ் மகாணசபையின் முதலமைச்சர்!

மிகப் பிரபல்யமாக அடிபட்ட பெயர்.

மாகாண சபை ஆட்சிக்காலத்தில் அடிக்கடி பத்திரிகைத் தலைப்புச் செய்திகளை ஆக்கிரமித்த பெயர்!

மாகாண சபையின் கடைசிக் காலத்தில் 'ஈழப் பிரகடனம்' என்று அன்றைய அரசினால் கூறப் பட்ட 19 அம்ச பிரகடனத்தை வெளியிட்டு பெரும் சர்ச்சைக்கு அடிகோலிய பெயர்.

மாகாண சபை கலைக்கப்பட்ட பின் உலகின் எந்த மூலையில் இருக்கிறார் என்று பத்திரிகை களின் தேடுதலுக்கு உள்ளான பெயர்.

இத் தேடுதலில் இந்தியாவின் பாதுகாப்பில் இருப்பதாகவும் இல்லையென்றும் சாதிப்பதும் மறுப்பதுமாக பலகாலம் பேசப்பட்டு வந்த பெயர்.

திடீரென இவ் வருட முற்பகுதியில் அவர் இலங்கை வந்துவிட்டதாகச் செய்திகள் பரவின. பத்திரிகைகள் வலைவீசித் தேடின. பல்வேறு ஊகங்களும் வதந்திகளும் உலவின. அரசாங் கத்தின் அழைப்பில் வந்ததாகக் கூறப்பட்டது. இந்தியாதான் ஏதோ முக்கிய பேச்சுவார்த் தைக்காக அனுப்பிவைத்ததாகப் பேசப்பட்டது. மீண்டும் மாகாண சபை முதலமைச்சராக்கப் படப் போகிறாரென்றனர் சிலர். வட-கிழக்கு கவர்னர் மாற்றப்பட்ட பொழுது சில அரசியல் பிரமுகர் கள் இவரை கவர்னராக்கும்படி கோரிக்கையும் விடுத்தனர். அதேவேளை இவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படப் போவதாக ஒரு வதந்தி பரவியது. தற்போது ஜனாதிபதி தேர்தல் அறி விக்கப்பட்டுள்ள வேளையில் இவர் ஜனாதிபதி யைச் சந்தித்ததாக வந்த செய்திகளை ஆதா ரமாக வைத்து இத் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு ஆதரவாக செயற்படப் போகிறாரெனவும் பேசப்பட்டது.

ஆனால்...

அவர் ஏன் வந்தார்? எங்கு இருந்தார்? என்ன செய்கிறார்? என்ற கேள்விகளுக்கு இதுவரை உண்மையான பதிலை யாருமே அறியவில்லை. ஏனெனில் அவரை இதுவரை எந்தப் பத்திரிகை யாளரும் சந்திக்க முடியவில்லை.

இப்படியிருக்கையில்தான்...

திடீரென வெளிவந்தார் வரதர்!

நவம்பர் 24ம் திகதி பத்திரிகையாளர் மாநா டொன்றை நடத்தி தனது வரவை வெளிப்படுத் தினார் அவர்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் தான் மீண் டும் அரசியல் செயற்பாடுகளில் இறங்கப் போ வதை அறிவித்த அவர் பரந்த அதிகாரப் பரவ லாக்கலுடன் கூடிய பிரதேச சுயாட்சியே இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இருக்க முடியுமென் றும் அதை மறுக்கும்வரை பிரிவினை வாதத் துக்கு ஆதரவு இருந்துகொண்டே இருக்குமென வும் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய ஈழப் பிரகடனம் என்ற விட யத்தை அவர் மறுத்தர். தான் அவ்வாறு பிரக டனப்படுத்தவில்லை யென்றும் தான் 19 அம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து அவ ற்றை நிறைவேற்றப்படவில்லையானால் ஈழம் உருவாகுவது தவிர்க்க இயலாததாகிவிடும் என்றே அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதா கக் கூறினார்.

இத் தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு,

'எனது கட்சி (ஈ.பி.ஆர்,எல்,எ.ஃ.ப்.) இதுபற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை. அது விரைவில் இம் முடிவை எடுக்கும். அதன் பின்னரே தெரி விக்க முடியும் என்றார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கான விடயத் தில் புலிகளுடன் பேசுவதற்கு முன்னர் இந்த நாட்டின் பிரதான கட்சிகளான பொதுஜன ஐக் கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முதலில் தம்மிடையே பேசி இணக்கம் கண்டு தமிழ் பேசும் மக்களுக்கு எதை வழங்குவது என்ற ஒரு பொது முடிவுக்கு வரவேண்டும் என் கிறார்.

வரதராஜப் பொருமாள் முதலமைச்சராக இரு ந்த வட-கிழக்கு மாகாண சபை ஆட்சியைக் கலைத்தது ஐக்கிய தேசியக் கட்சியே. அத் தோடு மாகாண சபையைக் கலைப்பதில் முதல மைச்சரின் சம்மதம் பெறப்பட வேண்டுமென்று இருந்த அதிகாரத்தையும் அது பறித்தது.

மேலும் ஈழப் பிரகடனம் செய்தார் என்ற குற் றச்சாட்டையும் அதுவே மேற்கொண்டது. அக் காலத்தில் அவரது ஆட்சியை முறியடிக்கும் நோக்கோடு அவரது கட்சியினரைத் தாக்கி, நிர் வாகத்தைச் செயலிழக்கச் செய்து வந்த விடு தலைப் புலிகளுக்கு ஆரம்பத்தில் தமது இரா ணுவ முகாம்களில் அபயம் கொடுத்ததும் பின் னர் பெருமளவு ஆயுதமும் பணமும் கொடுத்த தும் ஐ.தே.க.வே.

அதேவேளை, பொ.ஐ.மு. உடன் அத்தகைய பிரச்சினைகள் எதுவுமில்லை. எனவே, இடதுசா ரிப் போக்குடைய வரதருக்கு இடதுசாரிகளுட னான கூட்டாக அமைந்துள்ள பொ.ஐ.மு.வே கூடுதலான அனுகூலமாக அமைவதற்குச் சாத்தியமுள்ளது.

சந்திரிகா முன்வைத்துள்ள தீர்வுத் திட் டத்திற்கு இவர் சில ஆலோசனைகளைச் சமர் ப்பித்திருக்கிறார். அதனை முற்று முழுதாக நிராகரிக்கவில்லை, சாதகமானதாகவே நோக் குகிறார்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் வரதராஜப் பெருமாள் சந்திரிகாவின் பக்கத்தையே ஆதரிக்கக் கூடுமென அரசியல் வட்டாரங்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஜனாதிபதி தேர்தல் சூடுபிடித்துள்ளது. இந் நாட்டின் ஜனாதிபதி என்ற பதவியே எவ்வித அரசியல் தீர்மானத்துக்கும் அத்தியாவசியமான முதன்மை அதிகாரம். தமிழ் பேசும் மக்களுக்கு இங்கு அரசியல் தீர்வொன்றை ஈட்ட வேண்டுமானால் அதில் இந்த ஜனாதிபதிப் பதவியும் மிக முக்கியமான பொறுப்பை வகிக்கிறது. ஜனாதிபதியால் மட்டுமே எல்லாவற்றையும் தீர்மானித்து அமுலாக்கி விட முடியாதென்றாலும், அத் தீர்மானங்களில் ஜனாதிபதியின் பங்கு தவிர்க்க முடியாத உயர் இடத்தை வகிக்கிறது. அதேவேளை ஜனாதிபதி இல்லாமல் இத் தீர்மானங்களை நிறைவேற்றி அமுலாக்கிவிடவும் முடியாது என்ற முக்கியத்துவத்தை இது பெற்றுள்ளது. எனவே விரும்பியோ விரும்பாமலோ, இனப் பிரச்சினையில் ஜனாதிபதியானவர் அதி முக்கியத்துவம் வகிக்கும் ஒருவராகவே தற்போதைய அரசியல் அமைப்பின் மூலம் திகழ்கிறார். அதனால் அத்தகைய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் ஜனாதிபதித் தேர்தலும் இங்கே முக்கியமானதே.**

**இதுவரை இனப்பிரச்சினை தீரவில்லை. யுத்தம் ஓயவில்லை. தமிழ் மக்கள் மட்டுமல்ல, முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் யாவரும் நிம்மதியற்ற வாழ்க்கையையே வாழ்ந்தபடி இருக்கிறார்கள். இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதிமீது பாரிய எதிர்பார்ப்புக் காத்திருப்பது இயல்பு. அத்தகைய எதிர்பார்ப்புக்கு மத்தியில் நிகழும் இத் தேர்தலின் பின் அடுத்த ஒரு காலகட்டம் உருவாகக் காத்திருக்கிறது. அக் காலகட்டத்தின் திறவுகோலாக அமையும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் சாதகமான ஒரு அரசியல் செயற்பாட்டைச் செய்ய வேண்டுமானால் தமிழ் பேசும் மக்கள் என்ன செய்ய வேண்டும்? இதுகுறித்து அவர்கள் மத்தியிலுள்ள அரசியல் கட்சிகள் என்ன கருதுகின்றன என்பதை அறியும் நோக்கோடு தமிழ் அரசியல் கட்சிகளுடன் தொடர்புகொண்டபோது அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கே முன்வைக்கிறோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் எடுத்துள்ள நிலைப்பாடென்ன?

**பதில்:** சந்திரிகாவை ஆதரிப்பதே எமது நிலைப்பாடு.

**கேள்வி:** அதற்கான காரணம்?

**பதில்:** இத் தேர்தலில் சந்திரிகா, ரணில் ஆகிய இரண்டில் ஒருவரே ஜனாதிபதியாக முடியும் என்பது வெளிப்படை. எனவே நாம் இவ்விருவரில் யார் என்பதைத்தான் தெரிவு செய்ய வேண்டும். வேறு யாரையும் ஆதரிப்பதோ அல்லது பகிஷ்கரிப்பதோ எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடப் போதில்லை.

அடுத்ததாக நாம் எவ்வாறு விடயங்களைச் சாதிக்கப் போகிறோம் என்ற அணுகுமுறை முக்கியமானது. வெறுமனே எதிப்புக்களைத் தெரிவிப்பதென்பதைவிட நாம் ஆக்கபூர்வமான வகையில் அதிகாரத்தில் உள்ளவர்களோடு பேரம் பேசும் திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அத்தகைய ஒரு பேரத்துக்கு எம்மிடம் பலம் இருக்க வேண்டும். அத்தோடு அப் பேரத்துக்கு உகந்த ஆட்சியாளர்களை நாம் இனங் கண்டுகொள்ள வேண்டும்.

இதுவே நடைமுறை ரீதியான அரசியலாக இருக்க முடியும். நடைமுறையில் எப்படி நாம் ஒவ்வோர் அரசியல் நகர்வுகளையும் எதிர்கொள்வது என்பதில் துணிவும் தெளிவும் எமக்கு இருக்க வேண்டும்.

தற்போதைய தேர்தலில் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு நாம் வழங்கும் அரசியல் அழுத்தத்தினூடாக சில சாதகமான அரசியல் மாற்றங்களுக்கு வழியேற்படுத்த முனைகிறோம்.

அப்படி எமது அழுத்தத்தால் ஏற்படுத்தப்பட்டதே தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வட-கிழக்கு மாகாண சபையின் இடைக்கால ஆலோசனைச் சபை.

நாம் வெறுமனே ஒன்றுமில்லாமல் இருந்துகொண்டு இம் முடிவுகளை எடுக்கவில்லை. எம்மிடம் ஒரு வேலைத் திட்டம் உள்ளது. முதலில் மாகாணசபையை இயக்குவது, அடுத்து அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் இருதரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை அமுலுக்கு கொண்டு வருவது, இறுதியாக மற்றைய விடயங்களில் பேச்சுவார்த்தையை நடத்துவது என்பதுதான் எமது வேலைத் திட்டம்.

அதனடிப்படையில் நிகழ்ந்த முதற்படியே இடைக்கால ஆலோசனைச் சபை. எனவே எமது திட்டத்தை செயற்படுத்த உத்தரவாதம் தரும் தலைமையாக இனங்கண்டே சந்திரிகாவை இத் தேர்தலில் ஆதரிக்கிறோம்.

இதில் தமிழ்ப் பிரதேசத்தில் சந்திரிகாவுக்கு விழும் வாக்குகள் ஈ.பி.டி.பி.யின் வாக்குப் பலத்தை நிரூபிப்பதாய் அமைந்து அரசை வலியுறுத்தக்கூடிய பலத்தை எமக்குத் தரும்.

எமது வேலைத் திட்டத்தை செயற்படுத்த ஆதரவு தருவதானால் தமிழ் மக்கள் சந்திரிகாவை ஆதரிக்க வேண்டுமெனவே நாம் கேட்டுக்கொண்டுள்ளோம்.

**கேள்வி:** அவர் பதவிக்கு வந்த பின் உங்கள் நம்பிக்கையை நிறைவேற்றுவாரென்பதில் என்ன உத்தரவாதம்?

**பதில்:** எமது பலம்தான் உத்தரவாதம். நாம் எமது நிலையைப் பலப்படுத்திக் கொள்வதில்தான் எல்லாம் தங்கியுள்ளது. எனது நம்பிக்கை எனது பலத்திலிருந்துதான் எழுகிறது. பலஹீனமான நிலையில் இருந்துகொண்டு கேட்டால் எதுவும் நடவாது.

சந்திரிகாவின் வெற்றிக்குப் பின் எம்மால் பல விடயங்களைச் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அவர் தோற்றாலும் வரக்கூடிய ஜனாதிபதியுடன் எனது பலத்தில் நின்றுகொண்டு பேரம் பேச என்னால் முடியும்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் திரு. சம்பந்தன்



**கேள்வி:** ஜனாதிபதி தேர்தலில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** நாம் இன்னும் முடிவெடுக்கவில்லை. எமது கட்சி மிக விரைவில் அதுபற்றி தீர்மானம் எடுக்கவுள்ளது.

**கேள்வி:** சிலர் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாதென்கிறார்களே?

**பதில்:** நாம் என்ன செய்யவேண்டுமென எமது கட்சி தீர்மானித்த பின்னர்தான் எதையும் நான் தெரிவிக்க முடியும். தீர்மானித்ததும் எமது நிலைப்பாட்டை நாம் பத்திரிகைகளில் வெளிப்படுத்துவோம்.

## டெலோ தலைவர் திரு. அடைக்கலநாதன் (செல்வம்)

**கேள்வி:** இந்த ஜனாதிபதி தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** எமது கட்சி இது தொடர்பாக இன்னும் முடிவெடுக்கவில்லை. முடிவெடுத்த பின்னரே எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கலாம். என்னைப் பொறுத்தவரை இதுவரை ஆட்சியிலிருந்த இரண்டு கட்சிகளுமே இவ் இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனச் சிந்தித்ததாகத் தெரியவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பெருமளவான வாக்குகளை அளித்து பதவிக்கு கொண்டுவந்தனர். ஆனால் இனப் பிரச்சினை வளர்ந்து செல்வதாக உள்ளதேயொழிய தீரவில்லை. ஐ.தே.க. கூட அடுத்தமுறை பதவிக்கு வந்தால் சரியாகச் செயற்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. கடந்தகால ஐ.தே.க. ஆட்சி போலவே அது இப் பிரச்சினையை மோசமாகவும் கையாளலாம். எனவே இந்த இரண்டு கட்சிகளுக்கும் வாக்களிப்பதில் அர்த்தமில்லை. இதில் தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

**கேள்வி:** எவ்வாறு எதிர்ப்பைக் காட்டுவது?

**பதில்:** வாக்களிக்காது பகிஷ்கரிக்க வேண்டும். அல்லது வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்குகளைச் சேதமாக்க வேண்டும். வாக்களிக்காது விடுவது அவ் வாக்குகளை கள்ள வாக்குகளாக யாரும் உபயோகிக்க வழிவகுக்கலாம். அதனால் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்குகளைச் சிதைப்பதே சிறந்த வழி.

**கேள்வி:** அப்படியானால் சிதைந்த வாக்குகளின் எண்ணிக்கையைக் கொண்டு எதிர்ப்பின் அளவை எடைபோட்டுவிடலாம் என்கிறீர்களா?

**பதில்:** அப்படித்தான் எதிர்ப்பைக் காட்டலாம்.

**கேள்வி:** தமிழ்ப் பிரதேசங்களில் அப்படி சிதைத்து விழுந்த வாக்குகளைவிட செல்லுபடியான வாக்குகள் அதிகமாக விழுந்தால் அது தமிழ் மக்கள் எதிர்ப்புக் காட்டவில்லை என்பதையல்லவா வெளிக்காட்டுவதாய் அமைந்து விடும்.

**பதில்:** அவ்வாறான விளைவும் ஏற்படலாம்.

**கேள்வி:** தமிழ் மக்களை பகிஷ்கரிக்கவோ, வாக்குகளைச் சிதைக்கவோ கூறினால் தெரிவாகும் ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு பொறுப்புச் சொல்லத் தேவையில்லை என்றவாறு நடந்துகொள்ள வழிவகுக்காதா?

**பதில்:** இதுவரையும் பொறுப்புக் கூறுபவர்களாக அவர்கள் நடக்கவில்லை. தமிழ் மக்களில் வாக்கு கிடைக்கவில்லையென்பதற்காக இந்த நாட்டுக்கான ஒரு ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு நான் பொறுப்பல்ல என்று கூறவும் முடியாது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## இ. தொ. காங்கிரஸ் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்

**கேள்வி:** எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஆதரிப்பதே.

**கேள்வி:** ஏன் இவ்வாறு முடிவு செய்தீர்கள்?

**பதில்:** ஏனா? இது தலைவர் தொண்டமான் எடுத்த முடிவு! அவரது இறுதி ஆசையை நாம் நிறைவேற்றுவதுதான் எங்கள் கடமை. மலையக மக்கள், மறைந்த தலைவரின் வாக்கை நிறைவேற்றுவார்கள். இதில் நாம் எந்த மாற்று முடிவையும் எடுப்பதற்கில்லை. தலைவரின் முடிவுக்கு கட்டுப்படுவதே எமது கடமை. அதுதான் அவருக்குச் செய்யும் மரியாதை.

**கேள்வி:** இதில் உங்களுக்கான தனிப்பட்ட அபிப்பிராயம் எதுவும் இல்லையா?

**பதில்:** அவரது அபிப்பிராயமே எமது அபிப்பிராயமும். அதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது. அவரது முடிவுகள் மலையக மக்களுக்கு நன்மை பயப்பவையாகவும் விவேகமானவையாகவும் இருக்கும் என்பதில் எமக்கும் எமது மக்களுக்கும் எள்ளளவு சந்தேகமும் இல்லை. நாம் அவரது சொல்லை சிரமேற்கொண்டு அவரது இறுதி விருப்பத்தை நிறைவேற்றுவதையே கடமையாகக் கொண்டு செயற்படுகிறோம்.

**கேள்வி:** இந்த முடிவுக்கு மலையக மக்கள் கட்டுப்படுவார்களா?

**பதில்:** ஆம், நிச்சயமாக! தமது நேசத்துக்கும் மதிப்புக்குமுரிய நெடுநாள் தலைவரின் சொல்லை, விருப்பத்தை அவரின் மறைவின் பின் நிறைவேற்றுவதையே தமது கடப்பாடாக அவர்கள் கருதுவார்கள்.

**கேள்வி:** இந்த முடிவால் மலையக மக்களுக்கு நன்மைகள் உண்டா?

**பதில்:** நிறையவே உண்டு. மலையக மக்களின் நலன் குறித்த பல விடயங்களில் அவர் ஜனாதிபதியுடன் உடன்பாடு கண்டுகொண்டே இம் முடிவுக்கு வந்தார். மலையக மக்களின் அபிவிருத்திக்கான பல்வேறு திட்டங்களை வகுத்து பலவற்றை செயற்படுத்தியும் வந்தார். இவற்றிற்கு ஜனாதிபதியின் ஒத்துழைப்பை அவர் பெற்றிருந்தார்.

மலையக மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்தும் அவர் உடன்பாடு கண்டிருந்தார். காலமாகு முன்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இதுகுறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தின் கடைசிப்பகுதி இது:

மேன்மை தங்கிய ஜனாதிபதியவர்களே, மலையக மக்களின் கஷ்டங்களுக்கு மத்தியிலும், இந்நாட்டின் சமத்துவமான பிரஜைகளாக வாழவேண்டுமென்ற அவர்களின் நீண்ட காலக் கோரிக்கைக்கு மத்தியிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், இந்திய வம்சாவழி மக்கள் பேரணியும் தனது முழுமனதுடனான ஆதரவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உங்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளன.

உங்கள் அடுத்த பதவிக் காலத்தில் இந் நாட்டின் பிரதான பிரச்சினைகளை மட்டுமன்றி, நான் தங்களுக்கு 1999 ஒக்டோபர் 12ம் திகதி சமர்ப்பித்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்த மலையக மக்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளையும் தீர்க்க உரிய நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

உங்கள் வெற்றிக்கான வாழ்த்துக்களுடன்,

**உங்கள் உண்மையுள்ள**
**எஸ். தொண்டமான்**

கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சர்.

## ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன்

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** 1994ம் ஆண்டு நடந்த கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்கா, தான் பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக உறுதியளித்தார். அதனால் தமிழ் மக்களின் முழுமையான ஆதரவுடன் அவர் ஜனாதிபதியானார். எனது கட்சியுட்பட ஏறத்தாழ சகல தமிழ்க் கட்சிகளும் அத் தேர்தலில் அவருக்கே ஆதரவளித்தன. ஆனால் அவர் பதவிக்கு வந்தது இதுவரையிலான ஐந்து ஆண்டுகளில் எவ்விதத் தீர்வும் காணப்படவில்லை. அத்தோடு செம்மணிப் புதைகுழிகள் போன்ற விடயங்களும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இந்த ஜனாதிபதி, தீர்வுக்கான முயற்சிகளை எடுக்கவில்லையென்று கூற முடியாவிட்டாலும் தீர்வை ஏற்படுத்தவில்லை. ஆரம்பத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டது உண்மையே. ஆனால் அதைப் புலிகள் மீறிவிட்டார்கள் என்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு இந்த யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதற்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்திருப்பதும் உண்மை.

ஆனால் அத் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றத் தவறிவிட்டார். அதனை அமுல்படுத்த பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று காரணம் கூறலாம். அதுவும் உண்மைதான். ஆனாலும் அதனை அமுலாக்க அவர் வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும். சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியிருக்கலாம். பாராளுமன்றத்தை ஒரு சட்டவாக்கல் சபையாக மாற்றி இத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கலாம். இதற்குரிய அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் இருந்தும் அவர் செய்யவில்லை.

ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தாலும்கூட மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் இல்லாமல் எதையும் தீர்க்கப் போவதில்லை. இப்போது இவர்கள் வழங்கும் தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் பொய்யானவை.

இதில் யாராவது மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவத்தை ஏற்பதாக உறுதி கூறுவார்களாயின் ஓரளவு ஏற்று அவர்களுக்கு வாக்களிக்கலாம்.

**கேள்வி:** தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி சிலர் கூறுகிறார்களே...?

**பதில்:** பகிஷ்கரிப்பது முட்டாள்தனமானது. அது வாக்கு மோசடிக்கே வழிகோலும். தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். தங்கள் வாக்குகளை மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை ஏற்கும் ஒரு பிரதான கட்சி வேட்பாளருக்குப் போடலாம். அல்லது சேதமாக்கலாம்.

இல்லையேல் தமிழ் மக்களுக்காக எப்போதும் குரலெழுப்பி வந்த வாசுதேவ நாணயக்காரவுக்கு வழங்கலாம். அவரை ஜனாதிபதியாக்க முடியாதென்று தெரிந்தாலும் எமது வாக்குகள் வீணாகிப் போவதை விட அதைச் செய்வது உசிதம்.

**கேள்வி:** நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் பொதுவேட்பளர் ஒருவரை நிறுத்த முற்பட்டது ஏன்?

**பதில்:** நாம் அவ்வாறு தமிழ்க் கட்சிகளின் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவே முனைந்தோம். இத் தேர்தலில் அவ்வாறு ஒரு வேட்பாளரை நிறுத்தி வெற்றி பெற முடியாதென்பது தெரிந்த போதிலும் குறைந்தது



தமிழ் பேசும் மக்களின் ஒருமுகமான எதிர்ப்பை வெளிப்படுத்தி மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை வலியுறுத்துவதற்கு இத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ளலாம், அது அவசியமெனக் கருதினோம்.

ஆனால் அது சில தமிழ் அரசியல் கட்சிகளின் சில்லறைத் தனங்களால் சாத்தியப்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சந்திரிகாவினாலேயே முடியும்!



**அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்**

**தபால், தொலைத்தொடர்பு, ஊடகத்துறை பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்**

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** நாங்கள் இத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவையே முழுமையாக ஆதரிக்கிறோம்.

**கேள்வி:** இந் நிலைப்பாட்டை எடுக்கக் காரணமென்ன?

**பதில்:** இப்போதுள்ள சூழ்நிலையில் சந்திரிகா, ரணில் ஆகிய இருவரில் ஒருவர்தான் ஜனாதிபதியாக வர வாய்ப்பு உண்டு. இவர்கள் தவிர வேறு எவரும் ஜனாதிபதியாக வரமுடியாது. இதுவே நிதர்சனமான நிலை. எனவே இவ் இருவரில் எவர் சாதகமானவர் என்பதே கேள்வி.

ஜனாதிபதி சந்திரிகா, ஆகக் குறைந்தது ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தையாவது முன்வைத்தார். ஆனால் ரணில் எத்திட்டத்தையும் முன்வைக்கவே இல்லை. அதற்குப் பதிலாக சந்திரிகா வைத்த திட்டத்தையும் எதிர்த்து நிறைவேறாமல் முறியடிக்கவே முனைந்தார். அத் திட்டத்தில் ஏதாவது குறைகண்டால் அதைத் திருத்தி, செழுமைப்படுத்தி ஆக்கபூர்வமான ஒரு தீர்வை உருவாக்கக்கூட முனையவில்லை. இல்லையேல் ஒரு மாற்றுத் திட்டத்தையேனும் முன்வைக்கவில்லை. எதுவுமே கைவசம் இல்லாத ரணிலை எதை நம்பி ஆதரிப்பது?

~~ரணில் இப்போது தேர்தலுக்~~காக விடுதலைப் புலிகளோடு பேசுவேன் என்று சொல்லிக் கொள்கிறார். விடுதலைப் புலிகளோடு பேசுவது ஒன்றும் பெரிய விடயமில்லை. எல்லோரும்தான் புலிகளோடு பேசியுள்ளார்கள். ஜே.ஆர்., பிரேமதாசா, சந்திரிகா யாவரும் பேசித்தான் உள்ளார்கள். ரணிலும் பேசலாம். ஆனால் என்னத்தைக் கொடுக்கப் போகிறேன் என்று சொன்னாரா? எதையாவது கொடுக்கத் தயாராக இருந்தால் தானே பேசலாம். எந்தவொரு தீர்வையும் கொண்டிராமல் வெறுமனே புலிகளுடன் பேசுவேன் என்று கூறுவது மட்டும் தீர்வு எதையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை.

இடைக்கால நிர்வாக சபையை புலிகளிடம் கொடுக்கலாம் என்ற பொருத்தமில்லா ஒரு கருத்தை அவர் கூறுகிறார். இடைக்கால நிர்வாக சபையைப் புலிகள் ஏற்கெனவே நிராகரித்து விட்டார்கள். புதிய ஒரு தீர்வைத் தந்தால்தான், அதற்கான நிர்வாகத்தை வகுத்தால்தான் அதை அமுலாக்கும் செயற்பாட்டில் இடைக்கால நிர்வாக சபையொன்றை ஆலோசிக்கலாம். அதைவிடுத்து ஒன்றுமில்லாமல் இடைக்கால நிர்வாக சபை என்று எதைத்தான் கொடுப்பது?

அவர் எந்தவிதமாக தனது தீர்வு அமையும் என்றுகூடச் சொன்னாரா? புலிகளுடன் பேசுவதானால் வடக்கு கிழக்கை நிரந்தரமாக இணைத்துக் கொடுக்க அவர் தயாரா?

உண்மை என்னவென்றால் அவரால் எந்தவொரு தீர்வையும் வழங்க முடியாது. ஒருவேளை அவர் விரும்பினாலும்கூட அதைச் செய்ய அவரால் முடியாது. ஏனெனில் அவர் சார்ந்திருக்கும் சிங்கள தீவிரவாத அமைப்புகளும் பௌத்த பீடங்களும் எந்தவொரு அதிகப்படி~~யான உரிமைகளையும் வழங்க~~ அவரை அனுமதிக்கப் போவதில்லை.

ஆட்சிக்கு வந்தால், அடுத்த தேர்தலில் குறிவைத்தபடிதான் எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபடுவார். இச் சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்ப்பைச் சம்பாதித்து தனது வெற்றி வாய்ப்பை இழக்க அவர் துணியப் போவதில்லை.

அவரிடம் எந்தத் தீர்வும் இல்லை என்பதை இப்போதே நாம் காண்கிறோம். மீண்டும் யுத்தம் வெடித்து இதைவிட மும்முரமாகத் தொடரவே போகிறது. அப்போது மீண்டும் இவரே புலிகளைச் சாடிக்கொண்டு பலவேறு காரணங்களைக் கூறியபடி அடுத்த தேர்தல் வரையும் காலத்தை ஓட்டப் போகிறார். அவருக்கு இன்னுமொரு ஜனாதிபதிக் கால வாய்ப்பு இருப்பதால் அவர் அதிலும் குறியாக இருந்துகொண்டே தன் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் பதவிக்கு வந்தால் அவர் இனவாதிகளைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவருக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தல்மீது குறி இருக்கப் போவதில்லை. காரணம் இந் நாட்டில் ஒருவர் இருமுறைதான் ஜனாதிபதியாக இருக்க முடியுமென்பது அரசியல் யாப்பு விதி. எனவே தனது இறுதிப் பதவிக் காலத்தில் நினைத்த ஒரு நல்ல தீர்வை அமுல்படுத்திவிட்டுச் செல்லவே அவர் முற்படுவார்.

ஜே.ஆருக்கும் இறுதி ஜனாதிபதிக் கலமாக இருந்ததாலேயே எவரது எதிர்ப்பையும் மீறி 13ம் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற முடிந்தது.

அத்தோடு சந்திரிகாவின் தீர்வு ஆலோசனைகளை எந்தத் தமிழ்க் கட்சியும் நிராகரிக்கவில்லை. அவ~~ர்களுக்கு அதில் சில மாற்றங்களைச்~~ செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயங்கள் நிலவுகிறதேயன்றி பொதுவான அடிப்படையில் பல அம்சங்கள் ஏற்புடையனவாகவே இருக்கின்றன. அதனால் சந்திரிகா பதவிக்கு வந்தால் தன் கைவசம் உள்ள இத் திட்டத்தை முழுமைப் படுத்தி தீர்வு ஒன்றை ஈட்ட வாய்ப்புள்ளது.

**கேள்வி:** இப்போது அமுலாக்க முடியாது போன இந்தத் தீர்வுத் திட்டத்தை மீண்டும் பதவிக்கு வந்து எப்படி அமுலாக்க முடியும்?

**பதில்:** அதற்கான சாத்தியங்கள் உள்ளன. தற்போதே சில முக்கிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கட்சிமாறி வந்துள்ளனர். தேர்தலின் பின் சந்திரிகா மீண்டும் பதவிக்கு வந்ததும் இன்னும் பலர் அங்கிருந்து வரவுள்ளனர். இதன்மூலம் பாராளுமன்றத்தில் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றக் கூடிய பெரும்பான்மையை அவர் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. இது தவிர மேலும் பல வழிவகைகளும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. அவர் மறுமுறை ஆட்சிபீடம் ஏறினால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் தீர்மானகரமாக உள்ளார். அவராலேயே இதற்குத் தீர்வு காண முடியும்.

**கேள்வி:** சந்திரிகா ஜனாதிபதி யாவதில் முஸ்லிம் மக்களுக்கு என்ன நன்மை?

**பதில்:** ஜனாதிபதி சந்திரிகா முஸ்லிம் மக்களுக்கும் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் உள்ளனவென ஏற்றுக் கொண்டுள்ளார். அதற்கான எமது தீர்வு ஆலோசனைகளையும் அங்கீகரிப்பவராக உள்ளார். அத்தோடு அவர் ஒரு இனவாதமற்ற தலைவி. முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தும் எந்தக் கருத்தையும் அவர் கூறியதில்லை. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதெல்லாம் தனது நற்சுபாவத்தை நிரூபித்து உள்ளார்.

**கேள்வி:** இத் தேர்தலில் சந்திரிகாவே வெற்றிபெறுவாரென நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** ஆம், நிச்சயமாக! ●

**அட்டைப்பட விளக்கம்**

துர்க்கையம்மன் பூஜையின் இறுதி நாளன்று சுமங்கலிப் பெண்கள் ஒருவருக்கொருவர் குங்குமம் சூட்டும் பாரம்பரியச் சடங்கொன்று உண்டு. கடந்த ஒக்டோபர் 20ம் திகதி கல்கத்தாவில் நிகழ்ந்த இச் சடங்கில் சுமங்கலிப் பெண்ணொருத்திக்குத் திலகமிடும் மங்கலக் கோலமிது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அடை மழைக்குள் செத்த ஆட்டுக்குட்டி போல்

# அற்புதனின் மரணம்

மனோ

அற்புதன்!
நாரதர்!
நக்கீரன்!
இராஜதந்திரி!
ரசிகன்!
சிந்தியா!
புவனா!
அதிரடி ஜயாத்துரை!
காதுல பூ கந்தசாமி!

இத்தனை பெயர்களுக்குள்ளும் மறைந்திருந்து தமிழ் வாசக நெஞ்சங்களில் வாராவாரம் இன்ப அதிர்ச்சியை ஊட்டிக்கொண்டிருந்துவிட்டு அநாதையாய் அகாலமாய் மறைந்து போன அற்புதராஜா நடராஜா என்னும் அந்த அற்புதமான மனிதன் நான்.

இலங்கையின் தமிழ் பத்திரிகை உலகையே என் உள்ளங்கையில் ஆடவைத்தவன்.

முகம் தெரியாமலே லட்சக்கணக்கான வாசகர்களால் நேசிக்கப்பட்டவன்.

மக்களின் கருத்தே என் கருத்தென்பதாக இல்லாமல் என் கருத்தையே மக்களின் கருத்தாக ஆக்கும் ஒரு மந்திரசக்தியை எழுத்துலகில் உருவாக்கி ஒரு புதிய அத்தியாயத்தையே திறந்து விட்டவன்.

வாரம்தோறும் வியாழக்கிழமை வந்துவிட்டால் 'தினமுரசு' என்ற சொல் ஒலிக்காத தமிழ் வீடுகளே இல்லை என்ற நிலைக்கு, இந்நாட்டிலுள்ள வெவ்வேறு ரசனையுள்ள பல்வேறு ரக மனிதர்களையும் ஒருமுகமாக என் வாராந்தரிக்குக் காத்திருக்குமாறு ஈர்த்துக் கொண்டவன்.

எத்தனையோ தமிழ்ப் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் துறைப் பாடநெறிகளில் தேறியவர்கள், பல வருட அனுபவம் கொண்டவர்கள் இருந்தும் அவர்களால் எல்லாம் முடியாத பாரிய ஜனரஞ்சக எழுத்தாற்றல் திறனை எவ்வித பத்திரிகைப் பயிற்சிநெறியையும் பயிலாமல் எடுத்த எடுப்பிலேயே வெளிப்படுத்தி அனைவரையும் புறங்கையால் தள்ளிவிட்டுத் தனிப்பெரும் தலைவனாகத் திகழ்ந்தவன் நான்.

உலக நடப்பா, உள்நாட்டு விவகாரமா, உட்கட்சிப் பூசல்களா, அரசியல் களமா, யுத்த களமா, கிளுகிளு விவகாரமா, சினிமா சில்மிஷங்களா... எல்லாவற்றையுமே குழைத்து ஒரு கவளமாக தமிழ் வாசகர்களின் மூளைக்குள் ஊட்டிவிடும் திறமை அற்புதராஜா எனும் என்னிடம் இருந்தது.

ஒருபுறம் கடந்தகால ஆயுதமேந்திய போராளி, மறுபுறம் தமிழ்க் கட்சியொன்றின் அரசியல் பீடத்தவனாக பாராளுமன்ற உறுப்பினர், இன்னொரு புறம் இலங்கையில் அதிகூடிய, ஏன் உலகெங்குமுள்ள தமிழர்களால் அதிகம் விரும்பிப் படிக்கப்பட்ட பத்திரிகையின் பிரதம ஆசிரியர்.

ஒரு நாட்டிலுள்ள மொழிக் குழுவினரிடையே விகிதாசாரப்படி இத்தனை தொகையினரை - பலரை வெறுப்புடனேயாயினும் - வாசிக்க வைத்த பத்திரிகையாளன் வேறெங்கும் இருந்திருக்க முடியாது.

ஆனால்....

ஆனால்.... என்ன கொடுமை இது? தெருவில் சுடப்பட்டு கவனிக்காமல் விடப்பட்ட அற்ப பிராணி போல ஒரு அநாமதேயத்தின் மறைவாக நிகழ்ந்து அன்றோடு முடிந்தும் விட்டது என் பரிதாப மரணம்.

ஒருபுறம் தொண்டமான் மறைவு, மறுபுறம் நானும் எதிர்பார்த்திராத புலிகளின் வன்னித் தாக்குதல்... இந்த அடைமழைக்குள் என் இறப்பைக் கவனிக்க நீங்கள் யாருமில்லை....



எவருமே, எதுவுமே நிகழாதது போல தம் தம் பாட்டைப் பார்த்துக் கொண்டிருப்பதும் தாம் அன்போடு, ஆவலோடு அல்லது ஒருவித வெறியோடு வாங்கிப் படித்த பத்திரிகை ஆசிரியருக்கு இப்படி நேர்ந்துவிட்டதே என்ற கவலை கூட இல்லாமல் இருப்பதை நான் பார்த்து நெஞ்சம் குமுறுவதை யாராவது புரிந்துகொள்வீர்களா?

நடந்த எத்தனையோ கொலைகள் பற்றி எப்படி எப்படியெல்லாம் வியாக்கியானம் கொடுத்தேன்..... இந்த மக்கள் ஏன் என் கொலை பற்றி இப்படி மௌனமாக இருக்கிறார்கள்? நான் ஒரு பிரபலமான மனிதன். எனது இறப்பைப் பற்றி ஏனைய தமிழ்ப் பத்திரிகைகள் மிகமிகக் கொஞ்சமாகக் கதைத்துவிட்டு நிறுத்திவிட்டனவே




அட... ஒரு கண்டன அறிக்கை கூட விட முடியாதா? நான் ஒரு பா. மன்ற உறுப்பினன். ஏன் எந்தவொரு அரசியல் கட்சியும், தமிழ் கட்சிகள் கூட பா. மன்றத்தில் என் கொலை பற்றி பெரிதாக கேள்விகள் எழுப்பவில்லை?



இவ்வளவு ரசிகர்களைக் கொண்டிருந்த எனக்கு, என் பூதவுடல் அடக்கத்தின் போது ஏன் விரல் விட்டு எண்ணக்கூடிய பேர்கள் தான் வந்தார்கள்?

தங்கத்துரை, சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன், நீலன் போன்றோரின் மரணச் சடங்குகளில் பங்குபற்றிய அளவு மக்கள் கூட எனக்கு இல்லையா?

ஏன் அந்த மரணங்களுக்குக் கிடைத்த அளவு பிரசாரம் என் மரணத்துக்குக் கிடைக்கவில்லையே ஏன்?

எல்லாத் தமிழ் மக்களும் புலிகளை நேசிக்கிறார்கள் என்பதற்காக அது ஒரு வெல்லப்பட முடியாத சக்தி என்றுதானே நான் எழுதினேன். மற்றெல்லோரும் துரோகிகள் என்றுதானே நானும் கூறினேன். அட அந்தப் புலிகள் கூட ஒரு கண்டனச் செய்தி விட்டிருக்கக் கூடாதா?

புலிகள் என்னைக் கொன்றிருக்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். அட... அவர்கள் ஒரு மறுப்பறிக்கையாவது விட்டிருந்தால் நான் புலிகளுக்கு ஆதரவாக எழுதியதால் அரசாங்கமோ அல்லது எனது கட்சிக்குள்ளேயோ இருந்துதான் என்னைக் கொன்றிருப்பார்கள் என இந்த மக்கள் நம்புவார்களே!


பா. மன்ற உறுப்பினனாகவும், முக்கிய தமிழ் கட்சியின் உயர் பீடத்திலும் இருந்த நான் தெற்கிலிருந்து ஆபத்தில்லை... எனவே எனது பத்திரிகையில் புலிகளுக்காக எழுதினால் அவர்களிடமிருந்தும் தப்பிக் கொள்ளலாம் என்று இந்த நாட்டின் வெற்றிகரமான பத்திரிகையாளனுக்குரிய லட்சணத்தோடும் வீறாப்போடும் அவர்களை முடிந்தவரை போற்றி எழுதினேனே!

நான் தான் தவறு செய்துவிட்டேனோ? எனது எழுத்துக்களில் வீரப்பெருமிதங்களையும் உசாரேற்றும் ஞாயங்களையும் நேரத்துக்குத் தகுந்தபடி சொல்லி மக்களை சிந்தனையில் மொண்ணைகளாக்கியதால், என் சாவிலும் அவர்கள் அப்படியே மொண்ணைத்தனத்துடனிருக்கப் பழகிக் கொண்டார்களா?

என் திறமையனைத்தையும் பயன்படுத்தி வன்படுகொலை அரசியலுக்கு வக்காலத்து வாங்கியதற்கு என்னையே விலை கொடுத்து விட்டேனா? மக்களுக்கு அரசியல் ஞானம் கொடுக்கிறேன் என எண்ணிக்கொண்டு சுயமாக சிந்திக்க முடியாத மந்தைகள் ஆக்கி விட்டேனோ? ●

www.tamilarangam.net





## கேட்டுப் பார்!

விளக்கினில் விழுந்த விட்டிலாய்
உன் மனத் தொட்டிலில் வீழ்ந்தேன்
உறவென்னும் சிறகிழந்து
உணர்வெனும் உயிருடன்
ஊர்ந்து கொண்டிருக்கிறேன்

உன் இதயமெனும்
குளத்தின்
சகதியால் என்னைப் பூசிவிட்டாய்
நான் வாழ்வின் வாசமிழந்து
அகதியாய் அலைகிறேன்.

உன் விரல்களுக்குள் கிடக்கும்
மோதிரங்களை மட்டுமே
நீ வருடிக் கொள்கிறாய்
ஆனால்
உன்னுடன் ஒட்டிக்கொண்ட
என்னை மட்டும்
நகத் துண்டுகள் போல்
வெட்டியெறிகிறாய்.

கடலுக்குள் மட்டுந்தானா
முத்து கிடக்கிறது?
என் காதலுக்குள்ளும் கிடக்கிறது
கண்ணீர் முத்துக்கள்!

இரவோ பகலோ எல்லாம்
என் வாழ்க்கை போல்
இருண்டு போய்த்தான் கிடக்கிறது.

என்றோ ஒரு நாள்
என் சுவாசக் காற்றை
நீ தேடப் போகிறாய் - அன்று
என் கல்லறை அருகே அசையும்
புல்லிடம் கேட்டுப் பார்
அது சொல்லித் தரும்
காதலின் அர்த்தத்தை.

**ஆ. ஜென்சன் றொனால்ட்,**
**ஈச்சமோட்டை.**

## மீண்டும் வராவிடில்...!

கனவுகளைக் கலைக்க
என்னால் இனிமேலும் முடியாது.

உக்கிய உணர்வலைகளில் குடியிருந்து
எனதுயிரில் நூல் பிரித்துச் செல்லும்
முறுகிய இரவுகளாகவும்
'ஐடின்டி' அறவாய்ப் போன
அயலூர் வாசியாகவும்
நீண்டு கொண்டும்
இடைக்கிடை கனவுகளில் முடங்கவும்
முடங்கிய கனவுகளில் இடறி விழவும்
துக்குணியும் மனமில்லாமல்
இந்த உலகோடு வாழும் வாழ்க்கை.

குதிகாலில் வேர் பிடித்து
'கரன்ட்' ஒழுகும்
பிரதேச வெளிச்சங்களின் கீழ்
உனக்காக காத்துக் கொண்டிருக்க
என்னால் இனிமேலும் முடியாது.

முறிந்த இதயத்தோடு
தேசத்தின் முற்றுதலுக்காக
கனவுகளில் செல்கிறேன்
உன் நிழல் படிந்த இரவுகளின்
நிலவுகளைக் கற்பழிக்க
மீண்டும் வருவேனென்று
சொல்வதற்கில்லை.

**அப்துல் றசாக், அக்கரைப்பற்று.**

## உன்னத வாழ்வு

பாடும் இளம் பறவைகளும் - இனிய
பாவிசைக்கும் தென்றலதும்
தேடும் எம் சொந்தங்களும் - இத்
தேசத்தில், கல்லறைக்கா? எம்
ஊரும் இன்ப உறவுகளும்
ஊமையென அடங்கியதோ?
வேரும் விழுது விருட்சங்களும்
வேளை மறந்து தூங்கியதோ?

பாசக் கயிறுகள் அறுபட்டு
பாதி பாதியாய் பிரிந்திருந்தோம்
நேசக் கதவுகள் உடைந்த பின்னே
தேற்றுவார் இன்றிக் கதறுகிறோம்
நிலவும் வானும் மண்ணும்
நிம்மதி கேட்கும் பெருமூச்சும்
உலவும் நச்சுப் பாம்புகளால்
உருக்குலைந்து கெட்டிடுமோ? - நம்
உன்னத வாழ்வு வெறும் கனவோ?

**எம். சுயார்சன், கோண்டாவில்.**

## கிரகண நிலா



ஓ... நிலாவே...!
நீ
கடல் குளித்தெழுகையில்
கூந்தல் மேகங்களில்
நீர்த் திவலைகள்....

புன்னகைப் பூவினால்
ஆயிரமாயிரம் மனசுகளை
அம்பாகத் தைத்துவிட்டு
விண்ணில் நடந்தாயோ...
உன்னால் காயப்பட்ட
மனசுகளின் கண்ணீர்....

பூமியை உனக்கு
புருஷனாக்கியது...
அவன் நிழலால்
இன்று நீ
காயப்பட்டு
கரைந்து போகிறாய்....
அவன்
கிரகண மூர்க்கத்தில்
சப்பித் துப்பப்படுகிறாய்....

**என். கிராஞ்சியூரான்.**

## என்னவளே!

நான் எறிந்த
பார்வைப் பந்துகளை எவ்வளவு
உன்னிப்பாக தடுத்தாடினாய்
நீயும் ஒரு சச்சின்தான்!
'கண்ணெதிரே தோன்றினாள்' படம்
பாடம் கற்றுத் தந்தது உனக்கும்தான்!
சுந்தரர் நெறியை நீ விரும்பினாய்
அப்பர் நெறியை நான் விரும்பினேன் - ஆனால்
இருவருமே இப்போது குரு பூசையில்!

'ஐவா' வெற்றிக் கிண்ணம்போல் நீயும்
அவுஸ்திரேலிய அணியைப் போல் நானும்!
மகாவலி என்னும் மகாநதியாக நீயும்
உன்னில் அகப்பட்ட துரும்பாக நானும்!

ஷகியே! என் வேண்டுகோள் இதுதான்:
கார்ல் மாக்ஸ் நாற்காலியில்
உட்கார்ந்துகொண்டே உயிர் விட்ட மாதிரி
உன் இதயச் சோணைகளில் குந்திக்கொண்டே
என் இறுதிக் காற்றை நான் விட வேண்டும்!

**ஆ. கலாராஜன், களுவாஞ்சிக்குடி.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயிர் சில்லிட்டுப் போகிறது. கண்கள் மருண்டு போய் அப்படியே விழித்தபடியிருக்க மனம் அச்சத்தோடு படபடவெனஅடித்துக்கொள்கிறது. இருந்தாலும் இந்த அதிசயத்தை - இல்லை, அற்புதத்தை நாம் பய பக்தியோடு தரிசித்து எம் பாவ விமோசனத்துக்காகப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

நிச்சயமாக... சர்வ நிச்சயமாக இது ஒரு மகா சக்தியின் வேலைதான். சாமானிய மனிதர்களானால் வலி தாங்காமல் உயிர் மடிந்திருப்பர்.

ஏதோ ஒரு தெய்வீக சக்தி இவர்களின் உடலுள் ஒரு மின்சாரம் போல் ஊடுருவி இந்த அசாத்திய வல்லமையை இவர்களுக்கு வழங்கி இவர்களை ஒரு கேடயமாகக் காத்து நிற்கிறது... இப்படித்தான் இதையிட்டு எல்லோரும் எண்ணிக் கொள்கிறோம்.

ஆம்! இங்கே நிகழ்வது ஒரு சித்திரவதை. தன்னைத்தானே வதைத்துக் கொள்ளும் அதி பயங்கரமான சித்திரவதை. இது ஒரு உணர்ச்சிகரமான பக்தி வதை.

இங்கே மனிதர்கள் மனிதர்களாக இல்லை. அவர்கள் ஏதோ போதை நிலைக்கு உள்ளாகி விட்ட, பக்தி வெறியில் தலை கிறங்கிய, தம்மையும் மறந்த, தம் செயலைத் தாமே உணராத உரு வேறிய பித்தர்களைப் போல் இருக்கிறார்கள். தம்மைத் தாமே வதைத்து அந்த வதையை ரசிக்கிறார்கள்.


அவர்கள் தங்கள் நாக்கை கம்பியால் குத்திக்கொண்டு விகாரமாகச் சிரிக்கிறார்கள். ஒரு கன்னத்தில் வேலைச் சொருகி மறு கன்னத்தில் வெளியே நீட்டச் செய்து, ஏதோ தோடு குத்திக்



# அரோஹரா...! அரோஹரா...!

கொண்டது போல அல்லது மூக்குத்தி குத்திக் கொண்டது போல வேடிக்கை காட்டுகிறார்கள். முதுகுகளில் ஈட்டிகளைக் குத்திக்கொண்டு பழங்களைத் தைத்துக்கொண்டு, ஒரு முள்ளம் பன்றி போல வலம் வருகிறார்கள். ஆணிகளால் படுக்கை செய்து அதில் ஒய்யாரமாகச் சாய்ந்து படுக்கிறார்கள்.

கொக்கிகளால் முதுகுத் தோலைக் குத்திக் கொழுவி வாகனத்தில் உயரே கட்டப்பட்ட கம்பத்திலிருந்து பறவைக் காவடியாய்த் தொங்குகிறார்கள். போதாதற்கு மற்றொரு நபர் அக்கம்பத்தை காலால் மிதித்து ஆட்டிக் குலுக்குகிறான். இன்னும் சிலர் கொதிக்கும் செந்தணலில் வெறுங்காலால் நடந்தபடி தீ மிதித்துக் காட்டுகிறார்கள்.
சிலர் சுடு சட்டியை வாயால் ஏந்தி நிற்கிறார்கள்.



**உயிர் சில்லிட்டுப் போகிறது. கண்கள் மருண்டு போய் அப்படியே விழித்தபடியிருக்க மனம் அச்சத்தோடு படபடவென அடித்துக் கொள்கிறது. இருந்தாலும் இந்த அதிசயத்தை - இல்லை, அற்புதத்தை நாம் பயபக்தியோடு தரிசித்து எம் பாவ விமோசனத்துக்காகப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.**

**நிச்சயமாக... சர்வ நிச்சயமாக இது ஒரு மகா சக்தியின் வேலைதான். சாமானிய மனிதர்களானால் வலி தாங்காமல் உயிர் மடிந்திருப்பர்.**

இப்படியே இன்னும் எத்தனையோ விதமான நம்பற்கரிய செயல்கள். மயிர்க்கூச்செறியும் அடிமனதில் வலி கிளம்பும் சகிக்க வொண்ணாச் சுய சித்திரவதைகள். இவற்றை நாம் தெய்வ ஆலயங்களில், சந்நிதானங்களில், பிரார்த்தனைக் கூடங்களில், திருவிழாக்களில் பல முறை கண்டுள்ளோம்.

இவையெல்லாம் என்ன? ஏன் இவர்கள் இப்படி? என்ன இதனால் ஈடேற்றப் போகிறார்கள்?


இது இப்போது மட்டுமல்ல பண்டைய காலத்திலிருந்தே கையாளப்படும் பழக்கம். எம் உடலை நாமே வருத்திக் கொள்வதனால், நாம் பாவ விமோசனம் அடையலாம். அல்லது எமக்கு வேண்டிய எதையாவது ஈட்டிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கைதான் இதன் அடிப்படை.

அர்ச்சுனன் ஒற்றைக்காலில் நின்று தவம் புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்றதாக மகாபாரதக் கதையில் வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> **ஆரம்பத்தில் இச்சுயவதை கூட ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கையாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் அது தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் பிரசாரமாக மாறி பணம் சம்பாதிக்கும் வியாபாரமாகவும் ஆகிவிட்டது. இதனால் "பக்தி" தனிப்பட்ட மனிதனின் அந்தரங்க விடயமாகவன்றி ஒரு பகிரங்க வியாபாரத்தின் மூலதனமாக மாறிவிட்டது. ஆனால் இவற்றையெல்லாம் இவர்கள் எப்படிச் செய்கிறார்கள்? எங்களால் இது முடியுமா என நாம் இவர்களைப் பார்த்து அஞ்சி வியக்கிறோம். ஆனால் உண்மையில் இவற்றை பயபக்தியால் மட்டுமே செய்ய முடியும் என்பதல்ல.**

# பக்தி வதை



விஸ்வாமித்திரர் முடியைத் திரியாக்கி விளக்கெரித்ததாகப் புராணக் கதை சொல்கிறது.

இராவணன் தன் ஒரு தலையை கையோடு அறுத்து வீணை மீட்டி சிவன் மனதை இளக்கி கயிலை மலையைப் பெயர்த்து வந்ததாக இராமாயணக் கதை கூறுகிறது.

இதுபோன்ற நம்ப முடியாத ஆனால் நமக்கு சுய வதையில் நம்பிக்கை ஊட்டும் எண்ணிறந்த பழம் புராண இலக்கியக் கதைகள் யாவும் இத்தகைய நம்பிக்கையிலேயே தோன்றின. ஏற்கப்பட்டன. இவை இந்து மதத்தில் மட்டுமன்றி ஐரோப்பிய மதங்களிலும் வேரூன்றியிருந்தன.

இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்துவ மட ஆலயங்களில் மத குருமார் தமது உணர்ச்சிகளை கட்டுப்படுத்த தம்மைத் தாமே சவுக்கால் அடித்துக் கொள்ளும் பழக்கம் இருந்தது.

கார்மல் கன்னியாஸ்திரிகள் (Carmel Nuns) பாலுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த தமக்குத் தாமே தண்டனை கொடுத்துக் கொள்வதும் வழக்கிலிருந்தது.

இந்தச் "சுயவதை" "புலனடக்கம்" பற்றிய ஒரு கருத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்தது. அதாவது ஆசைதான் பாவத்திற்குக் காரணம், ஆசையைத் தூண்டுவன புலன்கள். ஆதலால் இப்புலன்களைக் கட்டுப்படுத்தினால் பாவ விமோசனம் பெறலாம் என்ற எண்ணத்தில் இது நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இக்காலத்திலேயே கன்னித்தன்மை பற்றிய கருத்துருவமும் தோன்றியது. அதனால் அக்காலத்தில் பெண் உறுப்பினை இரும்புக் கவசத்தால் மூடிப் பூட்டுப் போடும் வழக்கமும் ஐரோப்பாவில் இருந்தது.

இத்தகைய முன்னைய கால கருத்துருவத்தின் வழிவந்த ஒரு செயற்பாடே இன்றும் அரங்கேறி வருகிறது.

ஆரம்பத்தில் இச்சுயவதை கூட ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கையாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் அது தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் பிரசாரமாக மாறி பணம் சம்பாதிக்கும் வியாபார்மாகவும் ஆகிவிட்டது.

இதனால் "பக்தி" என்பது தனிப்பட்ட மனிதனின் அந்தரங்க விடயமாகவன்றி ஒரு பகிரங்க வியாபாரத்தின் மூலதனமாக மாறிவிட்டது.

ஆனால் இவற்றையெல்லாம் இவர்கள் எப்படிச் செய்கிறார்கள்? எங்களால் இது முடியுமா என நாம் இவர்களைப் பார்த்து அஞ்சி வியக்கிறோம்.

ஆனால், இவற்றை பயபக்தியால் மட்டுமே செய்ய முடியும் என்பதல்ல. தம்மை மறந்த ஒரு போதை நிலையில் யாரும் செய்யலாம். மது போதையிலும், போதை வஸ்து மயக்கத்திலும் இதை ஒருவன் செய்ய முடியும். அல்லது மனோதத்துவ ரீதியில் அருட்டப்பட்ட ஒருவராலும் இதை செய்ய முடியும்.

ஒரு விடயத்தை திரும்பத் திரும்பச் செய்வதால், அல்லது ஒரே வகையான தாளச் சத்தத்தில் எல்லாவற்றையும் மறந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஆடுவதால் இவர்களது மனம் ஒரு வகை போதை நிலையை அடைகிறது. அது அவர்களை பயம், வலி என்பவற்றைக் கடந்த மயக்க நிலையில் செயற்பட வைக்கிறது.

நிமோனியாக் காய்ச்சலில் பலர் உளறுவதைப் போன்றே இங்கும் மருள் வந்து உளறுகின்றனர். ஒரு வகை நரம்புத் தளர்ச்சி நிலைக்கும் உள்ளாகின்றனர். இச்செயல்களைச் செய்வதற்கு எவ்வகையான மனோபலத்தையும் ஈட்டுவதற்குப் பதிலாக மன மயக்கத்தையே உண்மையில் இவர்கள் ஈட்டுகின்றார்கள்.

இச்செயல்கள் பார்வைக்குப் பயங்கரமாகத் தோன்றினாலும், உட்சூட்சுமத்தை அறிந்து கொண்டால் அவை பிறராலும் "பக்தி" இன்றியும் செய்யக் கூடியவையே.

நாவில் கம்பியால் துளைப்பது, கன்னங்களினூடாக கம்பியைச் செலுத்துவது போன்றவை, நாம் காது, மூக்கு குத்திக் கொள்வதைப் போன்றவையே. அவற்றில் வலி தெரிந்தாலும் ஆபத்தானவையல்ல.


சூடேற்றிய கம்பிகளால் துளையிடும் போது, வலி குறைவு. அத்தோடு மனதை ஜெபம், உருவாட்டம் போன்றவற்றால் தன்னை மறந்த போதை நிலைக்கு ஏற்றிவிட்ட நிலையில் பயம், வலி என்பன உணரப்படுவதில்லை.

மெல்லிய தோல் கொண்ட பகுதிகளில் ஏற்படும் இக்காயங்கள் விரைவில் ஆறிவிடுவன.

பல தடவைகள் திரும்பத் திரும்ப இவ்வாறு செய்து வருகையில் ஒருவருக்கு அப்பகுதிகள் நோவிழந்த பகுதிகளாக மாறி, இவை சுலபமாக ஒரு வித்தை காட்டுவதைப் போலச் செய்யக் கூடியதாகி விடுகின்றன.

**நாவில் கம்பியால் துளைப்பது, கன்னங்களினூடாக கம்பியைச் செலுத்துவது போன்றவை, நாம் காது, மூக்கு குத்திக் கொள்வதைப் போன்றவையே. அவற்றில் வலி தெரிந்தாலும் ஆபத்தானவையல்ல. சூடேற்றிய கம்பிகளால் துளையிடும் போது, வலி குறைவு. அத்தோடு மனதை ஜெபம், உருவாட்டம் போன்றவற்றால் தன்னை மறந்த போதை நிலைக்கு ஏற்றிவிட்ட நிலையில் பயம், வலி என்பன உணரப்படுவதில்லை.**

பறவைக் காவடி, தோலில் பழங்களைத் தைப்பதும், ஈட்டிகளைச் சொருகுவதும் கூட இவ்வாறுதான். அவை மேற்தோலுக்குள் மட்டும் சொருகப்படுவதால் ஆபத்தின்றி அதிக வலியின்றி செய்யக்கூடியவையாகின்றன. ஆனால் பார்வைக்கு சகிக்க முடியாத சித்திரவதையாகக் காட்சி தருகின்றன. ஆணிமேல் படுப்பதென்பதில் எமது எடையை நாம் பெரிதொரு பரப்பொன்றில் பரவலாக்கி விடுவதால் ஒவ்வோர் ஆணியிலும் அழுத்தும் உடலின் சுமை மிகக் குறைவு. அதனால் ஆணிகள் உடலைத் துளைப்பதில்லை. (இதையே தனியொரு ஆணிமேல் செய்ய முடியுமா என்று கேட்டுப் பாருங்கள்.)



தீ மிதிப்பதும் கூட இலகுவாகச் செய்யக்கூடியதே. தணலின் மீது படர்ந்திருக்கும் சாம்பல், பாதம் நெருப்பில் முழுதாக மிதிபடுவதை தடுக்கிறது. (சாம்பலை ஊதி அகற்றிய தணலில் நடக்கும்படி கேட்டால் விபரீதத்தை உணர்வீர்கள்.) நடப்பவர்கள் 'பக்தியின் உந்துதலில்' வேகமாக நடந்து முடிப்பதாலும் பாதத்தில் சூடு படுவது தவிர்க்கப்படுகிறது.

பொதுவாக உடல் உரமேறிய தொழிலாளர்களே இதில் குதிக்கிறார்கள். தோல் காய்ந்து இறுகி இருப்பதால் இவ் வலி சட்டென அவர்களைத் தாக்குவதில்லை.

இலங்கையில்கூட அத்தியடியில் 1974களில் டொக்டர் காலோ பொன்சேகாவின் மாணவர்கள் 'பக்தியின்றியே' தீமிதித்துக் காட்டியிருந்தார்கள். மருத்துவக் கல்லூரியில் பறவைக் காவடி செய்து காட்டியிருந்தனர்.

பக்தி என்பது தனிப்பட்ட மனிதனுக்கும் கடவுளுக்குமான அந்தரங்க விடயம். அதற்கும் இச் செயல்களுக்கும் எச் சம்பந்தமும் இல்லை. ஆனால் இத்தகைய மனதைப் பயங்கரத்தில் ஆழ்த்தும் செயல்களோ, உண்மையில் பக்தியையல்ல பயத்தையே எமக்கு ஊட்டுவிக்கிறது.

--------- **அருள்**



## "பொறுக்ஸ்"

'..சர்வ வல்லமையுள்ள சர்வேசுவரன் ஒருவருண்டு, அவரே யாவரையும் படைத்தளிப்பவர் என்ற பொதுவான நம்பிக்கை ஒருபாலிருக்க, தினசரி நடவடிக்கைகளில் அவரை முற்றும் மறந்து, அல்லது அவர் பராக்கிரமத்தையும் கருணையையும் இகழ்ந்து, 'சுடலை மாடன்', 'கறுப்பண்ணன்', 'முனியாண்டி', 'மாரி' முதலிய பைசாசங்களைக் கொண்டாடிப் பலிகொடுத்து மூட ஜனங்கள் வணங்குவது போல், குக்கிராமவாசிகளும், 'கவர்னர்', 'கலெக்டர்' முதலிய அதிகாரிகளை எங்கேயோ இருப்பதாகக் காதால் மட்டுங் கேட்டுள்ள தூரவாசிகளாகவும், தங்களுடன் சிறிதும் சம்பந்தமில்லாதவர்களாகவும் நினைத்து அசட்டை செய்து, தம் கண் முன்னின்று நிதமும் தம் குடியை வாழ்விக்கவும், தாழ்விக்கவும் வல்ல 'ரிவினியூ இன்ஸ்பெக்டர்', 'கால்வாய்ச் சூப்பிரண்டண்டு', 'போலீஸ் ஹெட் கான்ஸ்டபிள்' முதலிய சுற்றுத் தேவதைகளையே குலதெய்வங்களாகக் கொண்டு, விசேஷமான பூஜையையும், மரியாதையையுஞ் செய்வார்கள்....''

**- அ. மாதவையா (பத்மாவதி சரித்திரம்) 1898.**

**முத்தம்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குட்டிக் கதை

# புதிருக்குள் புதிர்

பா தையை அண்டிய வயல் வெளியில் ஒரு குடியானவன் கொத்திக் கொண்டிருந்தான். அப்போது ஜார் மன்னன் அவ்வழியே செல்ல, குடியானவனைக் கண்டு "மனிதனே கடவுளின் ஆசீர்வாதம் உண்டாகட்டும்" என்றான்.

"நன்றி அன்புள்ள மனிதனே" (தனக்கெதிரே இருப்பவர் ஜார் மன்னன் என்பது குடியானவனுக்குத் தெரியாது)

"இந்த வயற் காணியால் நன்றாகச் சம்பாதிக்கிறாயா?" அரசன் கேட்டான்.

"நல்ல விளைச்சலென்றால் எண்பது ரூபிள் வரை"

"அந்தக் காசை என்ன செய்கிறாய்?"

"இருபது ரூபிள் செலவுக்கு. இருபதால் கடன் இழுப்பேன், இருபதை கடன் கொடுப்பேன், மீதி இருபதை ஜன்னலால் வெளியே எறிவேன்"

"நீ என்ன கடன் இழுக்கிறாய்? யாருக்குக் கடன் கொடுக்கிறாய், ஜன்னல் வெளியே வீசுவது ஏன்? கொஞ்சம் விளக்கமாகச் சொல்லேன் தோழா"

"கடன் இறுப்பது என்றால் அப்பாவைக் காப்பாற்றுவது, கடன் கொடுப்பது என்றால் ஆண் மக்களைப் பராமரிப்பது, ஜன்னல் வழியே எறிவது என்றால் பெண் மக்களை வளர்ப்பதுதான்"

"சா... உண்மைதானே" மன்னன் சொன்னான்.

குடியானவனுக்கு வெள்ளிக் குவியல் ஒன்று கிடைத்தது. தான் ஜார் மன்னன்தான் என்று அரசன் உறுதிப்படுத்தினான்.

"என்னுடைய முகத்துக்கெதிரேயல்லாது வேறு எவரிடத்திலும் இதனை சொல்லக் கூடாது" என்று அரசன் கண்டிப்பாகக் கூறினான்.

தலைநகருக்குவந்துசேர்ந்தஜார் மன்னன் இராணுவத் தலைவர்களையும் பிரபுக்களையும் ஒன்று கூட்டினான்.

"ஒரு புதிர் இருக்கிறது. நீங்கள் அதனை விடுவிக்க வேண்டும். பாதையிலே போகும்போது ஒரு குடியானவனைக் கண்டேன். நிலத்தைக் கொத்திக் கொண்டிருந்த போது இந்தப் புதிரைச் சொன்னான்.

"வயற்காணியால் எப்படிச் சம்பாதிக்கிறாய்? எவ்வாறு செலவழிக்கிறாய்" என்றபோது அவன் பதில் தந்தான். நல்ல விளைச்சலென்றால் எண்பது ரூபிள். இருபது செலவுக்கு. கடன் இறுக்க இருபது. கடன் கொடுக்க இருபது. மீதி இருபது ரூபிள் ஜன்னலுக்கு வெளியே வீசுவதற்கு."

அரசன் சொன்னான்: "இதனை விடுவிப்பவர்களுக்கு பட்டமும் பணக் குவியலும் கிடைக்கும்"

பிரபுக்களும் இராணுவத் தலைவர்களும் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டார்கள். யோசித்தார்கள்.. யோசித்தார்கள் முடியவில்லை.

பிரபுக்களுள் ஒருவருக்கு ஓர் உபாயம் தோன்றியது குடியானவனைத் தேடிப் போனான். கையில் வெள்ளிக் காசுக் குவியலொன்றும் இருந்தது.

"அரசனின் புதிரை விடுவி"

பணத்தைக் கண்ட குடியானவன் பிரபுக்கு எல்லாவற்றையும் தெளிவு படுத்தினான். பிரபு அரனிடம் போய் புதிரை விடுவித்தான்.

குடியானவன் தனது உத்தரவை மீறிவிட்டதையறிந்த அரசன் ஆத்திரத்தோடு அவனை அழைத்து வருமாறு ஆணையிட்டான். குடியானவன் அரசனைக் கண்டதும் தானே பிரபுக்கு எல்லாவற்றையும் விளக்கியதாக பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டான்.

"அப்படியானால் உன் மீது நீதான் அனுதாபப்பட வேண்டும். இப்படியான குற்றத்துக்கு தண்டனை மரணம் மட்டும்தான்"

"மகாராஜா, நான் குற்றம் செய்யவில்லையே, நான் பிரபுவுக்கு இதனைச் சொன்னது உங்கள் முகத்துக்கு எதிரேதான். வேறு எவர் முன்னிலையிலும் அல்ல"

தனது சட்டைப் பையிலிருந்து வெள்ளி ரூபிள் ஒன்றை வெளியே எடுத்த குடியானவன் அதிலிருந்த அரசனின் முக வடிவத்தைக் காட்டினான்.

"சா.... உண்மைதான்... இது எனது முகமேதான்" என்றான் அரசன்.

குடியானவனுக்கு இன்னும் செல்வங்களை வாரி வழங்கிய ஜார் மன்னன் அவனை பெரும் மரியாதைகளோடு வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

**- (ரஷ்யக் கதையைத் தழுவி மொழியாக்கம்: எம். எச். எம். ஷம்ஸ்.**

## தனுஜா தர்மபால

பத்திரிகையாளராக இருக்கும் தனுஜா தர்மபால சிறுகதை, கவிதைப் படைப்புகள் மூலம் இலக்கியத்தில் தடம் பதித்தவர். சோவியத் தாஷ்கண்ட் நகரப் பல்கலைக்கழகத்தில் பொதுத் தொடர்பாளர் துறையில் பட்டம் பெற்றவர். ஏ. என். அபினாசியெவ் எழுதிய ருஷ்யக் கதைகளை தனுஜா சிங்களத்தில் "குருவிமொழி" என பெயர்த்து வெளியிட்டார்.

எழுத்தாளரின் கண்ணீர், கடைசிப் பனிக்கட்டி, பாடற் சந்நிதி என்பன ஏற்கனவே அவர் வெளியிட்ட படைப்புக்கள். 'குருவிமொழி' வெளிவந்தபின் 'தனுஜாவின் குறுங்கவிதைகளின் தொகுப்பு...' நூல் வெளிவந்துள்ளது.



விசாகா வித்தியாலய பழைய மாணவியான தனுஜா "சிலுமின" வாரப் பத்திரிகையில் "பாடற் சந்நிதி" என்ற பகுதியை ஓராண்டுக்கு மேல் நடத்தி வருகிறார். பாடலாசிரியர்கள் பற்றிய இந்தப் பகுதி சிங்கள வாசகர்கள் மத்தியில் மிக வரவேற்பைப் பெற்று வருகிறது.

'குருவிமொழி' தொகுப்பிலிருந்து பெறப்பட்ட கதையே "புதிருக்குள் புதிர்".




## ஆண், பெண், அலி எண்கள்

மனிதர்களில் மட்டும்தான் ஆண்-பெண் வேறுபாடா? இல்லை, எண்களிலும் உண்டு. 2, 4, 5, 6, 8 என்ற இரட்டைப் படை எண்களை ஆண் எண்கள் என்றும் 1, 3, 5, 7, 9 என்ற ஒற்றை எண்களைப் பெண் எண்கள் என்றும் 0 ஐ அலி எண் என்றும் சீனர்களும் வேறு சில நாட்டவர்களும் அழைக்கின்றனராம்.



## பின்னோக்கி ஓடும் பூனை

முன்னோக்கி ஓடும் பூனைகளைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் பின்னோக்கி ஓடும் பூனைகளை...? அமெரிக்காவில் உள்ள ஒரு வகை பூனைகள் பின்னோக்கியே ஓடுகின்றன. 'மஞ்ச்கின் ம்யூடான்ட் கேட்' என்பது இந்தப் பூனை இனத்தின் பெயர். சாதாரண பூனைகளின் கால்களை விட குட்டையான கால்களுடைய இந்தப் பூனைகளால் முன்னோக்கி வேகமாக ஓடவோ, குதிக்கவோ முடியாது. ஆனால் பின்னோக்கி வேகமாக ஓடும். எதிரிகளைக் கூட நிலை தடுமாற வைக்கும். இந்தப் பூனைகள் நியூயோர்க்கில் நடந்த ஒரு கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டன.



## இனங்காண சாயம்

பிரேஸில் நாட்டில் வசிக்கும் 'கயப்போ' இனத்தைச் சேர்ந்த செவ்விந்தியர்கள் தங்கள் உடலில் கறுப்பும் நீலமும் கலந்த ஒருவித சாயத்தைப் பூசிக்கொள்கிறார்கள். இது ஜெனிபப் எனப்படும் பழத்தில் இருந்து எடுக்கப்படும் சாறு. இந்தச் சாற்றைப் பூசிக்கொள்ளாதவர்களை அவர்கள் தங்கள் இனத்தில் சேர்த்துக் கொள்வதில்லை.

**- பர்ஸானா ஸரூக்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாபம்

சிறுகதை

ந நெளிந்து கொண்டிருந்த அந்த கியூ வரிசையில் ஐம்பது பேராவது இருப்பார்கள். நானும் சென்று அதன் வால் பக்கத்தைப் பிடித்துக் கொண்டேன்.

தாங்க முடியாத பகல் நேர வெப்பம். சூரிய பகவான் தனது அங்கத்தில் பொதிந்து வைத்துக் கொண்டிருந்த அவ்வளவு வெப்பத்தையும் கக்கிக் கொண்டு பூமாதேவியை நோக்கிய வண்ணம் தனது ஆட்சித் தேரை செலுத்திக் கொண்டிருந்தான்.

ஆனால் பூமகளோ அக்கினியாக எரியவில்லை. அணைத்துக் கொண்டிருந்த நீள்கடல் அவளுக்குத் துணையாக நின்றது. பூமகளின் பொறுமைக்கு ஆதரவு தந்து கொண்டு ஆழியிலிருந்து மெல்லென எழுந்து வந்த காற்றானது தென்றலாகி பூமகளின் மேனி தழுவியது.

அள்ளித் தந்த பூமி அன்னையல்லவா? அவளே தன் மேனியிற் படர்ந்ததை அனுபவிக்க விட்டு விட்டாற் போல தன் மக்களின் உடலையும் மனோ நிலையையும் குளிரப்பண்ணினாள்.

பாணந்துறை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கருகே அமைந்திருந்தது அந்த பஸ் நிலையம். கியூ வரிசை நகர்ந்து கொண்டிருக்கிறது. ஒன்றா... இரண்டா? எத்தனையோ கியூ வரிசைகள்... பஸ்கள் வருகின்றன, போகின்றன. மக்கள் முட்டி மோதி பஸ்களில் ஏறிக் கொள்கின்றனர்.

கொழும்பு நோக்கிப் புறப்படவுள்ள பஸ்களின் கியூதான் நீண்டதாக. அதுவும் பாடசாலை விட்ட நேரமாதலால், ஆசிரியர்கள்,மாணவர்கள் நிரம்பி வழிந்தனர்.

கியூ வரிசை மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தேன். இன்னுமொரு பெரிய கூட்டம் கியூ வரிசையைப் பற்றிக் கொண்டு மீண்டும் நீளமாக்கியபடி....

'பங்களைத் தவற
கடலை வியாபாரி,
ரிப்பெட்டி வியாபா
ள், ஐஸ்கிறீம்
பாபாரிகள் போன்
ர்களுடன் பிச்சை
ாரக் கூட்டமும்....

இரைச்சல்
காதைத் துளைக்
றது. மக்களின்
லையை உணர்ந்
ல கையில் பொரு
க் கொண்டு பேரம்
றனர்.

ர்களோ அபிநயத்
யாலும், பேச்சுக்களாலும் உள்ளங்களை உருக வைக்கும் காட்சி, மனோதத்துவம் கற்றவர்களைக் கூட மயங்க வைக்கும். இயல்பாகவே உந்தப்பட்டவர்களாக பலர் ஐம்பது சத அல்லது ஒரு ரூபாய் குற்றிகளை கொடுத்து விடுகின்றனர். ஏதோ நன்மை கிடைக்கட்டும் என்ற உணர்வுதான். அதனால் ஒரு பெருந் திருப்தி....

இத்தனைக்கும் மத்தியில் ஒவ்வொரு நாளும் அங்கு காட்சியளிக்கும் ஒருவனை எனது கண்கள் துழாவிக் கொண்டிருந்தன. அவன் மீது எனக்கு ஒருவகையான இரக்கமும், அனுதாபமும். அதனால் அவனுக்காக எனது தோள் பையில் எப்பொழுதும் ஒரு ஐம்பது சதம் தயாராக இருக்கும். அவன் எவரிடமும் வாய் திறந்து கேட்க மாட்டான். முன்னால் வந்து நிற்பான். ஏதும் கொடுத்தால் எடுத்துக் கொள்வான். இல்லையென்றால் சற்று நேரம் நிற்பான். அதன் பின் மெதுவாக நகர்ந்துவிடுவான்.


பார்வைக்கு அவனொரு பைத்தியம். முகத்தில் சவரக் கத்திபட்டு எத்தனைஆண்டுகளோ? வாலிபன். ஏனோ அவனுக்கு இந்த அவல நிலை. இது என் மனதில் ஏற்பட்ட இரக்கத்திற்கு முக்கியகாரணமாய் அமைந்தது.

தலை முழுக்க எண்ணெய், முகத்திலும் உடம்பிலும் அது வடிந்து கொண்டிருக்கும். இடுப்பைச் சுற்றி தேங்காய் எண்ணெயில் தோய்ந்த ஒரு மெல்லிய சாக்குத் துண்டைக் கட்டியிருப்பான். உடல் முழுவதும் அழுக்குப் படிந்து பார்ப்பதற்கு அசிங்கமாக, அருவருப்பாகவே இருப்பான். கக்கத்தில் இன்னொரு எண்ணெய் ஊறிய துணியை சுருட்டி வைத்திருப்பான். அதுதான் அவனது மாற்று உடை...

பைத்தியம்... பைத்தியம்... எல்லோரும் இப்படித்தான் கூறுவார்கள். அவனைக் கண்டால் இரக்கங் காட்டுவோர் மிகக் குறைவு. சிறுவர்கள் அப்பால் ஓடி விடுவார்கள். ஆம், மற்றவர்களும் அவன் கிட்டே வருவதை விரும்பவில்லை.

ஆனால், பைத்தியக்காரனிடம் காணப்படும் சேட்டைகள் அவனிடமில்லை. ஆண்டவன் இப்படியும் மனிதனை மாற்றியமைத்து பாடம் கற்பிக்கிறானே என்று மனதுக்குள் ஒரு தத்துவம் போல நினைத்துக் கொண்டேன்.

அவன் எவரிடமும் வாய் திறந்து கேட்க மாட்டான். முன்னால் வந்து நிற்பான். ஏதும் கொடுத்தால் எடுத்துக் கொள்வான். இல்லையென்றால் சற்று நேரம் நிற்பான். அதன்பின் மெதுவாக நகர்ந்துவிடுவான். முகத்தில் சவரக் கத்தி பட்டு எத்தனை ஆண்டுகளோ? தலை முழுக்க எண்ணெய், முகத்திலும் உடம்பிலும் அது வடிந்து கொண்டிருக்கும். இடுப்பைச் சுற்றி தேங்காய் எண்ணெயில் தோய்ந்த ஒரு மெல்லிய சாக்குத் துண்டைக் கட்டியிருப்பான். உடல் முழுவதும் அழுக்குப் படிந்து பார்ப்பதற்கு அசிங்கமாக, அருவருப்பாகவே இருப்பான். கக்கத்தில் இன்னொரு எண்ணெய் ஊறிய துணியை சுருட்டி வைத்திருப்பான். அதுதான் அவனது மாற்று உடை...






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான் அவனை முதலில் பார்த்தபோது யாரோ கொடுத்த ஒரு துண்டுப் பாணையும், சிரட்டையில் கொஞ்சம் கறியும் வைத்துக்கொண்டு பக்கத்திலுள்ள சாக்கடையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இரண்டு தெரு நாய்கள் அவனைச் சுற்றி வட்டமிட்டு வாலாட்டிக் கொண்டிருந்தன.

அந்த உணவின் ஒரு பகுதியை நாய்களுக்கும் கொடுத்து தானும் சுவைத்துக் கொண்டிருந்தான். மக்கள் வெறுக்கின்ற அவனுக்கு அந்த நாய்கள் நேசமாக இருப்பதை அவதானிக்கிறேன்.

பொழுது சாய்ந்ததும் கோயிலடிக்குச் சென்றுவிடுவான். கோயிலின் பக்கத்தில் படுத்திருப்பான். காலையில் எழுந்ததும் கோயிலுக்குள் செல்வான். அங்கிருக்கும் விளக்கின் எண்ணெய்யை எடுத்து தலையில் வழிய வழிய ஊற்றிக் கொள்வான். உடலெங்கும் பூசிக் கொள்வான். பூசாரி எவ்வளவுதான் விரட்டினாலும், அதட்டினாலும், ஒரு நமட்டுச் சிரிப்பை சிரித்து அப்பால் ஓடிவிடுவான்.

கியூ வரிசை கிட்டி வந்துவிட்டது. நான்கு ஐந்து பேர்தான் எனக்கு முன்னால் நிற்கின்றனர். என்றாலும் அடுத்த பஸ் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

அப்பொழுதான் அந்த நடைப்பிணம் போன்ற பைத்தியம் அருகில் வந்து கொண்டிருந்தான். கியூ வரிசைக்காகப் போடப்பட்டிருந்த இரண்டு கம்பிகளுக்கு வெளியே பஸ் நிறுத்தும் பாதை ஓரமாக வந்து கொண்டிருந்தான்.

எவரும் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. எனது தோள் பையிலிருந்து ஐம்பது சதக் குற்றியை எடுத்து அவனிடம் கொடுத்தேன். அவன் யாரையும் பார்க்கவில்லை. எனக்கும் நன்றி சொல்லவில்லை. கடந்து சென்றுகொண்டிருந்தான்.

நான் அவனையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். அவனுக்குப் பிச்சை போட்டதை எனக்கு முன்னால் நின்றவர் பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடமும் ஒரு வியப்பான பார்வை. 'இந்தப் பைத்தியத்துக்குமா தர்மம் செய்கிறாய்?' என்கிற மன உளைச்சலை காட்டுவதாக அந்தப் பார்வை அமைந்திருந்தது.

நான் அதனைப் புரிந்து கொண்டு, அவரிடம் ஏதாவது பேசலாமா என்று நினைத்தபோது பஸ் வந்து நின்றது.

வரிசையில் முன்னாலே நின்ற படியால் ஆசனங்களுக்கு அவதிப்பட தேவையிருக்கவில்லை. ஜன்னலருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டதும் எனக்குப் பக்கத்தில் உள்ள ஆசனத்தில் காசு போட்டதைப் பார்த்த நபர் வந்து உட்கார்ந்து கொண்டார்.

வேண்டுமென்றே எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்ததை உணர்ந்தேன். பஸ் நிறைய பிரயாணிகள் ஏறிக்கொண்டனர். நின்று செல்லும் பயணிகள் மத்தியில் டியூஷன் போகும் மாணவர்களும், மாணவிகளும் நெருக்குப்பட்டு அவஸ்தைப்(?)படுகின்றனர்.

பஸ்ஸும் புறப்பட்டுவிட்டது.

எனக்குப் பக்கத்தில் அமர்ந்த அந்த நபர் என்னைப் பார்த்து ஒரு புன்முறுவலைப் புரிந்து, எங்கே பயணம் என்று கேட்டார். நான் கொழும்பு என்றேன். கதையோடு கதையாக அவரே என்னிடம் அந்தப் பைத்தியத்தைப் பற்றி கதைக்கத் தொடங்கினார்.

அவன் வசதியான உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன். பரம்பரைச் சொத்துக்காரன். இளம் வாலிபப் பருவத்தில் அடாவடித்தனமாக பெற்றோர்களையும் மீறி கெட்ட நண்பர்களுடன் சேர்ந்தான். கலவரங்கள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபாடு கொண்டவனான்.

முன்பு நடைபெற்ற கலவரங்களில் நண்பர்களுடன் சேர்ந்து முன்னின்றான். பாணந்துறையில் பலரது சொத்துக்களை குறையாடி, பல தீய செயல்களில் ஈடுபட்டு கடைகளையும், வீடுகளையும் தீ வைத்தவன். கோயிலை எரித்து, பூசாரியையும் கூட்டாளிகளையும் கொலை செய்தவன்.

சாபக்கேடு இவனை சும்மா விடவில்லை. பைத்தியமாக்கிவிட்டது.

இப்போ இவனுக்கு அந்தக் கோயில்தான் தஞ்சம். கடவுளின் சாபம்தான் இந்தப் பைத்தியக் கோலம் என்றவர் சொல்ல எனது உடம்பெல்லாம் புல்லரித்தது.

அடாது செய்தவர் படாது படுவார் என்ற நீதியைச் சொல்லி இந்தக் கதையை முடித்து விடலாம்.

ஆனால், நான்....

அவனை விட மோசமான இனப் படுகொலைகள்பலதைவெறியோடு செய்து முடித்தவன். இன்னும் பிச்சைக்காரனுக்குத் தர்மம் போட்டுத் திருப்தியடைந்து வாழும் நிலையிலிருக்கிறேன் என்ற சந்தோஷ....

ம்... எனக்கு எப்போ?

உள்ளம் நடுங்கியது.

பஸ்ஸிருந்தவர்கள் திடீரென்று என்னை அச்சத்துடன் விழித்துப் பார்ப்பது தெரிந்தது.

நான் உரத்துச் சிரித்துக் கொண்டிருந்தேன்.

## உயிர் காக்கும் நுளம்புகள்



நுளம்புகளை அழிப்பதற்கு மருந்து தேடிக் கொண்டிருந்த காலம் போய், இப்போது நுளம்புகளிலிருந்தே நோய்களுக்கு மருந்து தயாரிக்கும் காலம் வந்து விட்டது.

மூட்டை, வண்டு, ஈ, நுளம்பு மற்றும் வேறு சில பூச்சிகளில் இருந்து பெறப்படும் சாரச் சத்து (Extracts) ஆஸ்துமாவுக்கு சிறந்த மருந்தாகக் கண்டறியப்பட்டுள்ளது.



டெல்லியிலுள்ள வல்லபாய் படேல் மார்பு நோய்க் கழக மருத்துவர்கள் நீண்ட நாள் ஆராய்சிக்குப் பின்னர் இந்தப் புதிய 'நுளம்பு மருந்தைக்' கண்டுபிடித்துள்ளனர்.

நுளம்புகளில் இருந்து பெறப்பட்ட சாரச் சத்தை 317 ஆஸ்துமா நோயாளிகளின் உடம்பில் செலுத்தி டாக்டர்கள் பரிசோதித்தார்கள். இந்தப் புதிய மருந்து நல்ல பலனைக் கொடுத்திருப்பதாக அந்த டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.



மனிதனை நோய்வாய்ப்படுத்தி வந்த நுளம்புகள் இப்போது மனிதனைக் காப்பாற்ற முன் வந்திருப்பதற்காக நாம் அவற்றுக்கு நன்றி செலுத்த வேண்டாமா என்ன?


## நிறை - அரை- குறை - மனிதன்

மனிதர்களில் மூன்று வகையினர் உள்ளனர். நிறை மனிதன், அரை மனிதன், குறை மனிதன்.

தானே ஆய்ந்தறியும் திறனும், மற்றையவர்களிடம் ஆலோசனை பெறும் பண்பும் பெற்றவனே நிறை மனிதன்.

ஆய்ந்தறியும் திறன் உண்டு, ஆலோசனைப் பண்பு இல்லையெனில் அல்லது ஆலோசனைப் பண்புண்டு ஆய்ந்தறியும் திறன் இல்லையெனில் அவன் அரை மனிதன்.

ஆய்ந்தறியும் பண்புமில்லாத, ஆலோசனைத் திறனுமில்லாதவன் குறை மனிதன்.



முத்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பிரபுத்தன்

சித்தார்த்த,
உன்னைப் போல்
நான்
அரச போகத்தில் பிறக்கவில்லை!
கோடைக்கென்று
குளிருக்கென்று
எனக்கு மாளிகைகள் இல்லை
எனவே
உன்னைப் போல்
இல்வாழ்வைத் துறப்பது
எளிதல்ல, எனக்கு.

நான் போனால்
என் மனைவி மக்கள்
ஆதரவின்றியோர்
வாடகை வீட்டில்!
பிள்ளைகள் -
எடுத்தடி வைக்கமாட்டா
கைக்குழந்தைகள்-
அவர்களுக்கு
பால் மா தேடுவது ஆர்?
நான் இல்லாவிடின்
அவர்களை
மருத்துவரிடம் கொண்டு செல்வது ஆர்?
எதிர்காலத்தை
தம் கைகளில்
இறுகப் பொத்தியபடி
தம் அகன்ற விழிகளில்
நம்பிக்கையோடு
என்னைப் பார்க்கும் பிள்ளைகள்!

கந்தை உடையோடு
எலும்புந் தோலுமாய்
இரா முழுதும்
கண்ணுறங்காமல்
நிரஞ்ஜலா
மா இடிக்கிறாள்
பால் கரைக்கிறாள்
கஞ்சி காய்ச்சுகிறாள்
துணி துவைக்கிறாள்
அவர்களுக்குத்
தாயாய்
சகோதரியாய்!
என்னுள்
காதலின் ஊற்றுக்கண்களைத்
திறந்தவள் அவள்!
என்னால் முடியாது
ஓட்டைக் குடிசையில்
பட்டினி கிடக்க
இவர்களை விட்டுவிட்டு
துறவு பூண
என்னால் முடியாது!

வாழ்க்கையின்
துன்பங்களால் சலித்துப் போய்
நான் நடந்தபோது
நிரஞ்ஜலா
குடிசையில்
குந்தியிருந்தாள்,
கைக்குழந்தையுடன்,
தன்னந்தனியே.
அவள் கணவன்
பாரச்சுமைகள் தூக்கியே
மாய்ந்து போனான்!

அவன் சுமையை
நான் தூக்கிக் கொண்டேன்,
கருணையினால்.

காய்ந்த கைகளை முத்தமிடுவன
காற்றிலே அசைந்தாடும் பச்சைப் பயிர்.
நீயிடிக்கும் அரிசி நனையவே
நெற்றி வேர்வை மழைத்துளியாய் விழும்.
நிர்மல வானில் நிறைமதி பொழிதரும்
பால் என் குழந்தையின் நெஞ்சில் பாயும்
நாளை உலகில் நவநவக் கனவில் என்
பாலன் இதழ்க்கடை பயிலும் குறுநகை!
வாவிகள் கட்டி வளம் பல பெருக்கிய
பூதங்கள் மீள என் நாட்டில் பிறந்துள!
பாலன் முறுவல் பதிந்த இரத்தினங்கள்
ஆழச் சுரங்கத்திருந்து வந்துள்ளன
அவன் கண்ணீரைத் துடைத்துப் பார்க்கிறேன்
எவை எவை நாளை விடியல் கொணருமோ
கடன் சுமையின்றி
அச்சமின்றி
விலங்கெதுமில்லா புது யுகம் ஒன்றின்
மீது என் மைந்தன் ஆட்சி செலுத்துவான்!

பிஞ்சுக் குழந்தாய்,
அன்பின் ஊற்றை நீ தொடுந்தோறும்
ஓய்ந்த உடல் புத்துணர்ச்சி எய்தும்
மைந்த உன்னைக் காணுந்தோறும் என்
களைப்புக் களிபேருவகையாய் மாறும்!

ஈராயிரம் வருடம் உனக்காய் ஒரு கனவு
ஆராத காதலொடு கண்டு கொண்டிருந்தேன்
அந்த உலகை உனக்கென்றமைக்காமல்
மைந்த, துறக்க மனஞ்சற்றுமில்லையடா.

ஆகையால், சித்தார்த்த,
தெளிவாய் பதில் சொல்லு:
கோவைகள் சூழ நான்
குந்தியிருந்தாலும்
மேழி பிடித்தாலும்
விசிறி விதைத்தாலும்
சக்கரங்களுக்கு நடுவே
சமராடி
மெத்த உழைத்துக்
கோஷமிடும் வேளையிலும்
மனிதக் குவியல் பிதுங்க
தொடர்வண்டி
தினமும் போய், மீளும் - அதில்
நான் ஒருவன் ஆனாலும்
புத்தனாய் மாறும்
வழி புரியச் சொல்லையா!
நிச்சயமாய் தன்னந்
தனி மனிதாய் அல்ல,
பல்லாயிரவரொடு கூடி
நான் பற்றறுக்க
ஒல்லும் வழியொன்றுரை.

**சிங்கள மூலம்: மஹகம சேகர**
**தமிழில்: சோ. பத்மநாதன்**



www.tamilarangam.net

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

........................................

லீசிங்

........................................

காப்புறுதி வசதிகள்

........................................

வாடகை உரித்து

........................................

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

........................................

ஃபினான்ஸ் வர்த்தகம்

........................................

செயற்பாட்டு வரி

........................................

வீடு, சொத்து கடன்

........................................

## வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

தலைமை அலுவலகம்

84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்

270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை

254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்


அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**


10814

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொன்னிறக் கண்

# என்றால் என்ன?

**உண்மையான இயற்கையான வர்ணங்கள்........**
**இயற்கையின் உண்மையான வர்ணங்கள்......**

சுற்றாடலின் ஒளியைக் கொண்டே மனிதக் கண்கள் நிறங்களின் வேறுபாடுகளைப் புரிந்து கொள்கின்றன. இயற்கையான வாய்பாடு, மாற்றங்களின் வேறுபாட்டையும் காட்சிகளின் சரியான உருவத்தையும் இயற்கையாகவே கண்கள் உணர்ந்து கொள்கின்றன.

LG பொன்னிறக் கண் படங்களின் நிலையை தானாகவே சரிப்படுத்துவதோடு உங்களுக்கு கடும் ஒளி ஒளியிலும் கண்ணை நிலைப்படுத்துகின்றது.



ABS Gardner Dixon Hall

Sole Agents **ABANS**

554, Galle Road, Colombo 03. Tel-595766/8, 596382/3, 074-513307, 074-513522-3.
Duty Free Shop No 5-A., Bandaranayake International Air-port, Katunayake, Tel: 252156
Liberty Plaza-Shop No 01 & 02, Liberty Plaza Complex, Ground Floor, Colombo-03. Tel-574519
Nugegoda-No 31, Nawala Rd, Nugegoda. Tel-828339 **Wattala** - No 306, Negombo Rd, Wattala. Tel-074-813952
**Negombo** - No 107 & 109, St. Joseph Street, Negombo. Tel-031-33929 **Kurunegala** - No 25, Puttalam Road, Kurunegala. 037-24824
**Anuradhapura** - No 561/11, 2nd Stage, Maithripala Senanayake Mw, Anuradhapura. **Kandy** - No 12, D S Senanayake Veediya, Kandy. Tel-08-224466
**Badulla** - No 06, Station Rd, Badulla, Tel-055-23490 **Matugama** - No 29, Kalutara Rd, Mathugama. 034-48295 **Galle** - No 01, Ward Street, Dickson Junction, Galle. 074-380900
**Matara** - No 230, Anagarika Dharmapala Mw, Matara. Tel- 041-27354 **Aluthgama**- 280, Galle Road, Aluthgama, **Kegalle** - 99, Kandy Road, Kegalle.

**AND DEALERS ISLANDWIDE**

ABANS OFFERS
INTEREST FREE
EASY PAYMENT TERMS
HOT LINE 074-513520

GoldStar
Now
LG
Lucky Gold Star

11333

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# R#21°-x◆(-5)

**முதலுதவி**

**(1) மனிதர்களுக்குப் பெயர்களில்லை. டிஜிடல் முறையிலான தனிப்பட்ட அடையாள சிப்ஸ் மட்டுமே.**


**(2) சுமார் இருபது கிரகங்களில் மனிதர்கள் வாழ்கிறார்கள். உதாரணமாக... "தமிழாரணிகா" - தமிழர்களின் தனிப் பிரபஞ்சம். அதுபோல் சிங்களாட்டா - ஆங்கிலாண்டஸ் என்று தனிப் பகுதிகள் இருக்கின்றன.**

**(3) வேற்றின விசிட்டர்ஸ் சிப்ஸை விழுங்கி அவர்களாக மாறி, உறவாடி பின்னர் ஊர் (தமது கிரக சூழல்) திரும்புகையில் - அதை துப்பிவிட்டால், நாமாக நமது சாதியாக மாறலாம்.**

**(4) உணவு, குடிநீர் போன்ற இத்யாதிகள் வருடத்துக்கு ஒரு முறை - உணவு மையங்களில் லேசர் முறையில் தரப்படும்.**

**(5) கொடுக்கல் வாங்கல் என்பது நமது உடல் செல்களை தானம் பண்ணுவதிலும், கலவங்கி (Cell Bank) இல் வாங்குவதிலும் வரையறுக்கப்பட்டு, அதிகமாக கொடுத்தால் - திரும்பாமை (No Return) சுந்தர மையத்தில் சீக்கிரமாக செட்டில் ஆகலாம்.**

**இந்தக் கதைக்கு இத்தனை முதலுதவி போதும்.**



*2843ம் வருடம் :-*

*R#21°-x◊ (-5) அதாவது நான். செல்லமாக "ஆர்சோமைனா" - ! "எ:.ப்ரிகனோபியாதிராஸ்காடஸ் விடுதலாசிகா" 600 கோடி ஒளி வருட நகருக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். வயர்லஸ் டீயைக் குடித்து. காலைக் கடனை யூரியா அமோனியா சென்டர் டியூபில் முடித்துக்கொண்டு "தமிழாரணிகா சப்பாத்தி"யில் - (வாகனம்) உட்கார்ந்தபோது "பசிப்பையா - பசிப்பையா" என்று இனர்ஜி சிப்ஸ் சிக்னல் பண்ணியது. பசிப்பையா இனர்ஜி கெப்ஸியூல்ஸ் இரண்டை குடலாரஸில் (வாகனத்தின் பின்பக்கத் துவாரம்) நுழைத்து விட்டு - "பறயா - பறய்யா.." என்று இரண்டு முறை சவுண்ட் பெனலில் கத்தியதும் "தமிழாரணிகா சப்பாத்தி" சுர்ரிட்டது.*

*சவுண்ட் பெனலில் வழக்கமான பிரபஞ்ச ஒற்றுமை கீதம் ஒலிபரப்பானது. ஒற்றுமை கீதம் ஒலிபரப்பாகையில் ஒரு விரலை மூக்கினுள்ளும், மற்றைய பெருவிரலால் முதுகையும் சொறிய வேண்டியதால் - செய்தேன்.*

*"ஆணிக்கா... ஆணிக்கா..*
*ஒன்றானிக்கா....*
*தமிழாரணிக்கா... ஆப்பிரிணி,*
*துரோக... அவரோக....*
*பிலிப்பினி... ஜாதியாந்ர...*
*சிங்களா.... மலேசிகா....*
*யுரேனிகா.... புருட்டோ...*
*அஜ"ட்டோ....."*

*ஒற்றுமை கீதம் ஒலிபரப்பப்பட்டு நிற்கவும்-தமிழாரணிகாசப்பாதியா - எ:.ப்ரிகனோபியாதிராஸ்காடஸ் விடுதலாசிகா - 600 * tr" வந்து நிற்கவும் சரியாக இருந்தது. "எ:.ப்ரிகனோபியாதிராஸ்காடஸ்" - போகுமுன் எ:.ப்ரிதிராஸ்கடப்பிளிஸ்" ஸாக மாற F.D.F.D. சிப்ஸை வாயுகுழாய் (Air Straw) மூலம் உறிஞ்சியவுடன்... "தில்கானா" என்ற F.D.F.D. ஜாதியாக மாறி த. சபா த்தியாவை விட்டு இறங்கினேன்.*

*"ஓ.... அருசியா.... ஆருசியா... சசசி... சசசி... தூத்தூ... தூ... கெடு கெடுகெடுகெடு... போப்போ... தூத்தூ..." என்று அன்போடு F.D.F.D. அதிகாரி... சர்வதேஷா சிங்களா.. சீக்யா... இந்யா சீன ஜப் அமே.. அவரது அன்பான டிஜிடல் எச்சிலை துப்பி, என் பின்புறத்தில் வெப்ப வைரஸ் அழிவு அசோக சக்ர மௌஸை திணித்து வரவேற்றார். "யாஜ... யாஜ.. யாஜ.... சிபசிபசிபசிப.... னித... னித... னிதனித.. நோ.. நோ.... யோஜயோஜயோ! என்று பதிலுக்கு தமிழாரணிகா சப்பாத்தி சொதியானங்கி என்ற பாடல் CD ROMமை அவர் தலையில் வைத்து, காலைப்பிடித்து அந்த CD வயரை மாட்டி அவரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினேன்.*

*"மிழா... மிழா... பீப்பீ... த்த.... மிழா... மிழா...!" என்று ஆரத்தழுவி - அரை டஜன் (மரவள்ளிக் கிழங்கை) சீ.... (தோசையை).... அட்ச்சே.... "க்கிபுங்கா.... செத்து.... தின்னு" என்ற மலர்ச் செண்டை தூர வீசி பொறுக்கச் சொல்லி... சிரித்தார்.*

*"டேய் - சங்கூதி, ஆளுக பெரட்டுக்கும் போயாச்சி! கவட்டைக்குள்ள கைய வச்சிக்கிட்டு.. என்னடா... மூதேவியாட்டம் தூக்கம்! ஒக்காலை....!"*

*தமிழாரணிகா....R#21°-x◊ (-5)....*

*என்ன இது... எ:.ப்ரிகனோபியா திராஸ்கடஸ்...?!*

*"யாஜ.... யாஜ.... யாஜ... தூத்தூ....!? என்ன?*

*அடத்தூ... டேய் எழும்படா... கேடுகெட்ட முண்டம்... ராவுபகலா சேத்து படிக்க வச்சி.... தூங்கிறாம்பாரு.... துப்புக்கெட்ட நாய்ப்பய.....!!"*

*R#21°-x◊ (-5) .....*

*"ஆணிக்கா... ஆணிக்கா.. ஒன்றாணிகா!...!"*

**00 00 00**

*ஆறானம்பர் பீலியில் தலை குளிர குளித்து - ஆத்தாவின் ரொட்டித்துண்டையும், சாயத்தையும் குடித்து, புத்தகங்களை அள்ளிக் கட்டிக்கொண்டு ஸ்கூலுக்கு, ஓடும்போது கூட..... இன்னும்.... மண்டைக்குள்.... R#....*

**00 00 00**

*முதலில் A/L டெஸ்டில் ஒழுங்காக மார்க் வாங்கி ஆத்தா - அப்பனை வயிறு குளிர சாப்பிட வைக்கணும்.... அட.... R# ல.... தமிழாரணிகா....*

*வகுப்பில் பகீதரன்... அவன் பெற்றோரோடு யாழ்ப்பாணப் பிரச்சினையால ஹட்டன் வந்து தங்கி எங்கள் வகுப்பிலேயே படிக்கிறான்.... அவனிடம் இதைப் பற்றிக் கூறியபோது... "அட உனக்குமோ... இது எனக்குப் பழகிப்போன.... மென்டல் மச்சான்! உனக்கு இப்பத்தான் தொடங்குது...!"*


*அப்படியென்றால் அவனது டிஜிடல்....?? (மென்டலா?)* ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கானாவின் அசன்டே இனக்குழுவின் மன்னர் ஒட்டும்:போ ஒபொகு வாரே II

# கட்டித் தங்கம்

**பொன்! தங்கம்! எங்கள் கலாசாரத்தோடு... சடங்குகளோடு... நம்பிக்கைகளோடு... கலை, இலக்கியத்தோடு... சமூக அந்தஸ்தோடு... அழகுணர்வோடு... கனவோடு... பின்னிப் பிணைந்த உலோகம் இது.**

பயபக்திக்கும் மதிப்புக்கும் மட்டுமல்ல ஆடம்பரத்துக்கும் உரிய இவ் உலோகத்தை உலோகங்களின் அரசன் என்றால் மிகையாகாது.

அக்காலத்து அரசர்களை முடிசூட்டிய இவ்வுலோகம் இன்று ஏழைகளுக்கும் கூட அவசர ஆபத்சகாயனாக அடகு கடைகளுக்குச் சென்று மீள்கிறது.

பொன் எம் எண்ணத்தில் எத்தனை உயர் ஸ்தானத்தைப் பெற்றுள்ளதென்பதை எமது பல 'பொன் மொழிகளிலேயே' கண்டு கொள்ளலாம். இந்தப் 'பொன்' மொழி என்ற பெயருக்கே அடைமொழியாகி நிற்பதிலேயே பொன், தான் என்ன ஸ்தானத்தை வகிக்கிறதெனக் கூறிவிடுகிறதே!

'காலம் பொன்னானது', 'மின்னுவதெல்லாம்பொன்னல்ல',காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'..... என்பவற்றில் மட்டுமல்ல 'பொன்னார் மேனியனே...' எனத் தெய்வ வர்ணனைகளிலும் தன் நிலையைக் காட்டி நிற்கிறது.

பொன்! தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை கிடைத்தற்கரிய மகாலட்சுமி! அதிர்ஷ்ட தேவதை! அற்புதப் பொக்கிஷம்!

ஆனல்....

எமக்குக் கிடைத்தற்கரிய அந்தப் பேரதிர்ஷ்டம், இங்கே, ஆபிரிக்காவின் முடுக்கில் அமைந்த, அதிகம் பிரசித்தியடையாத, உலக நவநாகரிகத்தின் சாயல் படாத கறுப்பின மக்களின் நாடொன்றில் கொட்டிக் குவிந்து மலிந்து கிடக்கிறதே!

**எமக்குக் கிடைத்தற்கரிய அந்தப் பேரதிர்ஷ்டம், இங்கே, ஆபிரிக்காவின் முடுக்கில் அமைந்த, அதிகம் பிரசித்தியடையாத, உலக நவநாகரிகத்தின் சாயல் படாத கறுப்பின மக்களின் நாடொன்றில் கொட்டிக் குவிந்து மலிந்து கிடக்கிறதே! அலங்காரங்களும் ஆலவட்டங்களும் மட்டுமல்ல ஆயுதங்களும் இங்கே பொன்னாய் மிளிர்கிறது. இங்கே இவர்கள் தங்கள் உடம்பெல்லாம் நகையாக, கையிலும், காலிலும், தலையிலும், இடையிலும்... ஏன் மார்புக் கச்சையாகவும் பொன்னை அள்ளி அணிந்து மகிழ்வதைக் கண்டால்...**

அலங்காரங்களும் ஆலவட்டங்களும் மட்டுமல்ல ஆயுதங்களும் இங்கே பொன்னாய் மிளிர்கிறது. இங்கே இவர்கள் தங்கள் உடம்பெல்லாம் நகையாக, கையிலும், காலிலும், தலையிலும், இடையிலும்... ஏன் மார்புக் கச்சையாகவும் பொன்னை அள்ளி அணிந்து மகிழ்வதைக் கண்டால்...

பொன்னைப் பொடியாக்கி பவுடராகப் பூசிக்கொள்வதைப் பார்த்தால்..... நம்மவர்கள் மூர்ச்சித்து விழுந்துவிட மாட்டார்களா?

எங்கே அந்தப் பொன் விளையும் பூமி என்று ஏங்க மாட்டார்களா?

இருண்ட கண்டம் எனப் பெயர்பெற்றது ஆபிரிக்கா. அதில் இந்த ஒளிரும் பண்டம் ஒளிந்து கிடக்கும் நாட்டின் பெயர் தான் **கானா.**

இங்கு வசிக்கும் இனக் குழுக்களில் பெரிதோர் இனக் குழுவான அசன்டே இனக் குழுவின் (*Asante*) பொக்கிஷங்கள்தான் இங்கே அள்ளி அணிந்துள்ள பொன் ஆபரணங்கள்.

இம் மக்கள் 1300ம் ஆண்டுக் காலத்திலிருந்தே தங்கச் சுரங்கம் தோண்டுவதில் ஈடுபட்டு வருபவர்கள். (அப்படியானால் எவ்வளவு தங்கத்தை வீட்டுப் பரணில் அடுக்கி வைத்திருப்பார்கள்!) அத்தோடு இவர்களிடம் தேங்கியுள்ள மற்றொரு சிறப்பு என்னவென்றால் இன்று உலகில் மிக அரிதாகவுள்ள ஆரம்ப காலப் புராதன வார்ப்பில் உருவான தங்க ஆபாரணங்களை - சுமார் 18ம்நூற்றாண்டு அணிகலன்களை இன்னும் வைத்திருக்கிறார்கள். (நீங்கள் காலில் விழுந்து கெஞ்சினாலும் கொடுக்க மாட்டார்கள்.)

20 ஆண்டுகால யுத்தத்தின் பின் இந்நாட்டைக் கைப்பற்றிய பிரித்தானியரின் கண்ணில் படாமலே ஒளித்து வைத்து பல நூற்றாண்டுகளாக அவர்களுக்குத் தண்ணி காட்டிய இந்த அசகாய சூரர்கள் உங்களிடம் ஏமாறுவார்களா?)

இவர்கள் தங்க வார்ப்புக் கலையிலும் நூறாண்டு கால அனுபவம் கொண்டவர்கள்.

*Gold opens all doors* - எல்லாக் கதவுகளையும் தங்கம் திறக்கும் - என்பது அவர்களது நம்பிக்கை. அதை வெளிக்காட்டும் விதத்தில் திறப்பொன்றைப் பற்றியிருக்கும் கையொன்றைத் தங்கத்தில் வடித்து வைத்துள்ளனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெட்டி எடுத்து....

பல அற்புதமான கலைகளும் அபார ஆற்றல்களும் பல அதிசய வித்தைகளும்... அதிகம் அறியப்படாத வஞ்சகமற்ற சில எளிய மக்கள் கூட்டத்திடமிருந்துதான் பல சந்தர்ப்பங்களில் பிற உலகுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைத் தனதாகச் சுவீகரித்துக் கொண்ட வஞ்சக உலகம் அவற்றின் மூல கர்த்தாக்களை ஒதுக்கி உதாசீனம் செய்து விடுவதே கேடுகெட்ட எம் உலக சரித்திரத்தின் அனுபவம்.

எனினும் இன்றுவரை தம் பொக்கிஷங்களில் பிறர் கைவைக்காமல் பாதுகாத்து வந்துவிட்ட இந்த அப்பாவி இனக்குழுவுக்கு என்றுதான் இவ் வஞ்சக உலகம் உலை வைக்கப் போகிறதோ என்பதே நல்மனம் கொண்டோருக்கெல்லாம் எழக்கூடிய அச்சம்.

(உங்களில் ஒருசிலர் "ஏன்தான் இவர்கள் இந்தப் படங்களையும் தகவல்களையும் கொடுத்து, அவர்களை பேராசை கொண்ட இவ் உலகின் கண்களுக்குக் காட்டிக் கொடுக்கிறார்களோ" என்று எம்மையும் திட்டக்கூடும்.)

தங்கம் அற்புதமான உலோகம். ஆனால் மிக அரிதான உலோகம். அதனால் மிகப் பெறுமதி வாய்ந்தது. வெறுமனே அழகுக்கோ, மதிப்புக்கோ மட்டுமன்றி உலகின் பணப் புழக்கச் செயற்பாட்டுக்கான வைப்பாகவும் பங்காற்றுகிறது. பொருட்கள், சேவைகளுக்கான பண்டமாற்றாகப் பயன்படுகிறது. நாடுகளின் பணப் பெறுமதிகளைத் தீர்மானிக்கவும் நாடுகளுக்கிடையிலான கொடுப்பனவுகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. அதனால் தங்கம் உலகை ஆட்டிப் படைக்கிறது என்றால் தவறாகாது.

**இம் மக்கள் 1300ம் ஆண்டுக் காலத்திலிருந்தே தங்கச் சுரங்கம் தோண்டுவதில் ஈடுபட்டு வருபவர்கள். அத்தோடு இவர்களிடம் தேங்கியுள்ள மற்றொரு சிறப்பு என்னவென்றால் இன்று உலகில் மிக அரிதாகவுள்ள ஆரம்ப காலப் புராதன வார்ப்பில் உருவான தங்க ஆபாரணங்களை - சுமார் 18ம் நூற்றாண்டு அணிகலன்களை இன்னும் வைத்திருக்கிறார்கள்.**



பொன்னால் உடுத்தி, பொன்னையே அரைத்துப் பவுடராகப் பூசி மகிழும் பெண்கள் முகத்தில் பொங்கும் பெருமிதம்!

தங்கத்தின் சிறப்பியல்பு என்னவென்றால் அது எளிதில் மங்காதது. ஏனைய உலோகங்களின் மேற்பரப்புகள் காற்றில் உள்ள ஒட்சிசனுடன் தாக்கமுற்று ஒட்சைட்டுப் படையொன்றால் மூடப்பட்டு விடுவதால் நாளடைவில் துலக்கமிழந்து மங்கிப் போய் விடுகின்றன... அல்லது கறள் கட்டியோ செழும்பேறியோ விடுகின்றன. ஆனால் எம் தங்கத்துக்கு மட்டும் அந்தக் குணம் இல்லை. (அதனால்தான் நல்ல குணம் படைத்தவர்களை "தங்கமான குணம்" என்று நாம் புகழ்கிறோமோ?)

அதற்கு அற்புதமான ஏனைய சில இயல்புகளும் உண்டு. அது மிக மென்மையான உலோகம். நன்றாக வளையக் கூடியது. மெல்லிய கம்பியாக இழுக்கக் கூடியது. 1 அவுன்ஸ் தங்கத்தை 300 சதுர அடிகொண்ட மெல்லிய தட்டாக ஆக்க முடியுமென்றால் நம்புவீர்களா!

அத்தனை மெல்லிய அளவில் கூட அதை உருக்கி, நன்றாக விரிவடைய வைக்க முடியுமென்பதே எம் நகைப் பிரியர்களுக்கு தங்கம் தந்துள்ள வரப்பிரசாதம். அதனால் சிறிதளவு தங்கம் கொண்டே பொலிவான நகைகளை விருப்பமான வடிவமைப்புக்களில் மாட்டிக்கொண்டு நம் நாகரிக நாரிமணிகள் நடமாட முடிகிறது.

தங்கம் உடலுக்கு அழகு மட்டுமல்ல ஒருவகையில் சுகாதார ரீதியிலும் உதவுகிறது. மிகச் சிறந்த வெப்பக் கடத்தியான தங்கம் உடலின் வெப்பத்தையும் தணிக்க உதவுகிறது. மெல்லிய பொற்தகடுகள் 98 சதவீதமான செங்கீழ் கதிர்களைத் தெறிக்கச் செய்கிறது. அதனால் செய்மதிகளிலும் விண்கலங்களிலும் வெப்பத்தைக் கட்டுப்படுத்த தங்கமே பயன்படுத்தப்படுகிறது.

பெரிய செல்வந்தக் கட்டடங்களிலும் யன்னல் நிலைகளுக்கு முலாம் பூசிச் சோடித்து வெப்



தங்கம் எல்லாக் கதவுகளையும் திறக்கும்!

## தங்க மார்புக் கச்சை

இது மில்லேனியத்தை நினைவுகூர ஜப்பானில் தயாரிக்கப்பட்டிருக்கும் 24 கரட் தங்க இழைகளால் மட்டுமே தயாரிக்கப்பட்ட மார்புக் கச்சை. சரியாக இதன் நடுவில் 15கரட் இரத்தினக் கல்லொன்று தொங்கவிடப்பட்டுள்ளது. இதன் விலை என்ன தெரியுமா? 13 கோடியே 87 லட்ச ரூபா. (1.9 மில்லியன் அமெரிக்க டொலர்)

**பி.கு.:** இலங்கையில் இந்த விலைக்கு 462333 தரமான மார்புக் கச்சைகள் வாங்கி விடலாமாம். அடேயப்பா!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பத்தை தெறிக்கச் செய்து குளிருட்டிகளின் வேலையை மீதப் படுத்துகிறார்கள்.

அத்தோடு எம் சொத்தைப் பற்களை அடைப்பதில் நிரப்பிகளாவும் இன்னும் பல பற்சிகிச்சை இரசாயனப் பொருட்களிலும் பயன்படுகிறது. ஏன், தங்கப் பல்லுக் கட்டிக்கொண்டு அட்டகாசமாகச் சிரித்து ஜம்பமடிக்கும் எம்

பூமியின் ஆழத்திலிருந்து மற்றைய கனியுப்புகளுடன் சேர்ந்து பகுதி கரைந்த திரவமாக மேற்பரப்புக்கு வந்து சேர்ந்து உறைந்திருக்கலாமென நம்புகிறார்கள். அவை தீக்கற் பாறைகளில் படிவங்களாகக் காணப்படுகின்றன.

நல்லது. தங்கத்தின் வரவால் பூமி ஜொலிப்பின் யார் அதை வெறுக்கப் போகிறார்கள்....
ஆனால் உலகை
அழகாக்கும்
அது ஏனோ



பெரிய மனிதர்களை நீங்கள் கண்டதில்லையா?

மெல்லிய தகடாக்கப்பட்ட தங்கம் பச்சை ஒளியை ஊடுருவ விடக் கூடியதாம்.

பொன்னின் கலவை கொண்டதால் தான் ரூபி என்று

அழைக்கப்படுகிற அந்த வகை இரத்தினக் கல்லில் அதன் பிரத்தியேகமான செந்நிறம் ஈட்டப் படுகிறதாம்.

தங்கம் இயற்கையில் கலப்படமற்ற தூய நிலையிலேயே பெறப்படுகிறது.

எல்லாம் சரிதான், இத்தனை தம்பட்டமடித்துக்கொள்ள ஏதுவான சிறப்புகளைக் கொண்டிருக்கும் தங்கம் இப் பூமிப் பரப்புக்கு எப்படி வந்தது என்பதைத்தான் இன்னும் சரிவரத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

மக்களின் மனங்களை மட்டும் அசுத்தப்படுத்தி விடுகிறது. வெப்பத்தைப் போக்கி மனித உடலைக் குளிரவைக்கும் இவ் உலோகம் உள்ளத்தில் மட்டும் எப்படி ஒரு பேராசை என்ற ஆறாப் பெரு நெருப்பைப் பற்ற வைத்து விடுகிறது?

**- துவாரகா**

(நன்றி : நஷனல் ஜோகிர.ஃபி)

# சிறுகதை எழுதுவது எப்படி?

சிறுகதை...? சிம்பிள்!

மின்னல்போல சிறிதாக- தெளிவாக பளிச்சென்று இருக்கவேண்டும். அவ்வளவுதான் அதன் இலக்கணம்.

படிக்கிறவர்களைப் பாதிக்க வேண்டும்.

குறைந்தது சில மணி நேரமாவது படித்தவர் அந்தக் கதையைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கச் செய்யவேண்டும். அதுதான் இங்கு இலக்கணம்!

எப்படி அப்படியொரு 'பாதிக்கின்ற' கதையை எழுதுவது?

சொல்ல வேண்டுமே, சொல்ல வேண்டுமே என்று மனதுக்குள் ஒரு துடிப்பு இருந்துகொண்டே இருக்குமே, அந்தத் துடிப்பு வேண்டும். அப்படி ஒரு துடிப்போ, சொல்லியே ஆகவேண்டும் என்கின்ற ஒரு விஷயமோ உங்களிடம் இல்லையெனில் கதை எழுதுவது வீண். கதை மட்டுமல்ல, கவிதை, கட்டுரை எல்லாமே அப்படித்தான்.

கதை எழுதவேண்டுமே என்பதற்காக ஒரு கருவை கற்பனை செய்து உருவாக்கி எழுதினால், அது அழகான கதையாக இருந்தால்கூட யார் மனதையும் சென்று தொடாது போகலாம். மனதிலே இருந்து கரு வரவேண்டும். அது எம்மைப் பாதித்து இருக்க வேண்டும். எம் வாழ்வில் நடந்ததாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. நாம் பார்த்ததாக - கேட்டதாகக் கூட இருக்கலாம். ஆனால் எம் மனதைத் தொட்டதாக இருக்க வேண்டும். அப்போதுதானே அது மற்றவர்களைத் தொடமுடியும்!

பிழையில்லாத மொழி, அழகான நடை, நல்ல சொற்கள்.... இவையெல்லாம் நல்ல கதைக்கு அலங்காரம் செய்யும். கவனிக்க, அலங்காரம் மட்டும்தான்! அர்த்தம் தருவது உங்கள் கதையில் அடங்கியுள்ள விடயம்தான். ஆனால் விடயம் நன்றாக இருந்து அதை வெளிப்படுத்தும் முறை மட்டமாக இருந்தாலும் கதை சோடை போய்விடும்.

நல்ல எழுத்தாளர்கள் பேனாவைத் திறந்தவுடன் மடமடவென்று எழுதி முடித்துவிடுகிறார்களே, எம்போன்றவர்களுக்கு மட்டும்தான் எப்படித் தொடங்குவது, எப்படிச் சொல்வது என்ற திண்டாட்டம் என்று எண்ணித் தளர்ந்துவிடாதீர்கள்.

சில கதைகளைப் படிக்கிறோம். அவை நம்மை சில மணிநேரங்கள். ஏன் சில நாட்கள் கூட மனதை விட்டு அகலாது இருக்கின்றன.

நாம் என்றோ படித்த பிரபல சிறுகதைகளின் சாரம் இன்னும் நம் நினைவில் உள்ளதென்றால் அது அந்தக் கதையின் கதாபாத்திரங்களின் "உணர்ச்சித் தீவிரம்" என்றே சொல்லலாம்.

மாபசானின் சிறுகதைகள் நம் நெஞ்சை விட்டு அகலாதவை. நம் தி. ஜானகிராமன் தன் சிறுகதைகளில் மனித உணர்வுகளின் பாதிப்பை மிகத் துல்லியமாக, மிக இயல்பாக சித்திரித்திருப்பார்.

புதுமைப் பித்தனின் சிறுகதைகள் கருத்தின் வேகத்தை ஒட்டி அமைந்திருக்கும். சமுதாயப் போக்கினை அவர் தன் பாணியில சொல்லியிருப்பார்.

பொதுவாக எழுத்தாளர்கள் நிறைய படிக்க வேண்டும். படித்து பலதும் அறியவேண்டும். சிந்திக்க வேண்டும்.

சமுதாயத்தை, நம்மைச் சுற்றி நடப்பவற்றைக் காணவேண்டும்.

யார் சமுதாய அல்லல்களைக் கண்டு கண்ணீர் வடிக்கிறார்களோ, யார் அநீதிகளைக் கண்டு கொதித்து எழுகிறார்களோ, இயற்கை அழகைக் கண்டு மலைத்து நிற்கிறார்களோ அவர்களே எழுத்தாளர்கள்.

ஒருமுறை பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனிடம், "ஏன் இப்போதெல்லாம் நீங்கள் எழுதுவதில்லை" என்று கேட்டதற்கு "எனக்கு இப்போதெல்லாம் கோபம் வருவதில்லை" என்றாராம். உணர்ச்சிகளின் வடிகாலே எழுத்துக்கள்.

அதனால் சிறுகதை எழுதத் தொடங்குமுன் உங்கள் நெஞ்சைத் தொட்ட நினைவுகளையே கருவாக்க முயற்சியுங்கள். ஒரு முக்கிய நிகழ்வைச் சுற்றிக் கதையை ஆரம்பியுங்கள். உங்கள் சிறுகதை வெற்றிபெறும். மற்றவர் மனதைத் தொடும். நீங்களும் சிறந்த சிறுகதை எழுத்தாளர் ஆகலாம். ●





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மொறுமொறு சிப்ஸ்



இப்போது உலகெங்கும் ஒரு ஸ்டைல் பரவுகிறது. தங்கள் மேனியை வர்ணப் பூச்சினால் அலங்கரித்துக் கொண்டு திரிகிறார்கள். இப் பூச்சைப் பூசினால் உடம்பு தெரிவதில்லை. சிலர் துணிந்து தமது நிர்வாண மேனிக்கே இப் பூச்சினால் ஆடை போல் வரைந்து கொண்டு கெமராக்களுக்குப் போஸ் கொடுக்கிறார்கள். அப்படித் தம் உடம்புகளில் பூச்சுப் பூசி அலுத்துப்போய் விலங்குகளில் பூசிப் பார்க்கப் புறப்பட்ட ஒரு வினோத முயற்சிதான் இதுவோ என இப் படத்தைப் பார்த்ததும் எடுத்த எடுப்பில் யாரும் எண்ணிவிட முற்படுவது இயல்பு. ஆனால் உண்மையில் இங்கு வர்ண அலங்காரங்களுடன் நிற்கும் அப்பாவி உருவம் ஒரு உயிருள்ள மாடு அல்ல. உயிர் மாடொன்றைப் போல அதே அளவில் கன்னார் இழையினால் (Fiber Glass) செய்யப்பட்ட சிலைதான். கடந்த ஜூன் மாதம் *Jass cow* என்ற பெயரில் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் நிகழ்ந்த கண்காட்சியொன்றில் இவ்வாறு 300 அலங்கார மாடுகளின் சிலைகள் வைக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்டன. அதில் இவ்வாறு ஒரு சிலை 4.1 மில்லியன் அமெரிக்க டொலர் விலைக்கு ஏலம் போயினவாம். பாவம் உயிர் மாடுகள். அதுக்கெங்கே அவ்வளவு மவுசு!

பேர்ளின் சுவர்! இடிக்கப்பட்டுவிட்ட பின்னும் இன்னும் ஜேர்மனியர்களின் மனங்களில் நிலைத்திருக்கும் அந்த வரலாறு மறவாத சுவர்தான் இது. 2ம் உலக மகா யுத்தத்தின்பின் ஹிட்லர் தோல்விகண்டு ஜேர்மனி வீழ்ந்தபின் அந் நாட்டைப் பங்குபோட முனைந்த வல்லரசுப் போட்டியால் ஜேர்மனியை கிழக்கு மேற்கெனத் துண்டாடி இரண்டுக்கும் நடுவே ஒரே நாளில் கட்டப்பட்ட அந்தச் சுவர் நாட்டை மட்டுமல்ல, அரசியலை மட்டுமல்ல, சமூக வாழ்வை மட்டுமல்ல, பொருளாதாரத்தை மட்டுமல்ல.....மக்களின் மனங்களையுமல்லவா பிரித்துப் போட்டது! அன்று தன் பிரிவினையை இரக்கமிழந்த இறுகிய தோற்றத்துடன் பறைசாற்றி நின்ற அச் சுவரையும் அதன் மீது காவல் புரியும் படை வீரர்களையும் தன் பிஞ்சு விரலால் சுட்டிக்காட்டி அடுத்த பக்கத்தைத் தரிசிக்க முடியாதாவென ஏங்கிய சின்னஞ் சிறுமி இவள். இந்தச் சுவர் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் திகதி இடிக்கப்பட்டு, இம் மாதம் 10 ஆவது ஆண்டு நினைவு அங்கு கொண்டாடப் படுகிறது.



பிரேதப் பெட்டிகளைச் சுமந்தபடி நடந்து செல்லும் இவர்கள் யார்? இவர்களுக்கு நடந்த சோகம் என்ன? தென் கிழக்கு பெரு நாட்டில் டௌகாமராக்கா எனும் கிராமத்தில் சென்ற மாதம் 23ம் திகதி நிகழ்ந்த சோக விபத்து அது. தமது ஆகாரமாக பசுப்பாலை அருந்திய 26 பச்சைக் குழந்தைகள் துடித்துத் துடித்து மரணமானார்கள். பாலில் நஞ்சு கலந்திருந்ததே காரணம். இந்த நஞ்சு எங்கிருந்து வந்தது என்பது தெரியவில்லை. ஆனால் கிருமிநாசினிகளில் பாவிக்கப் படும் பொஸ்பரஸ் இப் பாலில் காணப் பட்டது. இறந்த இக் குழந்தைகளுக்காகவே சவப் பெட்டிகளைக் காவிக்கொண்டு இக் கிராம வாசிகள் நடந்து செல்கிறார்கள். எம் நாட்டிலும் கடும் யுத்தத்தல் மடியும் இளைஞர்களுக்காக பெருமளவு பிரேதப்பெட்டிகள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு வைக்கப்படுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. அதாவது மரணத்தை முன்கூட்டியே வாங்கி வைக்கவும் தொடங்கிவிட்டோம்!





இது என்ன பிரமாண்டமான காட்டுமரமா? இப்படிக் கட்டியிழுத்துச் செல்கிறார்களே! இல்லை, இது ஒரு யானைத் தந்தம். அப்படிக் கட்டியிழுத்துச் செல்லுமளவு பிரமாண்டமான தந்தமுள்ள யானை இப்போது எங்கே இருக்கிறது என்று வியக்கிறீர்களா? இது இன்றைய யானையல்ல. 23000 ஆண்டுகளுக்கு முன் இறந்த ஆதிகால உரோமம் கொண்ட யானை. கடந்த ஒக்டோபர் மாதம் 20ம் திகதி ரஷ்யாவின் கடும் பனி சூழ்ந்த சைபீரியாவில் விஞ்ஞானிகள் இதைக் கண்டுபிடித்தனர். சைபீரியாவில இவ்வகை யானை முதன்முதல் இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தளவு பெரிய தந்தத்தை அடையும் வரையில் எப்படி இப்படியான ஒரு யானை இப் பயங்கரக் குளிர்ப் பிரதேசத்தில் உயிர் வாழ்ந்திருக்கிறது என்பதுதான் விஞ்ஞானிகளுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காதலாகி... கசிந்து

'உன் கோத்தயோட போய்ப் படு கொக்காவோட போய்ப் படு'
'உன் கொத்தை ஆடின ஆட்டம் எங்களுக்குத் தெரியாதா'
'யாருக்குப் பிறந்தனியோ?'
(இவன் படுக்கிறத்துக்கு அலையிற மாதிரி இன்னும் கன கத)

மூதேசி, என்ர அம்மாவைத் திட்ட இவள் ஆர்? நான் வாழ்ந்த 26 வருஷ காலத்தில ஒரு பொம்பிளைக்கூசு வார்த்தைகளை வாயால கக்கிறத முதல் தடவையா கேட்டன். அம்மா தின்னப்போறன் எண்டாலே பேசுவா. சாப்பிடப் போறன் எண்டு சொல்லு என உறுக்குவா.

(நான் பாருங்கோ இந்தப் பொடியனுக்குத் தூரத்துச் சொந்தம். அங்க ஊரில இருக்கேக்க வீட்ட விட்டு வெளியில இறங்கினா பள்ளிக்கூடம் அல்லது ரியூசனுக்காத்தான் இருக்கும். அதுவும் இல்லாட்டி கடைக்காயிருக்கும். தப்பித்தவறி எங்காவது மேயப் போனாலும் கணக்கா கட்டுக்கு வந்துபோடுவான்.

பிரான்சுக்கு வந்த புதிசில இவன் முதல் செய்தது, கிடந்த தமிழ் படமெல்லாம் பாத்து முடிச்சது தான். இந்தத் தமிழ் சினிமா ஒரு கெட்ட சாமான். பாக்கேக்க ஒருத்தரும் இப்படியெல்லாம் நடக்குமெண்டு நம்பியெண்டு பாக்கிறேல்லத்தான் எண்டாலும் இந்தக் குதியாட்டங்கள் மண்டைய விட்டு விலகுறேல்ல. கனபேற்ற கலியாண வீட்டுக் கொப்பிகளில பாத்திருக்கிறன் ஆளையாள் தீத்திறதும் கனக்க ஏன் டியட் மாதிரி ஆளையாள் மரத்தைச் சுத்தி ஓடிப் படமெடுத்தும் பாத்திருக்கிறன். இப்பிடி எல்லாம் அவையள் படுத்த வாழோணும் எண்டு கிடந்து தவிக்கிறது சாதாரணமாப் போச்சு.

இவனுக்கு நடந்த விசயமும் இதுதான். இரத்தத் துடிப்போட தவிப்பும் கூடிப்போட்டுது. விசயம் இதுதான். இரத்தத் துடிப்போட தவிப்பும் கூடிப்போட்டுது. விசயம் இதுதான் இவற்ற காதல் கிழிஞ்சு போச்சு. பொட்டையின்ர தாய்க்காறி ரெலி.்.போன் எடுத்து கிழிகிழி எண்டு கிழிச்சது இதுக்குத்தான். அவவின்ர பெட்டயோட அவள் பெரிய பிள்ள ஆக முதலிலிருந்தே இவருக்கு காதல் தெரியுமோ ஆருக்கும்?

கிட்டடியிலான் சாமத்தியவீடு கொண்டாடி எல்லாம் நல்லபடியாத்தான் போய்க் கொண்டிருந்தது. சாடைமாடையான சந்தேகத்தில அத்தக்காறி இவளையும் அவனையும் வச்சு பகிடி பண்ணேக்க வெக்கப்பட்டப்படி விசயத்த அரைகுறையா விட்டுப் போட்டாள். அத்தக்காறி இந்த விசயங்களில் வலு கெட்டிக்காறி. சத்தியம் கித்தியம் எல்லாம் செய்து ஒரு குஞ்சுக்கும் சொல்லமாட்டன் எண்டு மெல்ல விசயத்த கறந்து போட்டா. பிறகு என்ன.... எல்லாம் பீச்சிப்போன கதைதான்.

இது நடந்து கன நாள் இருக்காது இன்னுமொருக்கா இவர் கையோட பிடிபட்டுப் போட்டார். அது அவற்ற பிழை. நேரம் போட்டுது போப்போறன் போப்போறன் எண்டு நிண்டவள நேரம் கிடக்கு நேரம் கிடக்கு எண்டு நிப்பாட்டி வைச்சிருந்தது இவற்ற பிழை. சந்தியில கதைச்செண்டு நிக்கேக்கை தமயன் வந்திட்டான். இவளுக்குப் பள்ளிக்கூடம் விட்டு 45 நிமிசத்துக்குப் பிறகுதான் அவனுக்கு விடுகிறது.)

ஒருக்கா நினைச்சன் ஓடிப்போய்க் காலில விழுவமோ எண்டு. 'அய்யோ ராசா வீட்ட போய்க் காட்டிக் குடுத்திடாத''யெண்டு கெஞ்சுவமோ எண்டு நினைச்சன். கெட்ட காலத்துக்கு பேசாம விட்டிட்டன்.

(வீட்டுக்குள்ள கால் வைக்க முதலே அரிச்சனையத் துவங்கிப் போட்டான் தமையன். பிறகு எல்லாருமாச் சேந்து பெடிச்சியை துவசம் செய்து போட்டுதுகள்.

போன முறைதான் கிடந்த இரும்புக் கம்பியள் பலகைகள் எல்லாத்தாலையும் பொடிச்சிக்கு விளாசின விளாசல்ல பிரஸ்ஸர் கூடி இந்தா அந்தா எண்டு தாய்க்காறி ஆஸ்பத்திரியில கிடந்தவ. யோசிச்சதால வருத்தம் எண்டு டாக்டர் சொல்லிப் போட்டாராம். இவள் பொட்டயால அவள் யோசிக்கிறாள் எண்டு வெளியால கத. மோனை கொம்மாவ யோசிக்க விடாதையெண்டு தேப்பன் ஒரே வெருட்டல்.)

'என்னடி உன்ர அம்மாவுக்கு ஏதும் நடந்தா? பிரச்சினை வேண்டாம் பிரிஞ்சு போவம்' எண்டு சொல்லிப் பார்த்தன்.

'அவ செத்தா அது விதி. நீ என்ன விட்டுப் போட்டயெண்டா நான் தற்கொலை செய்து போடுவன்' எண்டு



- உதயசேனன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை

அவள் ரெலிபோனிலகத்தினபிறகு எனக்கு மனம் வருமோ?

காதல் எண்டு இறங்க முதல் நானும் கன தடவை யோசிச்சனான். ஒரே பெட்ட. ஊரிலையே எங்களவிட காசுக்காரர் - இங்கயும் நல்ல நிலயிலான் இருக்கினம் - சொந்த வீடு, கார் உட்பட. அவளில நான் ஒரு கண்போட இவைகளும் காரணங்கள். இவவ்ட்ட நான் கட்டினா எனக்கும் பெருமை, என் வீட்டுக்காரருக்கும் பெருமை. இப்படி காரணங்களை மேலும் விரிக்கலாம். ஆனாலும் எனக்கு உண்மையிலேயே காதலும் இருந்தது.

(மேற்குறிப்பிட்ட காரணங்களால் தான் தங்கட பிள்ளைய இவன் மடக்கப் பாக்கிறான் எண்டு அவையள் நினைக்கினம். ஆள் எல்லாம் வெண்டிருப்பான். ஆனா பெட்டைக்கு இப்பான் வயது 17. இன்னும் ஒரு வருசம் கடக்கேலாமப் போட்டுது. மூத்தவனுக்கே வயசு 21. அவையள் கற்பனையே செய்திருக்காயினம் தங்களுக்கு இப்பிடி வேகமா ஒரு பிரச்சினை வரும் எண்டு)

விசயம் கேள்விப்பட்டு சீவரெத்தினத்தார் மினக்கெட்டு ரெலிபோன் எடுத்து கதகதயாச் சொன்னார். அவள் அப்பிடி இப்பிடி எண்டு. "அந்தக்காலத்தில உனக்குத் தெரியாதடா தம்பி இவளின்ர ஆட்டம் அதுக்குள்ள உன்ர தாயப் பத்தி பேச வந்திட்டாள்."

"ஒண்டுக்கும் யோசிக்காத எல்லாரும் வலிய வருவினம். விசயத்த பரப்பிப்போடு. லாச்சப்பலில நியூஸ் வெளிக்கிட்டிட்டுதெண்டா பிறகு யாருக்கவ கட்டிக் குடுக்கிறது"

(சீவரத்தினம் வலு கேவலமான ஆள். இண்டைக்கும் பொடிச்சிகளின்ர குண்டிகளப் பார்த்துக் கொண்டு திரியிற பேர்வழி. இவற்ற பொட்ட சொந்த மாமன காதலிச்சு கலியாணம்கட்டினதுகொஞ்சநாள் ஒரு பெரிய கத. கதயோட கதயா இவற்ற விலாசத்தையும் சேர்த்துத் தான் கதைச்சவன்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் தனித்தனியா பழி வாங்க பழி கிடக்கிறான் மனுசன். அவற்ற கரிசனை விளங்காத அளவுக்கு இவன் பொடியனும் அவ்வளவு விசரனில்ல.)

எல்லாற்ற கரிசனையும் எனக்கு விளங்கும். நான் ஆஸ்பத்திரியில கிடக்கேக்க இவரோ அல்லது பிராக்கட்டுக்க கதைக்கிறவரோ கூட வரேல்ல. என்ர வேதனை எனக்குத்தான் தெரியும். ரெண்டு மூண்டு நாளா சரியாச் சாப்பிடாமக் கிடந்ததாலான் நான் ஆஸ்பத்திரி போக வேண்டி வந்தது. ஒண்டும் தின்னப் பிடிக்கேல்ல. தொண்டைக்குள்ள கட்டி கிடந்தமாதிரி வேதனை. போதாக்குறைக்குசனங்களின்ர நாக்குகளும் எனக்காகக் காத்துக் கிடந்த மாதிரி இருந்ததால நான் வீட்டுப் பக்கமும் போகேல்ல.

(இவர் சமறிக்கிருந்தது சித்தப் பற்ற குடும்பத்தோட)

களைப்புக் கூடி நடக்கிறது நடக்கட்டும். வீட்டை போவம் எண்டு வீட்டுக்குக் கிட்ட வரேக்க மகேசன் (பொட்டயின் தமையன்) சிவபாதத்தார் (அவளின்ர தகப்பன்) சீவரத்தினத்தார் மூண்டு பேரும் கதவத் திறந்தெண்டு இறங்கி வருகினம்.

வயிறு ஒரு கலங்கு கலங்கியது - பசியும் களைப்பும் - பயமும் தலைக்குள் புரக்கேறி ஒரு சுற்றுச் சுற்றியது - விழுந்திட்டன். விழுந்தனான் நல்ல சாட்டாப் பட்டதால எழும்பேல்ல. பொம்பியர்சுக்கு அடிச்சு ஆஸ்பத்திரியில கொண்டு போய்ப் போட்டினம். 'பொடியன் மயங்கிவிழுந்திட்டான்' எண்ட கதை கிளம்பட்டுமன், இப்பிடியாவது என்ர கவலை பரவட்டுமன் எண்டது என்ர நினைப்பு - நடந்து தனிமையைச் சுவாசித்து சில சனியன்களுடன் சமறிக்கு வந்து குந்தினான்.

### II

யாராலயும் துரத்தப்பட்டு வந்து சமறிக்கிருந்தா வாழ்க்கை குடுத்த மாதிரி நினைக்கிறான்கள் இவங்கள். அதுவும் பொட்டப் பிரச்சினையில வெளிக்கிட்டு வந்தவனுக்கு போக்கிடம் இருக்காது எண்ட தெம்பு.

சமைச்சுப்போடென்றுபுறாஅரிசி வாங்கியந்திட்டான் புண்ணாக்கு. ஏற முடியாது. வேற இடம் ஒண்டு தேடி வைச்சிட்டுத்தான் அதைச் செய்யோணும். அதுவரைக்கும் "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்று பாடிக்கொண்டு சாப்பிட வேண்டியதுதான்.

எல்லாம் பிழைச்சுப் போய் இப்ப கிடந்து தவிக்கிறன். ஐயோ இவங்களோட நான் படுற பாடு. ஒரு விசரன் கக்கூசுக்கு போனா போனதுதான். வெளியில வரான். சிங்கில கைய நனைச்சு முகத்த துடைச்சுப் போட்டு பொக்கற்றுகளுக்கையும் தேடிப் பழைய சுயிங்கத்த எடுத்து வாயில போட்டெண்டு வேலைக்குப் போக வேண்டிக்கிடக்கு.

இதுக்குள்ள நான் கனவில கத்திறன் எண்டு ஒரே கிண்டல். ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமா விடியக் காத்தால காலாட்டிக்கொண்டு சரிஞ்சு கிடந்தனான். நித்திரையாய்ப் போட்டன். நல்ல சிரிப்பு - கிக்கிக்கீ எண்டு நல்ல சிரிப்பு. பக்கத்தில கிடந்த மற்ற விசரன் எழுப்புவமெண்டில்ல. வடிவா பாத்தெண்டு கிடந்திருக்கிறான். திடுக்கிட்டு முழிச்சுப் பார்த்தன். ஒரே வெக்கமாப் போச்சு. அவங்களு கிண்டலுக்கு பேந்து அளவு கணக்கில்ல.

இதப் போலான் ஒருக்கா RER இல் வேலை முடிஞ்சி சரியான களைப்பில வந்தனான். மெல்ல அரண்டிட்டன். வேலை முடிஞ்சு, போகமுதல் 'சுவரையெல்லாம் ஏறிக் கழுவிப்போட்டுப் போ' எண்டிட்டாங்கள். சரியான நித்திரை வெறியில நல்ல சிரிப்பு. முழிச்சுப் பாத்தா - ரெயின் - முன்னாலை ஒரு அடையான் திடுக்கிட்டுப் போய் இருக்கிறான்.

என்ர அம்மாவும் இப்பிடித்தான். ஆனா அவ கொஞ்சம் வேற மாதிரி. 'ஆ ஊ' எண்டு அடித்தொண்டையில இருந்து கொஞ்சம் அவலக் குரலா வரும். எணை எணை எழும்பணை எண்டா 'ஆ' எண்டு திடுக்கிட்டுப்போட்டு பேசாம கிடந்திடுவா. 'என்னணை ராத்திரி கனவு கண்டனி' எண்டு ஒரு நாளும் கேட்டதில்ல. ஊரில பல பேர் பல மாதிரி கத்திறத பாத்திருக்கிறன். இதில விசயமிருக்கு. உள்ளுக்க ஒரு வில்லங்கமான மர்மம் கிடக்கு. ஏன் தெரியுமோ? இப்ப நான் சிரிக்கிறேல்ல அனுங்கிறனான். எவள நெச்சும் அழுதபடி படுக்கிறேல்ல. எண்டாலும் 'ம் ம்' எண்டு அனுக்கம்.

(முந்தி மாதிரியில்லாம இப்ப கிண்டலுக்குள்ளால இவனை அவங்கள் போட்டுத் திட்டிறது சாதாரணமாய்ப் போச்சு. ஆள் ஒரு மாதிரி கேஸ் எண்ட முடிவுக்கு வந்திட்டாங்கள். இவனும் வெளிப்படயா கதைப்பம் எண்டில்ல எல்லாத்தையும் மூடிமறைக்க வெளிக்கிடுறது.)

'சொந்த மச்சாள் தான்டாப்பா ஆனால் உள்ளுக்குள்ளால கன பிரச்சினையள்' - இவங்களுக்கு என்னெண்டுதான் விளங்கப்படுத்திறது? வெளியில சொல்லக்கூடிய நிலைமையிலா நானிருக்கிறன்?

என்ர காதலிலும் சந்தேகங்கள். யாருக்கும் தெரியாது அதன் சுவைகள்.

(இவற்றை வெறும் பம்மாத்துக் காதலெண்டு அவங்கள் நினைச்சா இவருக்கென்ன? தன்மானப் பிரச்சினையாம்? தன்னோட மட்டும் பழசுகள கதைக்கிறான். வெளியில கொட்டியிருந்தா இந்த மாதிரி அனுங்க வேண்டி இருக்காது. இவர் என்னத்தச் சொன்னாலும் கவல அரிக்கத் தொடங்கிட்டுது ஆளை.)


(எனக்கு சில விசயங்கள ஆள் சொல்லியிருக்கு)

### III

தண்ணி தாடியெண்டா பேணியை விழுங்கிறது போல் வாய் முழுக்க உறிஞ்சி பின் அதையே திரும்ப கொப்பளிச்சு எடுத்துத் தருவாள். சாப்பாட்டில துப்பிப்போட்டுத்தான் சாப்பிடத் தருவாள். 'வாயில கொஞ் சிறியள் என்ன நினைப்பெண்டு பார்த்தனான்' எண்டு விளக்கம் வேறு வரும்.

யாருமற்ற பொழுதுகளில் அவளோடு வாழ்ந்திருக்கிறேன். குறைந்தது மாதமொரு நாளாவது, தகவல் கிடைத்ததும் சந்தியில ஒளிச்சு நிண்டு வடிவாப் பாத்தபடி நிப்பன்.

'மூத்தவர் போறார், இரண்டாமவர் தேப்பன், தாய். இனி மச்சாள் தான், பிறகென்ன ஒரு முழு நாள் எனக்குத்தான்' என்றபடி வீட்டுக்குள் ஓடிப்போய்ச் சேருவேன்.



காதல் பஞ்சம் வந்து நொந்தே...

முத்த நிவாரணம் வேண்டாமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உப்புப்புளி எடுப்பதில் இருந்து சமையல் முடிந்து ஆளையாள் தீத்துவது வரை கொண்டாட்டம் தான். இந்தப் படங்களில வாறத எல்லாம் அப்படியே வாழ்ந்து - அதற்குப் பெயர்தான் வாழ்க்கை.

ஒரு நாள் அல்லோலகல்லோல மாக சாப்பிட்டுக்கொண்டிருகேக்க பாவி மனுசன் வந்திட்டான். கதவு திறக்கிற சத்தம் தொண்டைக்க தண்ணிய வறட்டி எடுத்துப் போட் டுது. பக்கத்தில மாமின்ரை சாறி தான் கிடந்தது. ஜன்னல்ல கட்டிக் கொண்டு இறங்குவம் எண்டு யோசி ச்சு முடிச்சுப் போடுறதுக்குள்ள கத வத் திறந்து உள்ள வந்துட்டான் பாவி மாமன். அந்தரத்தில என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. கட் டிலுக்குக் கீழ அப்படியே கோப்பை யோட பதுங்கிட்டன். தற்சமயம் குனிஞ்சு பார்த்தாலும் எண்டு பெற் சீற்றை இழுத்து மறைச்சன். உள்ள ஒரே இருட்டு மயம். எனக்கு மரணப் பசி வேற. முட்டையைக் கடிச்சு விழுங்கினேன். மகளோட கதைக்கி றது கேட்டது. வந்த கழுத தின்னு வம் எண்டில்ல. களைப்பாக் கிடக் கெண்டு போட்டு போய் கட்டிலுல விழுந்ததுதான். 5 நிமிசத்துக்குள்ள கொறட்டைச் சத்தம் வீட்டைத் தூக் கித் தூக்கிப் போட்டது. சப்பாத்தக் கழட்டி கையில எடுத்தெண்டு மெது வா பெருவிரலால நடந்து ஆள விட்டால் காணுமெண்டு வந்து சேந் திட்டன்.

முந்தியுமொருக்கா மாட்டப் பாத் தனான். மச்சாளோட சொந்தம் கொண்டாடிப் போட்டு வரேக்க வந் திட்டான் பாவி. மம்மல் இருட்டு. நல்ல காலம் எதிர்பார்த்தெண்டு வந்தபடியா நான் முதல்ல கண்டு போட்டன். ஒளிக்க - திரும்ப இட மில்ல. பக்கத்தால நடந்து போனா லும் தெரிய வரும். ஒரு வான் கார் இல்லாத வெறிச்ச றோட் அது. என்ன செய்யிறதெண்டு தெரியாம மெதுவாக் குனிஞ்சு நாலு காலால நடந்து வந்திட்டன். நாயெண்டு நினைச்சிருப்பர்.

(சக்தி கடையோ குமார் கடையோ வாற ஒவ்வொரு படமும் தவறாம எடுத்து எல்லோரும் பாக்கிறபடியா இந்தக் காதல் லீலைகளை சொல லிக்கொண்டு வீணா மினக்கெடத் தேவையில்லை. இந்தப் பினாத்தல் கள் இந்தக் காலத்துப் பெடி பெட் டையள் எல்லாரும் செய்யுறதுதான். ஆனாலும் இவன் ஆள் சூரன். பெட் டையின்ர சித்தப்பர், தகப்பனுக்கு ஊசி கொடுத்து வண்டில்விடப் பாத் தவர். ஆளைக் கொண்டே பொலி சிட்ட மாட்டிற பிளான் அவைய ளுக்கு. கதைச்சதெல்லாம் கூட கசற் பண்ணி வைச்சிருக்கிறான் இவன்)

என்னைப் பற்றி அவைக்குச் சரி யாத் தெரியாது. எடுத்து நல்ல கிழி. உங்கட பொட்ட எனக்கனுப்பின லெட்டருகள் கிடக்கு, சேட்டுகள் கிடக்கு வேணுமா? இதையெல்லாம் விடுங்க. உங்கட பொட்டயின்ர காதல் மொழியக் கொஞ்சம் கேளுங்க எண்டுபோட்டு ஏற்கனவே சரியான இடத்தில செற் பண்ணி வைச்சி ருந்த வாக்மேனை டெலிபோனுக் குப் பக்கத்தில பிடிச்சன். "ஐயோ அத்தான் சீ... விடுங்கோ" மாமாவு க்கு காது வெடிச்சிருக்கும் எண்டு நினைக்கிறன். டெலிபோனை பொத் தென்று வச்சவர்தான். இனிமேலும் பொலிஸ் பக்கம் நினைச்சுப் பார்க்க மாட்டார் எண்டு எனக்குத் தெரியும்.

நான் விசரன். அப்பவே மேரியில பதிஞ்சிருக்கோணும். வயசு வரும் வரையும் வச்சிருந்து போட்டு இந்தா உன்ர சரக்க கொண்டு போ எண்டு அவங்களே கூப்பிட்டு தந்துவிட்டி ருப்பாங்கள். நான் விட்ட பிழை... என்ன செய்யிறது?

(கசற் விசயம் இவர் காவுக்க காதல் செய்யேக்க சாதிச்சது. ஆளுக்கு வடிவாத் தெரியும் பொட்டைக்கு வயசு குறைய இண்டைக்கில்லாட் டியும் ஒரு நாளைக்கு பிரச்சினை வருமெண்டு)

காவுக்கை லைற் இல்ல. மெழுகு வத்தியக் கொழுத்தி வச்சுப்போட் டுத்தான் இருக்கிறனாங்கள். யாரும் வாற சத்தம் மாதிரி கேட்டா அதை யும் அணைச்சுப் போட்டு பெட்சீற் றால் இறுக்கிப் போத்துக்கொண்டு படுத்துக் கிடப்பம். பிறகென்ன அன் பொழுகக் கதைச்சதெல்லாம் கை வசம் கிடக்கு.

## IV

(அவனால அவையள் இப்ப கஸ் டப்படுகினம் போல கிடக்கு. ஒரு நல்லது கெட்டதில கலந்து கொள் ளுறெல்ல. கிட்டடியில ஜேர்மனியில நடந்த ஒரு கலியாண வீட்டில அவையள் நல்லா நொந்து போட் டினம். 'இவன் ஏன் இங்க வந்தவன்?' எண்டு தகப்பன்காரன் ஏறிப் பாஞ் சிருக்கிறார்)

'அவனும் எங்களுக்குச் சொந் தக்காரன்தான். கூப்பிட்டனாங்கள் வந்திருக்கிறான்' எண்டு போட்டு, என்ன வந்து கூப்பிட்டு 'நீங்க இல் லாம நாங்க கலியாணம் நடத்துவம். போறதெண்டா போங்கோ' எண்டு சொல்லவோ எண்டு என்னைக் கேட் டபோது "ஐயோ வேண்டாம் என் னால கலியாணத்தில பிரச்சினை யள் வேண்டாம். சமாளிச்சுப் போங்க" எண்டு சொல்லிப் போட்டன்.

(அவையள் பொட்டய அறைக் குள்ள பூட்டிவைச்சபடி கவனமாய் இருந்தும் ஒருக்கா கண்டு போட் டான். அவள் நிமிர்ந்து கூடப் பார்க் கேல்ல. இழுத்துப் பறிச்சு கிட்டப் போய் 'எப்படிச் சுகமோ' எண்டு கேட் டதுக்கும் பதிலில்லை. அவருக்கு மண்டைக்குள்ள விறைச்சுப் போச்சு. பொட்டை மாறிப் போயிட்டாளோ எண்டு மண்டையப் போட்டு உடைக் கத் தொடங்கீட்டான்.

இப்ப பொட்டை எங்கை போனா லும் கையோட ஒரு ஆள் போய் வருகுது. தமையன்தான் பள்ளிக் கூடத்துக்கு கொண்டு போய்க் கொண்டு வாறார்.)

செய்வினையோ என்ன இழவெ ண்டு தெரியேல்ல. பொட்டய மாத் திப் போட்டாங்களோவெண்டு பய மாக்கிடக்கு. நித்தம் ஒரே தாக்கு தல்களாயிருக்கும் எண்டு நினைக் கிறன். பொட்டயும் வளர வளர இவ னி(ட)ம் என்ன காரிருக்கா காசிருக்கா எண்டு யோசிக்கத் தொடங்கினாலும் தொடங்கியிருக்கும். இதுக்குள்ள இவன் படு குடிகாரன். ஒரு சிகரட் டில அடுத்ததைக் கொழுத்திப் பத் திறவன். இவனைக் கட்டிக்கொண்டு என்ன செய்யப்போற எண்டு அள ந்துதள்ளியிருப்பினம். நானும் போற வாற சனத்துக்கெல்லாம் சொல லிக்கொண்டு திரியிறன். முந்தி

நல்லகாலம் எதிர்பார்த்தெண்டு வந்தபடியா நான் முதல்ல கண்டு போட்டன். ஒளிக்க - திரும்ப இட மில்ல. பக்கத்தால நடந்து போனாலும் தெரிய வரும். ஒரு வான் கார் இல்லாத வெறிச்ச றோட் அது. என்ன செய்யிறதெண்டு தெரியாம மெதுவாக் குனிஞ்சு நாலு காலால நடந்து வந்திட்டன். நாயெண்டு நினைச்சிருப்பார்.



மாதிரி சிகரட் தண்ணியெல்லாம் விட்டிட்டன் எண்டு. ஆனா இது அவ ளின்ர காதுக்க எட்டாமப் பாக்கிறது அவைக்குப் பெரிய வேலை இல்லை.

(உன்ரை தங்கச்சிமாரை முதலில கரைசேர். உனக்கு ஞாயமான பொறுப்புக் கிடக்கு. விளையாடிக் கொண்டு திரியாத எண்டு நானும் சொல்லிப் பாத்தன். எனக்கெண் டாத் தெரியல்ல இவன் ஏன் மாற இந்தக் கஸ்டப்படுகிறான் எண்டு.)

நானும் எட்டாப்பழம் புளிக்கும் எண்ட மாதிரி இந்தச் சனியன் இனி வேண்டாம் எண்டு விடுவம் எண்டு தான் பாத்தன். ஆனா மனசுக்க ஏதோ கிடந்து கடக்கு முடக்கெண்டு பெரிய தலையிடியாக் கிடக்கு.

(பொட்டைக்கு 18 வர முதல் நாடு மாறப் போகினம் எண்டும் ஒரு கதையாக் கிடக்கு - கனடாவுக்கா யிருக்கும். இவன் பொடியன் சிக ரட்டையும் விட்டு தண்ணியையும் விட்ட அவஸ்தையில இப்ப கட் டையெல்லோ அடிக்கிறான். 'சொல் வழி கேள் மோனே' எண்டு நானும் சொல்லிப் பார்த்தன். அவன் மனம் போன போக்கில் போறான். பொடி யன் மாறின மாற்றத்தை நினை க்க என்னால நம்பேலாமக் கிடக்கு)

நல்லா லேட்டா வந்தா எல்லா ரும் படுத்திருப்பாங்கள். எழும்பி வீணா கதை பேசுற அளவுக்கு இன்னம் அவங்களுக்கு விசர் முத் தல்ல.

கட்டினா இவளத்தான் கட்டிறது கனவாய்ப் பழங் கதையாய்ப் போச்சு. சில வேளையில இரவில நடந்து வரேக்க எனக்குத் தெரி யாம எனக்குள்ள இருந்து சத்தங் கள் வாறதில எனக்குக் கொஞ் சம் பயமாத்தான் கிடக்கு.

(பொடியன் பயப்படுறான். அவள எல்லாருமாச் சேர்ந்து மாத்திப் போடு வாளயள் எண்டிறதில இவனுக்குச் சரியான நம்பிக்கை. அவள இவன் காதலிச்சுத்தான் இருக்கிறான் எண்டு எனக்கு விளங்கிற மாதிரி மற்றாக்களுக்கும் விளங்குமெண் டில்ல. ஆனா ஒண்டு மட்டும் சொல் லுவன் எவனாவது விசரன் காச வாங்கிப்போட்டு எந்தப் பேப்பரில எண்டாலும் எழுதுவாங்கள். வாற படமெல்லாம் நால்லாக் கிடக்கெ ண்டு. நம்பிப்போய் பாத்திடாதை யுங்கோ, பேந்து மூளைக்குள்ள பூந்த கனவத் தூக்கிக் கொண்டு லாச்சப்பல் முழுக்க அல்லது எங் கயும் வீடுகள் வழிய அலைய வேண்டியிருக்கும். அதுக்கு என்ன மாதிரி ஒரு போத்தல் சாராயத்தக் குடிச்சுப்போட்டு சிவனேயெண்டு வீட்டில விழுந்து கிடக்கலாம்.)

(பிரான்ஸிலிருந்து எழுதப்பட்டது)

**- நன்றி : இருள்வெளி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பஸ் தரிப்பிடத்தில் முதலாவதாக ஒரு நபர் இறங்கியதும் ஆட்டோவில் சென்ற இளைஞன் பாய்ந்து இறங்கி தான் மறைத்து வைத்திருந்த பிஸ்டலை எடுத்து பட்... பட் என்று சுட்டதும் இறங்கிய நபர் இறந்துவிட்டார். அவ்வாறு இறந்தவர் பாதாள உலகக் கோஷ்டியின் கதாநாயகனாக விளங்கிய சொத்தி உபாலி...**



# ஆட்டோக்காரன் ஆட்டோக்காரன்

புறக்கோட்டையிலிருந்து ஹொரணைக்குச் சென்ற பஸ் வண்டியைப் பின் தொடர்ந்து செல்லுமாறு ஓர் ஆட்டோக்காரனிடம் சொன்னார் ஓர் இளைஞன்.

வாகன நெரிசல்களுக்கு மத்தியிலும் வேகமாகச் சென்ற பஸ் வண்டியைப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தது அந்த ஆட்டோ... சிறிது நேரத்தில் உள்ளிருந்த இளைஞன் தனது செலுலர் போனை எடுத்து இலக்கங்களை அழுத்தினான். "அம்மா நான் வெள்ளவத்தையால் வந்து கொண்டிருக்கிறேன்" என்றான்....

இப்படி இரண்டு மூன்று தடவை அவனது தொலைபேசி யாரையோ தொடர்பு கொண்டது.

"என்ன விஷயம்?" என்று ஆட்டோ இளைஞன் கேட்டான். ஒன்றுமில்லை, எனது தந்தை வேறொருத்தியை மணமுடித்து விட்டார். அவரை கையும் மெய்யுமாகப் பிடிக்க வேண்டும். எனது அம்மாவும் வேறு வாகனத்தில் வருகிறார். அதுதான் நான் அவரிடம் சொன்னேன் என்றான் அவன்.

கொஹுவளையைத் தாண்டி சிறிது நேரம் சென்றதும் திரும்ப அந்த இளைஞன் செலுலரை எடுத்துச் சொன்னான், 'இனி இறங்க வேண்டிய இடம் அண்மித்து விட்டது தயாராகுங்கள்...' என்பதாக...

பஸ் தரிப்பிடத்தில் முதலாவதாக ஒரு நபர் இறங்கியதும் ஆட்டோவில் சென்ற இளைஞன் பாய்ந்து இறங்கி, தான் மறைத்து வைத்திருந்த பிஸ்டலை எடுத்து பட்... பட் என்று சுட்டதும், இறங்கிய நபர் இறந்துவிட்டார். அவ்வாறு இறந்தவர் பாதாள உலகக் கோஷ்டியின் கதாநாயகனாக விளங்கிய சொத்தி உபாலி.

இப்படியான பாதாள உலகில் படுபயங்கரச் செயல்களுக்குப் பயன்படுகின்ற அதே ஆட்டோதான் எம் அன்றாட வாழ்விலும் பிரிக்க முடியாத ஒரு நண்பனாக, அல்லது விரும்பியோ விரும்பாமலோ இணைந்துவிட்ட - பங்காளியாகத் திகழ்கின்றது.

மரண வீடு, திருமண வீடு, மார்க்கெட் செல்ல இன்னும் அவசரமான ஓர் இடத்தைச் சென்றடைய நாம் எல்லோரும் தேடுவது ஒரு ஆட்டோவைத் தான்.... இப்படி இன்பத்திலும் துன்பத்திலும் கஷ்ட நஷ்டங்களிலும் இரண்டறக் கலந்து விட்டன ஆட்டோக்கள்.

மூன்று சக்கரங்களைக் கொண்ட இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த வாகனம் முச்சக்கர வண்டி என்று சொல்லப்பட்டாலும் 'ஆட்டோ' என்ற பெயரும் கூடவே வந்துவிட்டது.

இன்று பலரும் ஆட்டோவில் பயணம் செய்வதையும், அத்தோடு அதைச் சொந்தமாக வாங்கவும் ஆர்வம் காட்டுகின்றனர். எந்தளவுக்கென்றால்...

பல கொலைகளைச் செய்து விட்டு சாமர்த்தியமாகத் தப்பிவிடுவதற்குப் பெரிதும் உதவுவதாகவும் ஆட்டோக்கள் பயன்படுகின்றன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அறிந்து



**எங்களை ஏதோ பயங்கரச் சுரண்டல்காரர்கள் என்றே மக்கள் நினைக்கிறார்கள். நாங்கள் பணம் கறப்பவர்கள் என்பது அவர்களது அபிப்பிராயம். நூறு ரூபா எடுக்க வேண்டிய ஹயருக்கு 50 ரூபா கேட்டால், அதற்கும் முடியாது என்று தயங்கினால்.... நாங்கள் மனிதாபிமானமற்றவர்களா? எமது தொழில் அது. அதில் கொஞ்சம் காரமாகவும் நடந்துகொள்ள வேண்டும்தானே...**

# நாளும் புரிந்த மனிதப் பிறவி...

ஓர் அளவுக்கு எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும்'' என்றார் ரோஹன என்ற ஆட்டோ ஓட்டுபவர். இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பன் இவர்.

ரோஹன மட்டுமல்ல, பல ஆட்டோக்காரர்களும் இதே விதமாகச் சொன்னார்கள்.

"எங்களை ஏதோ பயங்கரச் சுரண்டல்காரர்கள் என்றே மக்கள் நினைக்கிறார்கள். நாங்கள் பணம் கறப்பவர்கள் என்பது அவர்களது அபிப்பிராயம். நூறு ரூபா எடுக்க வேண்டிய ஹயருக்கு 50 ரூபா கேட்டால், அதற்கும் முடியாது என்று தயங்கினால்.... நாங்கள் மனிதாபிமானமற்றவர்களா? எமது தொழில் அது. கொஞ்சம் காரமாகவும் நடந்துகொள்ள வேண்டும்தானே... இல்லாவிட்டால் எமக்கல்லவா மிளகாய் அரைத்துவிட்டுச் சென்று விடுவார்கள்.

அதற்காக சுரண்டல்காரர்களல்ல. நாமும் தாய், தந்தை, என்று குடும்பம் நடத்துபவர்கள். பிள்ளை குட்டிகளைப் பெற்றெடுத்து வளர்க்கின்றவர்கள். எம்மிடம் மாத்திரம் வறட்டுப் புத்தி வருமா?''

அதுமட்டுமன்றி, கொலை செய்ய வேண்டியவரை உளவு பார்க்க, சந்தேக நபரைப் பின்தொடர, ஏன் கொலை செய்த உடலை மறைத்துக்கொண்டு செல்ல.... போதை வஸ்துக்களை கடத்திச் செல்லும் வாகனங்களாகவும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு பொலீசில் அகப்படாது தப்பிச்செல்ல குறுக்கு வழி காட்டும் ஆபத்பாந்தவன்களாகவும் இந்த ஆட்டோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நூற்றுக்கணக்கான ஆட்டோக்கள்தான் தலைநகரில் மட்டும் தலைகாட்டித் திரிந்தன. இன்று நாடெங்கிலும் புற்றீசல்களாகப் பெருகியிருக்கின்றன இந்த முதுகில் பொன்மொழி செதுக்கிய தேர்கள்.

தொழிலற்று வீடுகளில் முடங்கிக் கிடப்போர் பணம் ஈட்டி ஆதாயம் பெறும் ஒரு சுயதொழிலாக ஆட்டோ ஓட்டுவதை மேற்கொள்கிறார்கள்.

தொழிலற்றவர்கள் மட்டுமல்ல, அரசாங்கத் தொழில் செய்து பென்ஷன் எடுத்தவர்களும் மேலதிக வருமானத்திற்காக ஆட்டோ ஓட்டும் தொழிலைச் செய்கின்றார்கள்.

இப்படி எமது நாட்டில் சுமார் 85,000 ஆட்டோக்களை வைத்து பலர் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு ஆட்டோக்களையும் இந்தியாவிலிருந்து இறக்குமதியாக்கி விற்பனை செய்யும் ஏக உரிமையாளர்கள் ரிச்சட் பீரிஸ் நிறுவனத்தினர்.

8 மணி நேர வேலையென்ற வரையறையின்றி 24 மணி நேரமும் சேவை செய்யக் காத்திருப்பவர்கள் இந்த ஆட்டோக்காரர்கள்.


முன்பொரு காலத்தில் ஆட்டோக்களில் பயணஞ் செய்வதற்குத் தயங்கியவர்கள் இன்று எடுத்த எடுப்பில் ஆட்டோவைக் கூப்பிடுமளவுக்கு ஆட்டோ எமது மக்களுக்கு பிரபல்யமாகிவிட்டது.

தலைநகரில் டாக்ஸிகளின் கட்டணத்தை சமாளிக்க முடியாதவர்களுக்கு கிடைத்த மாற்று மார்க்கம் இந்த முச்சக்கர ஊர்திகள்.

"இப்போதெல்லாம் எங்களுக்குக் கஷ்ட காலம்தான். முன்பு போல வருவாயில்லை. காரணம் இன்று ஆட்டோக்கள் அதிகரித்துவிட்டன.

அதுமட்டுமன்றி இன்று மூலை முடுக்குகளுக்கெல்லாம் பஸ்கள் ஓடுவதால் ஆட்டோக்களில் ஏறுவதை விட பஸ்களிலேயே பயணஞ் செய்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளுக்குரிய ஒரே தீர்வாக, ஆட்டோக்களின் வகைதொகையற்ற இறக்குமதியை







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று ஆத்திரத்தோடு தன் புருவத்தை உயர்த்திச் சொன்னார் இந்திக என்ற ஆட்டோக்காரர். புறக்கோட்டைப் பகுதியில் கடந்த ஐந்து வருடங்களாக ஆட்டோ ஓட்டும் தொழில் செய்கிறவர்.

ஒரு ஆட்டோக்காரருக்கு நிகழ்ந்த சுவாரசியமான சோகம் இது:

நல்லவர்போல மதிக்கத்தக்க ஒருவர் ஒரு நாட்டாமையின் முதுகில் சாமான்களை ஏற்றிக்கொண்டு வந்து எனது ஆட்டோவில் ஏறினார்.

நான் ஜா-எலவுக்குப் போக வேண்டும். அதற்குமுன் கொஞ்சம் சாமான்கள் வாங்க வேண்டும் சற்றுப் பொறுத்துக்கொள்" என்று கூறிச் சென்றவர் சிறிது நேரத்தில் வந்து தம்பி எனக்கு 1000 ரூபா இன்னும் தேவைப்படுகிறது. நான் எனது வீட்டுக்குப் போனதும் திருப்பித் தந்துவிடுறேன். இருந்தால் தாருங்கள் என்றார். நம்பக் கூடியவர் போல் தெரிந்தார். என்னிடமிருந்த 1000 ரூபாவை அவருக்குக் கொடுத்தேன்.

5 நிமிடம், 10 நிமிடம், அரை மணித்தியாலமாகியும் அவர் வரவில்லை. மேலும் ஒரு அரைமணித்தியாலம் காத்திருந்துவிட்டு அவர் சென்ற கடைக்குச் சென்று விசாரித்தேன். அவர் சாமான்களின் விலையைக் கேட்டுவிட்டுச் சென்று வெகு நேரமாகிவிட்டது என்றனர்.

உடனே திரும்பிய நான் ஆட்டோவிலுள்ள பெரிய பார்சலைப் பிரித்துப் பார்த்தேன். தூக்கிவாரிப் போட்டது. அதில் தேங்காய் மட்டை, குரும்பைகளைச் சுற்றி வைத்திருந்தான் அந்தப் படுபாவி....

மூத்த மகனின் பாடசாலைச் செலவுக்கான பணம், சின்னவனின் பால்மாவிற்கான செலவு எல்லாமே தொலைந்துவிட்ட நிலையில் நான் அடைந்த வேதனை சொல்ல முடியாது...." என்றார் கமல் என்ற அந்த ஆட்டோக்காரர்.

அன்றிலிருந்து, இவர் தனது ஆட்டோவின் பின்புறக் கண்ணாடியில் **"நல்ல மனமுள்ளவர்கள் எந்நாளும் வேதனையில்"** என்ற மணிவாசகத்தை பெரிய எழுத்துக்களில் எழுதி வைத்திருக்கிறார்.



Pic. by : Nimal Silva

"ஆட்டோக்காரர்கள் தான் டிமிக்கி விடுகிறவர்கள் என்று நீங்கள் நினைப்பது தவறு. நாங்களும் எத்தனையோ பேரிடம் ஏமாந்திருக்கிறோம்" என்றார் ஆமர் வீதியில் ஆட்டோ ஓட்டும் ஃபாரிஸ் என்பவர்.

"ஒருநாள் இரண்டு இளம் யுவதிகள் வந்து தெஹிவளைக்குப் போக வேண்டும் என்று கூறினார்கள். ஹயர் 300ருபா என்று பொருந்திக் கொண்டேன். பெரிய வேலை பார்ப்பவர்கள் போல் அவர்கள் தோற்றமளித்தார்கள்.

தெஹிவளைக்குச் சென்று திரும்பிய அந்த யுவதிகள் தம்மிடம் 300 ரூபாவைத் தருவதற்கு பணமாக இல்லை. இந்த மோதிரத்தை விற்றுப் பணத்தைப் பெற்றுக் கொள் என்று ஒரு மோமதிரத்தைத் தந்தனர்.

நான் இது தேவையில்லை, பணத்தைத் தாருங்கள் என்று கேட்டேன். இல்லை இது ஆயிரம் ரூபா பெறுமதியானது... பரவாயில்லை.. வேறொரு தினத்தில் வந்து நாம் மீதியைப் பெற்றுக் கொள்கிறோம் என்று கூறினார்கள்.

நானும் மோதிரத்தை எடுத்துக் கொண்டு இரவோடிரவாக நகைக் கடையொன்றுக்குச் சென்று மோதிரத்தின் பெறுமதியைப் பார்த்தேன். வெறும் ஏமாற்று மோதிரம் அது. தங்கப் பூச்சு பூசப்பட்டிருந்தது.

நான் என்ன செய்ய இயலும்... நொந்துகொண்டது மட்டும்தான்.... அதன் பிறகுதான் எனது இந்த ஆட்டோவிலுள்ள வாசகத்தை ஓட்டிக் கொண்டேன்" என்று காட்டினார். அதிலும்... **"நல்லவர்களுக்கு காலமில்லை"** என்ற வசனம்.

கொள்ளுப்பிட்டியில் ஆட்டோ ஓட்டும் ரஞ்சித் என்பவர், ஒருநாள் இரவு கொள்ளுப்பிட்டியிலிருந்து மருதானைக்கு ஒருவரை 40 ரூபா ஹயருக்கு ஏற்றிச் சென்றாராம். அவர் நல்ல குடி போதையில் இருந்தாராம். இறங்கும்போது நான்கு தாள்களைக் கொடுத்துவிட்டு போய்விட்டாராம். விடிந்து அந்த மனிதர் கொடுத்த பணத்தைப் பார்த்தபோது ஆயிரம் ரூபா தாள் நான்கு இருந்தது. அதன்பின் அந்த மனிதரைக் காணவே இல்லையாம்.

இப்படி சில வேளைகளில் புதையல் கிடைத்தது போல பணமும் கிடைக்கத்தான் செய்கிறது என்றார் அவர்.

ஆட்டோக்களின் பின் பக்க ரெக்ஸீனிலும், கண்ணாடியிலும் பல வாசகங்கள் எழுதப்பட்டிருப்பது பற்றி பலரைக் குடைந்து ஆராய்ந்தேன். சுவையான தகவல்கள் கிடைத்தன.

அநேகமாக ஆட்டோக்களில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள். அந்த ஆட்டோ ஓட்டுபவர்களின் எண்ணங்களாகவே இருக்கின்றன. ஆனாலும் பொதுவாக அவை சினிமாப் பாடல்களிலிருந்தும், டெலி நாடகங்களிலிருந்தும் வியாபார விளம்பரங்களிலிருந்தும் பெறப்பட்டவையாக இருக்கின்றன.

இவை ஒவ்வொருவரது அனுபவங்களும் எண்ணங்களுக்கும் ஏற்ப வேறுபடும்.

சில பயணிகள் வேகமாய்ப் போனாலும் ஏசுவார்கள். மெதுவாகப் போனாலும் ஏசுவார்கள். சிக்னல்களில் நிற்காது செல்லவும் தூண்டுவார்கள். கூலி கொஞ்சம் அதிகமாகக் கேட்டாலும் திட்டுவார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு எவ்வளவு செய்தாலும் அவ்வளவுதான்" என்று சலித்துக் கொள்கிறார்கள் ஓட்டோக்காரர்கள்.

சில ஆட்டோ ஓட்டுபவர்கள் கூலிக்கு வேலை செய்பவர்கள் இவர்கள் முதலாளிமாருக்கு ஒரு நாளைக்கு 250 ரூபா கொடுக்க வேண்டும். அன்றைய தினம் ஹயர் ஓடாவிட்டாலும் அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டும். இது ஆட்டோவில் பயணஞ்செல்பவர்களுக்குத் தெரியாது.

எனினும் ஆட்டோ பயணிகளிடமும் ஒரு கொத்து மனக்குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. சாதாரண பஸ் கட்டணத்தில் 2 ரூபாய் 3 ரூபாய் தொலைவுக்கு அதன் 20, 30 மடங்கு கட்டணத்தைக் கேட்பது நியாயமில்லை என்பது ஒருபுறமிருக்க, ஏன், ஓட்டோக்கள் அனைத்துக்கும் ஒரே நிர்ணயித்த தொகையைத் தீர்மானித்து மீட்டர் பூட்டும் நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவில்லை என்பது இவர்களின் கேள்வி.

சாதாரண வேளைகளில் ஒரு கணக்கில் கட்டணம் அறவிடும் ஓட்டோக்காரர்கள் மழை, அல்லது அவசர தேவை என்று கண்டதும் கட்டணத்தை மனம் போன போக்கில் கூட்டிச் செல்கிறார்கள். "தவிச்ச முயல் அடிக்கும்" மனோபாவத்துடன் செயற்படுகிறார்கள் என்பது மற்றொரு முறைப்பாடு.

ஓட்டோக் கட்டணம் முழுக்க முழுக்க பேரத்தில்தான் தீர்மானிக்கப்படுகிறது. பேரம் பேசத் தெரியாத பெண்கள், அல்லது கனவான்கள் கேட்ட தொகையைக் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டிய நிலைமையே உள்ளது. ●




கிளின்டன் முத்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அழுவதா சிரிப்பதா ?

அடுத்த மில்லேனியம் பிறக்கப் போகிறதென்று உலகமே கொண்டாட்டத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. மில்லேனியம் பிறக்கின்ற நேரத்தில் சந்தையில் விற்பனைக்கு விடுவதற்கு என்றே பல்வேறு வித மான மாயா ஜாலங்கள் நிறைந்த நவீனரக தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட பண்டங்கள் இப்பொழுதே தயாரித்து முடிக்கப்பட்டு விட்டதாக தகவல்கள் வேறு வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன.

ஆனால் யாருமே தமது உற்பத்திகளை வெளியே காட்டுவதற்கு இப்பொழுது தயாரில்லை. எல்லாமே ஒரு சர்ப்ரைசாக வைத்திருந்து உலக நாடுகளை ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட வேண்டுமென்பதில் ஒருவருக்கொருவர் பலத்த போட்டி நிலவுகிறது.

மில்லேனிய வருடப் பிறப்பில் தமக்கு பிள்ளை பிறக்க வேண்டுமென்பதற்காக உலக நாடெங்கும் பல பெண்கள் தமது சட்டபூர்வ, சட்டபூர்வமற்ற கணவன்மாருடன் நேரம் கணக்கிட்டு சம்போகத்தில் ஈடுபட்டு மகப்பேற்றுக்குத் தயாராக இருக்கிறார்கள். குறித்த நேரத்தில் குழந்தை பிறக்காவிட்டால் மில்லேனியம் பிறக்கும்போதுஆப்பரேஷன்மூலம் வயிற்றை அறுத்தாவது குழந்தையைப் பெற்றெடுத்துவிடும் திடசங்கல்பத்தோடு இருப்பதாகத் தகவல்.

மில்லேனிய வருடப் பிறப்பில் தமக்கு பிள்ளை பிறக்க வேண்டுமென்பதற்காக உலக நாடெங்கும் பல பெண்கள் தமது சட்டபூர்வ, சட்டபூர்வமற்ற கணவன்மாருடன் நேரம் கணக்கிட்டு சம்போகத்தில் ஈடுபட்டு மகப்பேற்றுக்குத் தயாராக இருக்கிறார்கள். குறித்த நேரத்தில் குழந்தை பிறக்காவிட்டால் மில்லேனியம் பிறக்கும்போது ஆப்பரேஷன் மூலம் வயிற்றை அறுத்தாவது குழந்தையைப் பெற்றெடுத்துவிடும் திடசங்கல்பத்தோடு இருப்பதாகத் தகவல்.

சில மொழிகளில் இன்னமும் **மில்லேனியம்** என்ற சொல்லே தான் பாவிக்கப்படுகிறது. அந்தந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் தத்தமது மொழியிலே மில்லேனியத்துக்கு எப்படிப் பெயர் சூட்டுவது என்பதில் தலையைப் போட்டுப் பிய்த்துக் கொள்ளுவதாகச் சொல்கிறது இன்னொரு தகவல்.

ஏன் தமிழ் மொழியிலும் கூட இதற்குச் சரியான சொற்பதம் கிடைக்காததினாலோ என்னவோ மில்லேனியம் என்ற சொல்லே தான் தொடர்ந்து பாவிக்கப்பட்டது. இப்போது **புத்தாயிரமாம் ஆண்டு** என்று ஒரு சொல்லைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆனால் அதிலும் பலருக்கு திருப்தி இல்லை. எனவே இன்னும் பலர் மில்லேனியம் என்று தான் பாவிக்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் அடுத்த புத்தாயிரமாம் ஆண்டின் பிறப்பு நிகழ்ச்சி என்பது பெரிய கூத்தாகத்தான் இருக்கப் போகிறது போங்கள்.

ஒரு கோடி அ.மெ. டொலர் பெறுமதியான 'மில்லேனிய ப்ரா' இது. 1,988 வைடூரியக் கற்கள் உட்பட 3,024 இரத்தினக் கற்கள் இதில் பதிக்கப்பட்டுள்ளன. இதன் நடுவே 5கரட் வைரக் கல் ஒன்றும் பதிக்கப்பட்டுள்ளது. இந்த ப்ராவுக்குப் பொருத்தமான ஜட்டி 'விக்டோரியாஸ் கிறிஸ்மஸ் ட்ரீம்' என்னும் அழகியல் கையேட்டில் வலைபோட்டுத் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டது.



அணிந்திருக்கும் ஆரணங்கு உலக மாடல் அழகி ஹெய்டி க்ளம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தொலைக்காட்சிச் சேவையும் எப்படி எப்படியெல்லாம் மில்லேனியத்தின் பிறப்பை வகை வகையாகக் கொண்டாடி உலக மக்களின் பார்வையைத் தம்மை நோக்கிக் கவரலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாகப் பணியாற்றி வருகிறன.

பட்டாசுக் கம்பனிகளும் வாண வேடிக்கை உற்பத்தியாளர்களும் மில்லேனியம் பிறக்கின்ற போது எந்தவிதமான அபஸ்வரங்களும் கேட்காதிருப்பதற்காகவே புதுப் புது வகையான உற்பத்திகளை தயாரித்துக் கொண்டிருப்பார்கள் என்பதையும் நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனால் எது எப்படியோ மில்லேனியத்தின் பிறப்பின்போது பல்லாயிரம் கோடிகளை கரியாக்



குவதற்கு முழு உலகமுமே தயாராகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதில் தப்பில்லை.

இப்படி விழுந்தடித்துக்கொண்டு இவ்வளவு ஆர்ப்பாட்டமாக இப் புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்பதற்கு மனிதன் என்னதான் செய்து கிழித்துவிட்டான் என்று கேட்கும் ஒருசாரார், "புத்தாயிரமாம் ஆண்டின் வருகையை நோக்கி ஓ.... வென்று ஒப்பாரி வைத்து அழத்தான் வேண்டுமே ஒழிய மகிழ்வதற்கு ஒன்றுமேயில்லை" என்கிறார்கள்.

கடந்த ஆயிரமாம் ஆண்டில் குறிப்பாக இறுதி நூற்றாண்டில் மனிதர்கள் தாமே வகுத்த கொள்கைகளினால் மனித இனத்திற்கு அழிவும் கண்ணீரும் பசியும் பஞ்சமும்தான் மிஞ்சியிருக்கிறது என்பதே இவர்கள் வைக்கும் வாதம்.

ஆனாலும் "தொழில்நுட்ப ரீதியாக, விஞ்ஞான ரீதியாக மனிதன் எவ்வளவோ தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறான். மனித இனம் அழிந்து போகாமலிருப்பதற்காக மனிதன் எத்தனையோ விதமான ஆய்வுகளை மேற்கொண்டு அதில் வெற்றி வாகை சூடி வருகிறான். எனவே அடுத்த புத்தாயிரமாம் ஆண்டு மனித வரலாற்றில் ஒரு பாரிய பாய்ச்சலை ஏற்படுத்தும் என்பது ஐயமில்லை. எனவே அதனை கொண்டாடி வரவேற்கத்தான் வேண்டும்" என்று சொல்கிறார்கள் இன்னுமொரு சாரார்.

இவ்விரண்டு அபிப்பிராயங்களையுமே முழுமையாக ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ முடியாது என கூறும் இன்னுமொரு சாரார், இரண்டிலுமே பல நியாயங்கள் அடங்கியிருப்பதாக வாதிக்கிறார்கள்.

அவர்களின் வாதத்தின் படி மனிதன் அடுத்த புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்பதில் தனது கடந்த கால வெற்றிகளுக்காக புளகாங்கிதமடைவதை விட, கடந்து சென்ற ஆயிரமாம் ஆண்டில் மனித இனத்தினால் வெற்றி கொள்ள முடியாமல் போய்விட்ட பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வுகளைக் காண்பது என்பதைப் பற்றி சிந்திப்பதே பயனுள்ளதாக இருக்கும் என்கிறார்கள். என்னதான் நாம் எமது கடந்தகால வெற்றிகளைப் பற்றி பேசினாலும் புள்ளிவிபரங்கள் சொல்லும் கதைகளைப் பார்த்தால் ஒரு கணம் எம் இதயத் துடிப்பு நின்று விடுகிறது.



ஃபருன்ஸியஸ் பேகன் என்பவர் "அறிவே சக்தியாக உருவாக்கம் பெறுகிறது" என்று கூறினார். முடிந்து கொண்டிருக்கும் ஆயிரமாம் ஆண்டில் நாம் பெற்றுக் கொண்ட அறிவின் தொகை எவ்வளவு, அதனை நாம் எவ்வளவு தூரம் சக்தியாக உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது இங்கு ஒரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டிய கேள்விதான்.


"Future shock" என்னும் நூலை ஆக்கிய **"எல்வின் டொஃப்லர்"** கீழ்வருமாறு கூறுகின்றார்: "மனிதன் கடந்த 10,000 ஆண்டுகளாக தன்னைப் பற்றியும் தன்னைச் சூழவுள்ளவற்றைப் பற்றியும் அண்ட சராசரங்களைப் பற்றியும் தகவல்களை சேகரிக்க ஆரம்பித்தான். ஆனால் அவன் எழுதத் தொடங்கிய நாளில்தான் ஒரு புதிய புரட்சியே நடந்தது. மனிதன் தான் சேகரித்த அறிவை எழுதி ஆவணப்படுத்தினான். ஆனாலும் அது மிகவும் மெதுவாகவே நடைபெற்றது.

ஆனால் 1500 வருடங்களுக்கு முன்பு அவன் இன்னுமொரு பாரிய பாய்ச்சலை மேற்கொண்டான். அதாவது வர்ணங்களையும் வர்ணக் கலவைகளையும் அவன் கண்டுபிடித்தான். அக்காலத்தில் கணிப்பிடப்பட்டதன் படி ஐரோப்பா முழுவதுமே ஒரு வருடத்துக்கு ஆகக் கூடியது 1000 விடயதானங்கள் கொண்ட கைநூல்கள் மட்டுமே உருவாக்கப் பட்டன.

இந்த வேகத்தின்படி பார்த்தால் ஒரு லட்சம் விடயதானங்கள் அடங்கிய கைநூல்களை உருவாக்குவதற்கு 100 வருடங்களுக்கு மேல் பிடிக்கும்.

ஆனால் சரியாக 450 வருடங்களின் பின் கணக்கிட்ட பொழுது அதாவது 1950ல் ஐரோப்பாவில் ஒரு வருடத்துக்கு 1,20,000 விடயதானங்கள் அடங்கிய நூல்கள் உருவாக்கம் பெற்றன. அதன் பின் 10 வருடங்கள் போனதும், அதாவது 1960ல் ஒரு நாளைக்கு ஐரோப்பா உட்பட உலகம் முழுவதும் 1000 விடயதானங்களுக்கு மேல் நூல்கள் உருவாக்கப்பட்டன.

இப்புள்ளிவிபரங்களிலிருந்து மனிதனின் அறிவைச் சேகரிக்கும் வேகத்தின் வளர்ச்சியைப் புரிந்து கொள்வது சிரமமில்லை. ஆனால் இவையெல்லாம் எதற்குப் பயன்



படுத்தப்பட்டிருக்கின்றன என்பது தான் கேள்வி.

இதோ எம் ஆன்மாக்களை உலுக்கிவிடும் 1998ம் ஆண்டு புள்ளிவிபரங்கள்:

உலகில் மிக வறுமை நிலையில் வாழும் மக்களின் தொகை 1.5 பில்லியன்கள் (ஒரு பில்லியன் = 100கோடிகள்) அதில் 70 வீதமானோர் பெண்கள். இவர்களின் ஒரு நாளைய வருமானம் ஒரு அமெரிக்க டொலரை விடக் குறைவு (ஒரு அமெ. டொலர் = 72ரூபாய்).

ஒவ்வொரு இரவும் பட்டினியோடு படுக்கைக்குச் செல்லும் மக்களின் தொகை 550 மில்லியன்கள் (5,500 இலட்சம்) ஆகும்.

பாடசாலை செல்கின்ற வயதில் செல்லாதிருக்கும் பிள்ளைகளின் தொகை 130 மில்லியன்களாகும்.

www.tamilarangam.net





லண்டன் நகரில் புதிய மில்லேனியப் பிறப்போடு திறக்கப்படப்போகும் பிரம்மாண்ட மனித உடம்பின் பாகங்கள் ஒரு அரங்கத்தில் பூட்டப்பட்டு வருகின்றன. இப் பிரமாண்ட மனித உடம்புக்குள் மனிதர்கள் நுழைந்து சுற்றிப் பார்த்து வரமுடியும். இங்குள்ளவை அவ் உடம்பின் இராட்சத இதயமும் கால்களுமாகும்.

உலகசனத்தொகையில் நூற்றுக்கு 45 சதவீதமான மக்கள் வாழுகின்ற நாடுகளின் வருடாந்த மொத்த வருமானமானது, உலகில் உள்ள மிகக் கொழுத்த 358 தனவந்தர்களின் சொத்துக்களுக்குச் சமனாகும்.

1998ம் ஆண்டு முழு உலகின் பண்ட மற்றும் சேவை உற்பத்திகளின் பெறுமதி 24 ட்ரிலியன் அமெரிக்க டொலர்களாகும். (ஒரு ட்ரிலியன் = 1000 பில்லியன்கள்)

அவ் உற்பத்தியில் 86% உலகின் 20% மக்களாலேயேநுகர்ந்து அனுபவிக்கப்படுகிறதென்றால் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்!

1998ஆம் ஆண்டு உலக உற்பத்திச் சந்தையின் பங்குகளை உலகின் மிகத் தனவந்த 10 நிறுவனங்கள் கீழ்வரும் விகிதாசாரத்தில் தமதாக்கிக் கொண்டிருக்கின்றன.

தொலைத்தொடர்புமற்றும்தொடர்பு ஊடகத் துறை 89%
கிருமிநாசினி மற்றும் களைகொல்லி 85%
கனனி உற்பத்தி 70%
மிருக வைத்தியத்துறை 60%
மருந்துற்பத்தி 35%
விற்பனைக்கானபயிர் விதை வகை உற்பத்தி 32%

1990களின் நடுப்பகுதியில் கணக்கிட்டதின்படி முழு உலக உற்பத்தியின் 86 சதவீதமானது உலகின் 5 சதவீதமானவர்களால் மட்டுமே



ஆண்டு அனுபவிக்கப்பட்டதாம்.

இதெல்லாம் இப்படியொருபுறமிருக்க நாடுகளுக்கும், நாடுகளுக்கிடையேயும், ஒவ்வொரு நாடுகளுக்குள்ளேயும் நடைபெறுகின்ற யுத்தங்களினால் ஏற்படும் அழிவு சொல்லி மாளக் கூடியதொன்றல்ல.

1940களில் நடைபெற்ற இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது மட்டும் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 55 மில்லியன்கள் (550 லட்சம்).

எனவே புதிய நவீனரக இலத்திரனியல் ஆயுதங்களின் கண்டுபிடிப்போடு நுழையவிருக்கும் புத்தாயிரமாம் ஆண்டில் எவ்வளவு கொல்லப்படப் போகிறோம் என்பதை யூகிப்பது அவ்வளவு சிரமமானதாக இருக்காது.

அக்கொடிய அழிவைச் செய்வதற்காக புதிய கனனிமயப்படுத்தப்பட்ட அணுகுண்டுகள், ஏவுகணைகள் சகலதும் உலகின் தனவந்த நாடுகளின் கைவசம் தயாராகவே இருப்பதை நாம் அறிவோம்.

இன்று புதிய நவீன ஆயுத உற்பத்திக்காகவும், அவற்றை விலை கொடுத்து வாங்குவதற்காகவும் தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகள் வருடாந்தம் 500 பில்லியன் அ.மெ. டொலர்களைச் செலவழிக்கின்றன.

இன்று உலகில் ஒரு வாரத்திற்குள் 550 பேரை அங்கவீனர்களாகவோ அல்லது குருபிகளாகவோ மாற்றக்கூடிய யுத்தம் நடக்கும் 69 நாடுகள் இருக்கின்றன. அந்நாடுகளில் 100 மில்லியன்களுக்கு மேல் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கிறன. இந்த 69 நாடுகளிலும் 67 நாடுகளில் நடப்பவை உள்நாட்டு யுத்தங்களாகும்.

இந் நாடுகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகளால் மட்டும் வருடத்திற்கு 26,000 சாதாரண மக்கள் அங்கவீனர்களாக்கப்படுகின்றனர். இந் நிலக்கண்ணிகளில் ஒன்றை அகற்றுவதற்காக 200 அமெரிக்க டொலர்களிலிலிருந்து 250 அமெரிக்க டொலர்கள் வரை செலவாகிறது.

யுத்தத்திற்காக இந்நாடுகள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவும் யுத்தம் செய்யவும் செலவழிக்கும் தொகையில் குறைந்தது 20 சதவீதத்தை மிச்சம் பிடித்தால் கூட உலகெங்குமுள்ள 189 மிலலியன் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப முடியும்.



அணு ஏவுகணைகளை தாங்கிச் செல்லும் சிவுல்.:.ப் நீர்மூழ்கிக் கப்பலொன்றின் விலை 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்.

இதனை மிச்சம் பிடித்தால் உலகெங்குமுள்ள குழந்தைகளுக்கு போஷாக்குடன் கூடிய சுகவாழ்வைப் பெற்றுக்கொடுக்க முடியும். 120 மில்லியன் பெண்களுக்கு குடும்பத் திட்டமிடல் சேவையை பெற்றுக்கொடுக்க முடியும்.

இவ்வாறு இப்புள்ளிவிபரப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். ஆனால் அதில் எந்தவித மான அர்த்தமும் இல்லை.

ஆனால் எம்முன்னுள்ள பணி, அடுத்த புத்தாயிரமாம் ஆண்டிலாவது இப்புள்ளி விபரங்களை தலைகீழாக மாற்றி மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்காக ஒதுக்கும் பணத்தை அதிகரிக்கச் செய்வதாகும்.

அத்தோடு மற்றொரு விடயத்தை நாம் உணரவேண்டும். அதாவது வர வர வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி விரிசல் கண்டுகொண்டே செல்கிறது.

இது இவ் உலகத்துக்குள்ளேயே இருவேறு உலகங்கள் உருவாகும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதில் ஒரு உலகத்திலிருந்தே மறு உலகத்துக்கான செல்வமும் கவரப்படுகிறது.

வறிய உலகத்தில் செய்யப்படும் ஒவ்வொரு அபிவிருத்தியிலிருந்தும் செல்வந்த உலகம் ஆதாயம் அனுபவிக்கும் இரகசியச் சுரண்டல் வேர்கள் கண்ணுக்குத் தெரியாமல் ஊடுருவியுள்ளன. இவையே இவ்விரு உலகங்களும் மேலும் மேலும் பிரிந்து செல்வதற்கான அடிப்படையாக அமைந்துள்ளன. இப் போக்கை மாற்றி இவ்விரு உலகங்களையும் ஒன்றாக்குவது எவ்வாறு என்பதே இன்றுள்ள பாரிய கேள்வியாகும்.

இதில் அதிகம் வேண்டாம், முதலில் வறிய நாடுகளுக்கு உள்ள பாரிய கடன் பழுவையாவது மில்லேனியத்தின் பிறப்போடு செல்வந்த நாடுகள் நீக்கி உதவ வேண்டுமென எழுப்பப்பட்ட மனிதாபிமானக் கோரிக்கைக்கே செல்வந்த நாடுகள் பராமுகமாக இருந்துவிட்டன.

அப்படியிருக்கையில் வெறும் வாண வேடிக்கைகளாலும் பிரம்மாண்டமான சோடனைகளாலும் மில்லேனியத்தின் பிறப்பை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுவதால் மட்டும் உலகில் உண்மையான மகிழ்ச்சி பிறக்க வாய்ப்பில்லை, உணர்ந்துகொள்ள வேண்டும்.

உணருமா இந்த உலகு? ●

கட்டுரை மூலம் : ஜோ செனவிரத்ன






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இப்படித்தான் இருக்கவேணும் பொம்பளை?



இனங்களிலே என்ன இனம் பெண்ணினம்..? மெய் எழுத்துக்களில் இருக்கும் அந்த மெல்லினம்... என்றெல்லாம் பாடிக் கொண்டிருந்தவர்கள் வாயிலே விழுந்தது மண்!
பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று பழைய இலக்கியங்கள் முதல் இன்றைய பாடல்கள் வரை ஒரு தொகை விதிகளை அள்ளிக் கொட்டியிருக்கின்றன.

***நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்***
***மென்னீரள் யாம்வீழ் பவள்***

அனிச்ச மலரின் மென்மையைப் புகழ்ந்து பாராட்டுகிறேன். ஆனால் அந்த மலரை விட மென்மையானவள் என் காதலி என்கிறான் அந்தக் குறள் காதலன்.

***வல்லியை உயிர்த்த நிலமங்கை இவள் பாதம்***
***மெல்லிய உறைக்கும் என அஞ்சி வெளி எங்கும்***
***பல்லவ மலர்த் தொகை பரப்பினள்.....***

என்கிறான் கம்பன்.
சீதையை ஈன்ற பூமி, அவள் மென்மையான பாதங்கள் நோகும் என்று மலர்களைப் பரப்பி வைக்கிறதாம்!
பெண்ணின் மேனி வருந்துவதற்குக் காரணம், அவள் காம்போடு சேர்த்து மலர்களைத் தலையில் சூடிக் கொண்டது தானாம்! மலர்க் காம்பின் பாரம் தாங்காமல் துவள்கிறதாம் இடை.

நளவெண்பா பாடிய புகழேந்திக்கு மற்றைய புலவர்கள் சுட்டிய மென்மை எல்லாம் போதவில்லை. தமயந்தியின் இடை வண்டுகளின் இறகிலிருந்து வரும் மெல்லிய காற்றுக்கும் துவண்டுவிடும் என்கிறான்.

பூவினும் மெல்லிய பூங்கொடியாகவும், அனிச்ச மலர் மற்றும் அன்னப் பறவையின் இறகு கூட அவள் மேனியை நெருஞ்சி முட்களாக உறுத்திவிடும் என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு இது அதிர்ச்சியூட்டும் செய்திதான்:

ஆண்களால் மட்டுமல்ல பெண்களாலும் உடல் வன்மையை வெளிப்படுத்த முடியும் என்று நிரூபித்துக் கொண்டிருக்கும் காலம் இது. 1999ம் ஆண்டுக்கான சர்வதேச பெண்கள் உடல் வன்மைப் போட்டி சென்ற மாதம் 17ம் திகதி அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற போது அதில் தம் அபார வலிமைகளை நிரூபிக்க உலகெங்கிருந்தும் வந்து போட்டியிட்ட பெண்களிடையே இம்முறை தங்கப்பதக்கத்தை வென்றெடுத்தவர் தான் இங்கே தன் புஜ வலிமையைக் காட்டி நிற்கும் ரஷ்யாவைச் சேர்ந்த மெய்யழகி **புறொஸ்கோ றைகோவா.**









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாய்-சீ

## உள்ளுறைந்த சக்தி



தாய் சீ! உலகின் மிகப் பிரபல்யமான குங் ஃபூ முறை இது. மிகப் புராதனமானது. தற்காப்புக்கு மட்டுமன்றி ஆரோக்கியம், சுய கட்டுப்பாடு, பொறுமை, சகிப்புத் தன்மை, நிதானம், ஒழுங்கு, சீரான சிந்தனை, புத்திக் கூர்மை, மனச் சக்தி, மனக் கட்டுப்பாடு, வைராக்கியம், மனச் சாந்தி, தியானம் போன்ற வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் இக் கலை பெரும் பயன்பாடுடையது.

'சீ' என்பது எம்முள் உள்ளுறைந்துள்ள சக்தி. அச் சக்தியை உணர்ந்து, அதை வளர்த்து எம் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து ஒருமுகப்படுத்திச் செலுத்தும்போது அபார சக்கியாக வெளிப்படும். தாய் சீ பற்றி முன்னரும் குறிப்பிட்டிருந்தேன்.



தாய் சீ சண்டை முறை உள்ளார்ந்த ரீதியான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. அதாவது வெளி உடல் அசைவுகளுக்கு அப்பால் புறப் பார்வைக்குத் தெரியாத உள்ளே செயலாற்றும் அசைவுகளை அது இயக்குகிறது.

தாய் சீயில் பல வகையான சண்டை முறைகள் உண்டு. பாரம்பரியமான முறைகளும் நவீன முறைகளும் உண்டு. இச் சண்டை முறையும் காலத்துக்குக் காலம் பல்வேறு அனுபவங்களையும் சிந்தனைகளையும் உள்வாங்கி பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டு வளர்ந்தது.

தாய் சீ யில் இன்று பொதுவாக ஐந்து பிரதான பாணிகள் பயிலப்பட்டு வருகின்றன. சென் (Chen), யங் (Yang), சன் (Sun) என்பவற்றுடன் இரு வெவ்வேறு வூ (Wu) வகைப் பாணிகள் இப்போது பிரபல்யமாக உள்ளன.

தற்காப்புக் கலைகளில் பரிமாண வளர்ச்சியும் அதனால் பல்வேறு பாணிகள் உருவாவதும் இயற்கையானது. மாணவர்கள் ஒரு கலையை ஒரு குருவிடமிருந்து கற்றதும் அதை தமது தனித் தன்மைகளுடனும் செயற்பாட்டுடனும் ஒழுங்கமைத்துக் கொள்ளும்போது அது குருவின் கலையாகவன்றி மாணவனதாகி விடுகிறது. அத்துடன் அது மாணவனது மற்றைய புதிய அறிவுகளோடும் அனுபவத்தோடும் சேர்ந்து காலகாலமாக வாழ்நாளோடு வளர்ச்சி காண்கிறது. தாய் சீ யையும் இவ்வாறே நாம் கற்றுச் செல்லும் போது, கற்றதை பயிற்சி செய்துகொண்டு செல்லும் போது அது தானகவே எம்மை வளர்ச்சியுறச் செய்கிறது. நாம் ஒரு கட்டத்துக்கப்பால் வளர்ச்சியுறும்போது எமது வளர்ச்சி புறரீதியான செயற்பாடுகளிலிருந்து அக ரீதியான செயற்பாடுகளுக்கு மாறுகிறது.

சோலின் டெம்பிளில் உதயமான தாய் சீயின் பாரம்பரிய வளர்ச்சியில் **ஸங் செங் ஃபெங் (Zhang Sang - Feng)** என்ற மூலவரின் வருகைக்குப் பின் அதி முக்கியமான பல அம்சங்கள் ஏற்பட்டன. அது பல்வேறு சுவாசப் பயிற்சிகளுடன் சேர்ந்து அகரீதியான பாரிய அம்சங்களை உள்வாங்கிக் கொண்டது. வடிவத்தில் சண்டைப் பாங்குகள் சோலின் பாரம்பரியத்தைத் தாங்கி நின்றாலும் செயற்பாட்டில் கை, கால்களை விட



இங்கு சித்தம் (Mind) அதிக அசைவுகளைச் செய்தது. இம் முறையில் சித்தம் உடலின் உள்ளுறைந்த சக்தியை நெறிப்படுத்தி, உடலினுடாகப் பாயச் செய்யக் கூடிய ஆற்றலைப் பெற்றது. விலங்குகளுக்கு இருக்கும் உள்ளுணர்வை நாம் கால ஓட்டத்தில் பெருமளவு இழந்துவிட்டோம். விலங்குகளின் அசைவுகளிலும், அனுமானங்களிலும், சண்டைமுறைகளிலும் அவற்றைக் கச்சிதமாகச் செயற்பட நெறிப்படுத்துவது இந்த உள்ளுணர்வே.

விலங்குகளுக்கு இது மிகவும் இயற்கையானது. ஸங் செங் ஃபெங் நாம் இழந்துவிட்ட இவ் உள்ளுணர்வை மீள உயிர்ப்பிக்கும் வகையில் தாய் சீயில் அக ரீதியான செயற்பாட்டு அம்சங்களை உருவாக்கினார்.

அவர் ஒருமுறை பாம்பொன்றும் கொக்கொன்றும் சண்டையிடும் காட்சியைக் கண்டார். அப்போதுதான் அவர் உள்ளார்ந்த சக்தி பற்றி உணர்ந்து கொண்டார். ஒவ்வொரு தடவை கொக்கு தாக்கும் போதும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தப்பிக்கும் பாம்பின் சாதுரியமான அசைவைக் கண்டார். பாம்பின் செயற்பாட்டில் தாவோ தத்துவமான யிங் யங் தத்துவம் செயற்படுவதை அவர் கண்டார். திறப்பதும்- மூடுவதும், விரிவதும் - சுருங்குவதுமான அதன் அசைவுகளில் ஸங் உள்ளுறைந்த அதன் சக்தியைக் கண்டுகொண் டார்.

பாம்பு சண்டையின்போது அதிகம் அசைவதில்லை. மாறாக அது சுருண்டபடி ஒரே நிலையில் எதிராளி தனது தாக்குதல் எல்லைக்குள் வரும்வரை காத்து நிற்கும். அது அசையாது நின்றாலும் உள்ளார்ந்த அசைவொன்று அதற்குள்ளே நிகழ்ந்தபடியிருக்க, சுருண்டு, சுருங்கி தாக்குதலுக்குத் தயாராக நிற்கும். ஆனால் அது தாக்கும்போது.... தாக்குதலிலிருந்து விலகியபடியே தாக்கும். ஒரு மிகச் சடுதியான அதிவேக அசைவுடன் எதிரியின் மிக அருகிலுள்ள பாகத்தைத் தாக்கும்.

இங்கு அதன் உள்ளார்ந்த சக்தி வெளிப்பாடு புலப்படும்.

இதுவே தாய் சீ யின் உள்ளார்ந்த சக்திச் செயற்திறனின் சாராம்சத்திலும் அடங்கியுள்ளது.



உள்ளார்ந்தசக்தியை நாம் புத்தகங்களை கட்டுக் கட்டாகப் படிப்பதால் உணர்ந்து கொள்ள முடியாது. அதன் தன்மையை விபரித்துப் புரிய வைக்க முடியாது. ஒரு குருவாலும் இன்னொருவருக்கு உணர்த்தி விட முடியாது.

அதை நாம் தாய் சீ கலையில் ஈடுபட்டுச் செல்லுகையில் ஒரு கட்டத்தின் பின் - அகரீதியான வளர்ச்சிக் கட்டத்துக்குள் நுழைந்த பின்- நாமாகவேதான் உணர்ந்து கொள்ள முடியும். இதை அறியும் பயணத்துக்கான பாதையாகவே தாய் சீ பயிற்சி முறைகள் அமையும்.

பழைய நூல்களின்படி தாய் சீ 13 அடிப்படை அம்சங்களினாலானது. இதில் நான்கு அம்சங்கள் நான்கு பிரதான திசைகளான வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பவற்றைக் குறிக்கின்றன. அடுத்த நான்கு அம்சங்கள் நான்கு மூலைத் திசைகளான வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு என்பவற்றைக் குறிக்கின்றன. மற்றைய ஐந்தும் உலோகம், தரை, நெருப்பு, நீர், மரம் ஆகிய பௌதிகப் பொருட்களைக் குறிக்கிறது.

இதில் நான்கு திசைகளையும் குறிக்கும்நிலைகளாகபெங்(Peng) - வெளி விரிதல், லு (Lu) - உட் சுருளல், ஜிய் (Ji) -முறுக்குறுதல், அன் (An) -கீழே தள்ளுதல் என்பன உள்ளன.

தாய் சீக்குள் இருக்கும் இவ் வடிவங்கள் பல்லாயிரக்கணக்கான வருட முன் அனுபவங்களால் ஊட்டப்பட்ட ஒரு கலாசாரத்தின் சின்னங்களாக விளங்குகின்றன.



தாய் சீயின் அக மட்டங்களை எட்டுவதென்பதும் இவ்வாறான அனுபவ வளர்ச்சியே. தாய் சீ மாணவர்கள் இக் கலைக்கும் தமது உள்மனதிற்குமிடையே ஒரு அர்த்தபூர்வமான உறவை அமைத்துக்கொள்கிறார்கள்.

ஒரு தாய் சீ மாணவனது கருதுகோள்கள் அவனது வளர்ச்சியுடன் மாறுபடுகின்றன. மாற்றமடையும் அவை, வளர்ச்சிப் போக்கில் புதிய உறவுகளை உருவாக்குகின்றன. இது தாய் சீ வடிவங்கள் வித்தியாசமடைவதை மட்டுமல்ல, மாணவன் அதை வித்தியாசமான விதமாகப் பிரயோகிப்பதையும் குறிக்கிறது.




தாய்ச் சீ சண்டை முறை ஒரு மென்மை முறையாகும். பார்வைக்கு ஒரு நாட்டியம் போல் தோன்றும் இதன் அசைவுகளைக் கண்டு இப்படி யாரும் எதிரியின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியுமா என எண்ணலாம்.

ஆனால் இந்த அசைவுகள் வெறும் உடற் பயிற்சி மட்டுமல்ல. அதுவே சண்டை ஒன்றில் எதிரியை எதுவும் செய்ய இயலாதவாறு மடக்கும் சூட்சுமமான நுட்பங்களாகவும் அமைகின்றன. நன்கு பயின்ற ஒரு தாய் சீ மாணவனை நெருங்குவதென்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருக்கும்.



அதி உயர் தாய் சீ கலையைக் கைவரப் பெற்றவர்களால் சிறிய தொடுகைகளாலும் எவரையும் செயலிழக்கச் செய்ய இயலும்.

நான் முன்னரும் குறிப்பிட்டிருந்த நேரம் வைத்துக் கொல்லும் கலையும் இதில் அடங்கும். ஒருவரைத் குறித்த ஒரு இடத்தில் தொட்டு உட்சக்தியான 'சீ'யைச் செலுத்தி அவரை மறுநாள் அதே நேரம் மரணமடையச் செய்யும் நுட்பத்தை இவ்வாறு *Delayed Death touch* என்று கூறுவர்.



**- பில்லி வொங்**
**தமிழில் : பாஸ்கரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வழிபாடும் வன்முறையும்

சினிமா

மனிதனின் ஆதார குணங்களாக இருக்கின்றன காதலும், வன்முறையும். காதல் மனித உடல்களை உற்பத்தி செய்யும் கைங்கரியத்தில் ஈடுபட, வன்முறை அல்லது வீரம் உடல்களைச் சிதைத்தழித்து இல்லாமலாக்கும் வேலையைச் செய்கிறது.

காதல் போலவே வன்முறை உணர்வும் மனிதனிடம் தொடர்ந்து வருகிறது. காட்டுமிராண்டி நிலையிலிருந்து மீண்டு மனிதனாக நாகரிகமடைந்து பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் வன்முறையை மனிதனால் விட முடிவில்லை.

வன்முறைக்கு உடல்களைச் சிதைக்கும் ஆற்றல் இருக்கிறதே தவிர, எதையும் மாற்றுகிற சக்தி கிடையாதென்பதை இன்றைய உலக மாற்றங்கள் உணர்த்தி நிற்கின்றன. மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான புதிய மார்க்கங்களை மனிதன் இனிக் கண்டாக வேண்டும்.



குறிக்கோளை எட்டுவதற்கான வழியாகவும், இருப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்ளும் பாதுகாப்பிற்கெனவும் வன்முறை நியாயப்படுத்தப்படுகிறது. குழுவாக உணர்வதன் மூலமே ஒவ்வொரு உயிரியும் தனது இருப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்கிறது என்பதை அறிவோம். எனவே, வன்முறையும் குழு வன்முறையாக மற்றொரு குழுவினரைத் தாக்கி அழிப்பதாக மாறுகிறது. பாதுகாப்பற்றதாய் உணரும் மக்கள் திரளினர், அரசு அதிகாரத்தையும் வன்முறையையும் மென்மேலும் சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பாதுகாப்பு என்பதன் பெயரில் அடக்குமுறைக்குக் கையேந்தும் நிலைக்கு ஆளாகின்றனர்.

குழு வன்முறை, அதை எதிர்கொள்ள நாமே விரும்பி ஏற்க வேண்டியிருக்கும் அரச வன்முறை, அதன் பயங்கரங்கள், மனித அவலம் இவைகள்தான் ஆனந்த் பட்வர்த்தனின் விவரணப் படங்களின் பொருள்களாயிருக்கின்றன.

**“தெய்வத்தின் பேரால்”** என்ற ஒன்றரை மணி நேரப் படம் பொலீஸ் மற்றும் மதவெறி கொண்டவர்களின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களைக் காட்டுகிறது. பயங்கர ஆயுதங்களால் வெட்டப்பட்டவர்களின் இரத்தம் தோய்ந்த சதைகள், மதவெறிக் கும்பலின் தீக்கு இரையான கடை, வீடுகளை இழந்து எதிர்காலத்தை ஏக்கத்துடன் பார்த்து நிற்கும் குடும்பங்கள்... என்று பல உண்மை நிகழ்வுகளின் படப்பிடிப்பு, மதவெறி வன்முறையின் கொடூரத்தை நம் முகத்தில் அறைந்து காட்டுகிறது.

விவரணப் படங்கள் என்பது, யாராவது கேட்டால் கேட்கட்டும் கேளாவிட்டால் விடட்டும் என்பதாக பற்றற்ற விதத்தில் பிரசாரங்களை மேற்கொள்கிற அரச விளம்பரப் பிரிவின் படங்களைப் போல சோம்பலூட்டுவதாய்த்தானிருக்கும் என்று நினைத்திருந்தவர்களை பட்வர்த்தன் ஏமாற்றுகிறார்.

கதைப் படங்களுக்கு நிகரான விறுவிறுப்பை அவரது ஒவ்வொரு செய்தி விளக்கப் படத்

> **பாதுகாப்பற்றதாய் உணரும் மக்கள் திரளினர், அரசு அதிகாரத்தையும் வன்முறையையும் மென்மேலும் சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பாதுகாப்பு என்பதன் பெயரில் அடக்குமுறைக்குக் கையேந்தும் நிலைக்கு ஆளாகின்றனர்.**

திலும் நாம் காண முடிகிறது. உயர்ந்த சினிமாவுக்குரிய படத் தொகுப்பு சூட்சுமங்களை விவரணப் படங்களிலும் செய்துகாட்ட முடிகிறது பட்வர்த்தனுக்கு.

இவரது பிரசார உத்தி மிகவும் நுண்மையானதாக இருக்கிறது. தனது பக்கச் சாய்வையும் நியாயங்களையும் நேரடியாக உரத்துப் பேசிக் கொண்டிருக்கும் முறையை ஒதுக்கிவிடுகிறார் பட்வர்த்தன்.

தான் தவறென்று காட்ட நினைப்பவர்களின் நியாயங்களைப் பேச விடுகிறார். அவர்களது நியாயங்களை அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் போதிலேயே அதிலுள்ள ஓட்டைகளை நாம் புரிந்துகொள்ளுமாறு புலப்படுத்திவிட்டு ஒதுங்கிவிடுகிறார்.

உதாரணமாக, அயோத்தியில் மசூதியை இடித்துவிட்டு அந்த இடத்தில் கட்டுவதற்கு செங்கல் சேகரித்து யாத்திரை செய்தவர்களை - இந்தியாவின் 80 வீதமான இந்துக்களும் இந்தியாவை ஓர் இந்து அராஜக மீள் வரையறுப்புக்கு இணங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறவர்களை - விரிவாகப் பேட்டி காண்கிறார்.

இந்துக்கள் அகிம்சையைக் கடைப்பிடித்து வந்துள்ளமை முடிவுக்கு வந்துவிட்டது என்று அவர்கள் கூறுகிறார்கள். பாகிஸ்தான் உருவாக்கத்தினால் மகாத்மா காந்தி தனது மதத்திற்கு துரோகமிழைத்துவிட்டார் என்கிறார்கள். இந்தியாவின் முதலாவது மொஹலல் சக்கரவர்த்தி பாபர் கட்டியதென்று சொல்லப்படுகின்ற 16ம் நூற்றாண்டு மசூதி அமைந்திருக்கும் இடம், ராமனின் ஜனன பூமி என்பதால் அந்த இடத்தில் மசூதியைத் தகர்த்துவிட்டு ராமபிரானுக்கு ஒரு புதிய ஆலயத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று வெகுஜன இயக்கத்தை நடத்தி வரும் விஸ்வ இந்து பரிஷத்தின் நடவடிக்கைகள் விரிவாகக் காட்டப்படுகிறது. ஊர்வலத்தில் வருகிறவர்களைப் பேட்டி காண்கிறது கமெரா....

“அயோத்தியில் அந்தக் குறிப்பிட்ட இடத்தில்தான் ராமருக்கு கோயில் கட்ட வேண்டும் என்று ஏன் விரும்புகிறீர்கள்?”

“அதுதான் ராமபிரான் பிறந்த இடம். அங்கேதான் கோயில் கட்ட வேண்டும்.”

“ராமருடைய காலம் எது?”

“அவர் அவதார புருஷர். பல நூறு ஆண்டு காலம் வாழ்ந்தவர்.”

“தோன்றியது எப்போது?”

“பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்.. மிக ஆதி காலத்தில்... கடவுள்கள் காலம் நாம் அறியக் கூடியதல்ல....”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடத்தில் மட்டும் ஏன் அவ்வளவு தெளிவாக இருக்கிறீர்கள் என்ற கேள்வியைத் தவிர்த்துவிட்டு அப்பால் நகர்கிறது கமெரா.


பம்பாய் கலவரத்தில் சிதைவுண்ட சில உடல்களைக் காட்டிவிட்டு, மேடையில் பேசிக் கொண்டிருக்கும் ஒரு வி. எச். பி. பேச்சாளரிடம் செல்கிறது.

"கடவுள் ஆதி அந்தமில்லாதவன்.... எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன்..." என்று அவர் பேச்சுத் தொடர்கிறது.

நமக்கு ஒரு புதுக்கவிஞரின் வரிகள் ஞாபகத்திற்கு வருகிறது.

***"தூணிலும் இருப்பானாம்***
***துரும்பிலும் இருப்பானாம்***
***ஏன்***
***மசூதியில் மட்டும்***
***கூடாதோ?"***

தான் சொல்ல வரும் விஷயங்களைப் பட்டவர்த்தனமாக உடைத்து விளக்கிக் கொண்டிராமல், தவறாய் நடந்து கொள்கிறவர்களின் நியாயங்களிலுள்ள உடைசல்களைக் காட்டியபடி நகர்வதாயிருக்கிறது பட்வர்த்தனின் பாணி.



***"நர்மதா நாட்குறிப்பு"*** என்ற படம், நர்மதா அணையால் பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்களின் வாழ்க்கையை போராட்டத்தைச் சொல்கிறது.

'நர்மதா பள்ளத்தாக்கைக் காப்போம்' இயக்கத்தின் தலைவி மேதா பட்கரும் மற்றும் நர்மதா இயக்கப் போராட்டக்காரர்களும் கேட்கும் கேள்விகளுக்கு முன்னாள் இந்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சர் கமல்நாத் பதில் சொல்லத் திணறுவதிலிருந்து நாம் படத்தின் நோக்கத்தினுள் ஒன்றை ஆரம்பித்து விடுகிறோம்.

அந்த அணைக்கட்டின் மூலம் நிர்மாணிக்கப்படவிருக்கின்ற பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்களின் பலன்களை அனுபவிக்கப் போகிறவர்கள் நகர்ப்புற செல்வந்தர்களே என்பதையும், கிராமப்புற வறிய மக்கள் பலிக்கடாக்களாக்கப்படுகின்றனர் என்பதையும் பேட்டிகள் காட்சிகளின் தொகுப்பின் மூலம் உணர்த்திச் செல்கிறது படம்.

***'தந்தை, தனயன், புனித யுத்தம்'*** என்ற படம் -

கணவனின் மரணச் சிதையில் உடன்கட்டை ஏறும் பெண்ணின் மரணத்தைப் பெருமைக்குரிய தாக்கும் மரபின் ஆணாதிக்க இழிநிலை,

மேல் சாதியினரின் புனிதப் படுத்தும் தீ வேள்விகள்,

பம்பாயில் எரிந்த இனவாதத் தீ, பாரபட்சம் காட்டுகின்ற தனிநபர் சட்டங்களுக்கு எதிராகப் போராடுகின்ற ஒரு முஸ்லிம் பெண்,

மதக் கலவரங்களால் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கிற நகரம்...

என்று பல்வேறு வன்முறைகள் பற்றிப் பேசுகிறது.

மனிதனில் வன்முறை இயற்கையாகவே குடிகொண்டுள்ளதா என்பது பற்றி ஆராய்கிறது.

ஒவ்வொரு பேரழிவிலும் பலிக்கடாக்களாக சிறுபான்மையினர், பெண்கள், குழந்தைகள் போன்றோர் ஆக்கப்படுகின்றனர்.

தேசங்கள் மேலும் மேலும் குறுகிய தேசங்களாக உபபிரிவுகளாக பிளவுபட்டு விட்டன. ஒவ்வொன்றும் மற்றதை அழித்தொழிப்பதற்குத் தயாராக உள்ளன. அல்லது தியாக வேள்வி என்பதாய் தம்மைத் தாமே அழிப்பதற்குத் தயாராக இருக்கின்றன.

பாதுகாப்பின்மையிலிருக்கின்ற மற்றவருக்கு எதிரான வன்முறை உளவியலை ஆராய்கின்றன பட்வர்த்தன் படங்கள்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் புரியப்பட்ட குற்றங்களுக்காகப் பழிவாங்கத் துடிக்கும் உணர்வுகளைக் கொண்டவர்களாயும் இன்றைய மக்கள் இருக்கின்றனர்.

ஒவ்வொரு மனிதனும் இலட்சியச் சின்னமாக "ரம்போ" இருக்கிறான். தங்கள் அடையாளங்களை முன்னிறுத்தி மக்கள் துண்டு துண்டாகிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இங்கிருந்து நாம் எங்கு சென்று கொண்டிருக்கிறோம்?

வர்க்கப் பார்வை, பாலின அரசியல் வன்முறை ஆகிய பிரச்சினைகளைப் பிரதிபலிக்கின்ற தனது செய்தி விளக்கப் படங்களின் மூலம் பல கேள்விகளை எழுப்பிச் சிந்திக்கத் தூண்டுகிறார் பட்வர்த்தன்.






**ஆனந்த் பட்வர்த்தன்**

இந்தியாவின் பம்பாயைச் சேர்ந்த ஆனந்த் பட்வர்த்தன் செய்தி விளக்கப் படங்களை உருவாக்குவதில் சர்வதேச ரீதியான கவனத்தைப் பெற்றிருக்கிறார். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பட்வர்த்தன் தொடர்ச்சியாகப் பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கிய செய்தி விளக்கப் படங்களை எடுத்து வருகிறார். இவருடைய படங்கள் கியூபா, லத்தீனமெரிக்கா போன்ற நாடுகளின் சினிமாப் பாணியில் அமைந்துள்ளன. நவீன வாழ்வில் உள்ள சிக்கல்களையும், எமது காலத்தின் சில முக்கிய கேள்விகளையும் அவருடைய படங்களில் காண முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தீபாவளிக்கு வந்த படங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டது முதல்வன். தமிழில் மிக அதிக விலைக்கு - அதாவது படையப்பாவை விடவும் அதிக விலைக்கு விற்பனையாகியிருக்கிறதாம் முதல்வன். அர்ஜுன், மனிஷா என்பது தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய விற்பனைக்குரிய பெயர்கள் அல்ல - அதுவும் ரஜினி படத்தை முந்தும் அளவுக்கு...?

ஷங்கர் மற்றும் ஏ.ஆர். ரஹ்மான் இருவரின் பெயர்கள்தான் படத்திற்கு அத்தனை பெரிய விலையை நிர்ணயித்திருக்கிறது. கூடவே, ஒளிப்பதிவாளர் கே.வி. ஆனந்த் (சென்ற வருட ஒளிப்பதிவாளர் விருது பெற்றவர் - காதல் தேசம், நேருக்கு நேர்) பேரிலும் நிறைய எதிர்பார்ப்பு.

முதல்வர் ரகுவரனைப் பேட்டி எடுக்கப் போகும் தொலைக்காட்சி நிருபரான அர்ஜுன் அவரைப் பார்த்து, "உங்கள் ஆட்சி சரியில்லை" என்று குறை சொல்ல, "நீ ஒரு நாளைக்கேனும் முதல்வர் கதிரையில் அமர்ந்து பார், அப்போது தெரியும் இதிலுள்ள கஷ்டம்" என்று ரகுவரன் சவால் விட.... அர்ஜுன் முதல்வராகிறார். சாதித்துக் காட்டுகிறார். படம் இத்தனை எளிமையானதாய் இல்லை. சுமார் ஒன்றரை வருடத் தயாரிப்பு. பல கோடிகளை ஏப்பம் விட்டிருக்கிறது.

ஒரு பாடல் காட்சிக்கு மட்டும் வந்து ஆடிவிட்டுச் செல்வோர் வரிசையில் முன்னாள் உலக அழகி சுஷ்மிதா ஷென்னும் சேர்ந்திருக்கிறார்.

ஏ.ஆர். ரஹ்மான் இசையில் பாடல்கள் ஆறும் ஹிட்டாகி விட்டன. ஒளிப்பதிவாளர் கே.வி. ஆனந்த், ஷங்கரிடம் நிறைய விஷயமிருப்பதாகச் சொல்கிறார். பாடல் காட்சிகள் வெகுவாகப் பேசப்படும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.






ஏ.ஆர். ரஹ்மான் 'வந்தே மாதரம்' தந்தார். இப்போது இளையராஜாவின் இளைய மகன் யுவன் ஷங்கர் ராஜா 12 பாடல்கள் கொண்ட 'தி பிளாஸ்ட்' என்றொரு இசை ஆல்பத்தை வெளியிட்டிருக்கிறார். உன்னி கிருஷ்ணன், நித்யா ஸ்ரீ, யுவன் ஷங்கர் ஆகியோருடன் கமல்ஹாசனும் பாடியிருக்கிறார். பாடல்களை எழுதியிருக்கும் அறிவுமதி, வாசன், கவிரவி, பாரதி பாஸ்கர் ஆகியோரோடு ஒரு பாடலை பிரபல எழுத்தாளர் சுஜாதாவும் எழுதியிருக்கிறார்.

**ஜோதிகா - துடிக்கின்ற கண்களைப் பார்க்கின்ற எவருக்கும் அழைப்பது போல் ஒரு சித்தத் துடிப்பு.**

இன்றுள்ள இளம் ஹீரோக்கள் எல்லோருடனுமே நடிப்பதற்குப் படங்கள் ஒப்பந்தமாகியிருக்கிற நக்மாவின் தங்கைக்கு இன்னும் கிசுகிசுக்கள் வெளிவராத வயசு. சேர்த்துக் கிசுகிசுக்கப்பட்ட ஹீரோக்களால் பந்தாடப்பட்டு மிரட்டப்பட்டு ஃபீல்டை விட்டு வெளியேற நேர்ந்தவர் அக்கா நக்மா. கார்த்திக்குடன் நடித்த முதல் படத்துடனேயே முடிந்து போனவர் மற்றொரு அக்கா. இந்த ஒக்டோபர் 18ல், 19வது பிறந்த நாளைக் கொண்டாடியிருக்கிறார் கடைக்குட்டி ஜோதிகா. 20க்கு மேல் தாண்டுகிறாரா என்று இன்னும் நாலைந்து வருஷங்கள் கழித்துப் பார்க்க வேண்டும்.

தமிழில் வெற்றிக்கொடி நாட்டிய ஹீரோயின்கள் எல்லோரையும் போல புஷ்டியான உடம்பும் குழந்தைத்தனமான முகமும் கொண்ட ஜோதிகாவின் செல்லப் பெயர் 'க்யூட்டி'. ஆசை, கமலுடன் ஒரு படத்திலாவது நடித்துவிட வேண்டும் என்பது. 'கமலையும் அமீர் கானையும் விரும்பாத இளம் பெண்கள் யார்' என்று கேட்கிறார்.

வாலி படத்தில் அஜீத்தின் கப்ஸா காதலியாக வந்தவர் இப்போது பல்லாயிர ரசிகர்களின் கனவு நாயகி. ஒரு பாட்டுக்கு வந்தாலும் கலக்கலாம் என்பதற்கு உதாரணமாகியவர். ரசிகர்கள் 'ஓ ஸோனா...' என்று துரத்த ஆரம்பித்தார்கள். நடிகர் சூர்யாவோடு 'பூவெல்லாம் கேட்டுப் பார்' படம் வெற்றியைத் தொடர்ந்து, அவருடன் அடுத்த படம் 'உயிரிலே கலந்தது'. வாலி படத்தைத் தந்த இயக்குனர் சூர்யாவின் அடுத்த படமான 'குஷி'யிலும் இவர்தான் ஹீரோயின். ஹீரோ விஜய். கல்லூரி மாணவர்களின் கதைதான். ஆனால் இதுவரை வந்திராத கதை என்கிறார் சூர்யா.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இஷா கோபிகர் "ராசியில்லாத நடிகை" என்ற வகையறாவுக்குள் சேர்க்கப்பட்டு விட்டார். பிடிக்காத சிலர் வேண்டுமென்றே பிரசாரம் செய்து தன்னை ஒதுக்கிவிட்டதாக வருத்தப்படுகிறார் இஷா. "முதல் மூன்று படங்களிலும் எனக்கு நல்ல பேர் வந்தாலும் படங்கள் சரியாகப் போகாததால் யாரும் புக் பண்ண வருகிறார்களில்லை. தமிழ் சினிமா என்றாலே சென்டிமென்ட் தான் போலிருக்கிறது..." என்று நொந்து கொள்கிறார்.

'வானத்தைப் போல', 'முகவரி', 'சந்தித்த வேளை' ஆகிய படங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, பிறகு அதிலிருந்து விலக்கப்பட்ட மர்மமும் புரியவில்லை. ஆனாலும் உற்சாகத்தில் எள்ளளவும் குறைவில்லாமல் இருக்கிறார். தனது சூழலை எப்போதும் கலகலப்பாக வைத்திருப்பவர். நண்பர்களிடத்தில் சரியான வாயாடி என்று பெயரெடுத்தவர். அதனால் எவரையும் பழகிய சில நிமிஷங்களுக்குள்ளேயே நண்பர்களாக்கிக் கொள்பவர்.

அப்பா டொக்டர். அம்மா வங்கி அதிகாரி. ஒரு தம்பி. 'காதல் கவிதை'தான் இஷாவுக்கு இதுவரை பிடித்த படம். அகத்தியனுக்குப் பாராட்டு மழை பொழிகிறார். பிள்ளையார் பக்தை. மும்பை மாதுங்கா சித்தி விநாயகரிடம் போனால் அவரோடு மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பாராம்.

இப்போ கார்த்திக்குடன் 'காதல் சொல்ல வந்தேன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.



விளையாட்டுத்தனமாகச் சொல்லிய சில பொய்களோடு ப்ரீத்தியைக் காதல் வலைக்குள் மாட்டுகிறார் பிரசாந்த். பிறகு அவரது விளையாட்டுத்தனமான பொய்கள் வினையாகிவிட, அவரே மாட்டிக் கொண்டு அல்லல்படுவதும், அந்தக் களேபரத்தில் நிகழ்கிற சிரிப்புகளும்தான் 'ஹலோ' படம். (குறைந்தது பத்துப் பழைய படங்களையாவது ஞாபகப்படுத்திக் கொண்டவர்கள் அபாக்கியவான்கள். நகைச்சுவைப் படங்களில் லொஜிக் எதுவும் பார்க்கக் கூடாது என்பதுபோல பழைய ஞாபகங்களும் இருக்கக் கூடாது.) 'உள்ளத்தை அள்ளித் தா', 'மேட்டுக்குடி' போன்ற படங்களில் சுந்தர்-சி யிடம் உதவியாளராக இருந்தவர் செல்வபாரதி. அவருக்கு இது இரண்டாவது படம். முதல் படம் விஜய், ரம்பா, தேவயானி ஆகியோர் நடித்த 'நினைத்தேன் வந்தாய்'.

மணிவண்ணன், வையாபுரி, சார்லி ஆகியோர் சிரிப்புத் துணைவர்களாக இணைகிறார்கள்.

டி.வி. விளம்பரங்களில் வந்து ரசிகர்களைக் கொள்ளை கொண்ட மொடல் ப்ரீத்திக்கு இது முதல் படம். வரவர மும்பை நடிகைகளின் புகலிடமாக மாறிவரும் கோடம்பாக்கம் இவரையும் அங்கிருந்தே இறக்கியிருக்கிறது. சென்னை ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்து படப்பிடிப்புகளில் கலந்து கொள்கிறார். யாருக்காகவோ காத்திருக்கும் மனிதர்களைப் பார்த்துக் கொண்டிருப்பது பிடித்தமான பொழுதுபோக்கு என்கிறார் ப்ரீத்தி. 'காத்திருத்தல்தானே வாழ்க்கை' என்கிறார் ஓஷோ என்ற ரஜனீஸ்.





ரிக்கி மார்ட்டினும் கத்தரின் செற்றா ஜோன்ஸும்.

## முத்தம்

கலிபோர்னியாவில் நடந்த எம்.ரீ.வி. தொலைக்காட்சியின் விருது வழங்கும் விழாவில் அதிசிறந்த முத்தத்திற்கான விசேட பரிசைப் பெற்றுக் கொண்ட பொப் நட்சத்திரங்களான




உலக அழகியாகவும் வந்து, இந்திய சினிமா ரசிகர்களிடமும் தனக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட ஐஸ்வர்யா சமீபத்தில் கலக்கியிருக்கும் படம் 'தால்'. ஹிந்தியின் பிரபல இயக்குனர் சுபாஸ் கையின் மற்றுமொரு வெற்றிப் படம். 'தாளம்' என்ற பெயரில் தமிழிலும் வெளியாகி பரபரப்பாகப் பேசப்படுகிறது. 'இது சாதாரண மானுட அழகே அல்ல' என்று வியக்கவைக்கிறார் ஐஸ்வர்யா. ரஜினியின் அடுத்த படத்தின் நாயகி ஐஸ்தான். படையப்பாவிலேயே நடித்திருக்க வேண்டும். தேதிகள் ஒத்துழைக்காததால் தவறிவிட்டது.

வரவிருப்பது ராஜீவ் மேனனின் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்'.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோயற்ற

# குழந்தைகள் கவனம்....

டொக்டர் எம். கே. முருகானந்தன் எம்.பி.பி.எஸ்.



வருடாந்தம் பல இலட்சக்கணக்கான குழந்தைகள் விபத்துக்களினால் காயம் அடைகின்றார்கள். அதில் பலர் உயிரிழக்கவும் நேரிடுகின்றது. இந்த விபத்துக்கள் எல்லாமே வீதி விபத்துக்களல்ல.

விபத்துக்கள் உங்கள் வீட்டுக்குள்ளேயே நடக்கலாம். அல்லது உங்கள் முற்றத்து மரத்தடியிலோ, கொல்லைப்புறக் கிணற்றடியிலோ, பிள்ளையார் கோயிலில் குளத்திலோ கூட நடக்கலாம். எனவே அவதானமாக இருந்து குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்.

குழந்தைகள் துருதுருவென்று இருப்பார்கள் எதையும் செய்து பார்க்க வேண்டும் எனத் துடிப்பார்கள். ஆனால் அனுபவமோ குறைவு. இதனால் ஆபத்திற்கான வாய்ப்புக்களை மதிப்பீடு செய்ய முடியாது. எளிதில் மாட்டுப்பட்டு விடுவார்கள்.

### வயதும் விபத்தும்

ஓடவோ நடக்கவோ முடியாத மூன்று மாதக் குழந்தைகள் கூட விபத்துக்குள்ளாகலாம். உங்கள் மூத்த பாலகனைத் தூக்கும்போது கைதவறிக் கீழேபோட்டுவிடக் கூடும். அல்லது அக்குழந்தையே தனது முகத்தைத் தலையணையில் தவறி அழுத்தி மூச்சுத் திணறி இறந்து விடவும் கூடும்.



தவழும் வயது அதிக ஆபத்தானது. தவழும் போது கட்டிலிலிருந்து கீழே விழுந்துவிடலாம். அல்லதுஅடுப்பு நெருப்பிற்குள்ளோ, குப்பி விளக்கிற்குள்ளோ கையை வைத்து விடவும் கூடும். மின்சார பிளக்கிற்குள் கையை வைத்துவிடவும் கூடும். அல்லது கீழே கிடக்கும் எதையாவது எடுத்து வாய்க்குள் போட்டு விடவும் கூடும். எனவே இந்தக் காலத்திலும் உங்களது தீவிர கண்காணிப்புத் தேவை.

உங்கள் குழந்தை நடக்க ஆரம்பிக்கும்போது விபத்துக்களுக்கான வாய்ப்புக்கள் மேலும் அதிகரிக்கின்றன. இந்த வயதில் அவர்கள் மற்றவர்கள் செய்வதை மிகுந்த ஆர்வத்தோடு அவதானித்துக் கொண்டிருப்பார்கள். பின் தாங்களே அவற்றைப் பரீட்சித்துப்பார்க்கமுனையும்போது ஆபத்துக்குள் மாட்டி விடுகிறார்கள். கத்தி, கத்தரிக்கோல், பிளேட், தீப்பெட்டி, மின்சார உபகரணங்கள், மருந்துகள், மாத்திரைகள், மண்ணெண்ணெய் போன்றவை அவர்களுக்கு ஆர்வமூட்டி ஆபத்துக்குள் சிக்க வைப்பவையாகும்.

மூன்று நான்கு வயதை அடைந்ததும் வீட்டுப் பொருட்களில் அவர்களுக்கு பரிச்சயமும் அனுபவமும் கிடைத்து விடுவதால் அத்தகைய விபத்துக்களிலிருந்து தப்பிவிடுவார்கள். ஆனால் வெளியே செல்ல ஆரம்பிக்கும் அவர்களுக்கு முற்றத்திலும், தோட்டத்திலும், வீதியிலும் ஆபத்துக்கள் காத்திருக்கும். அவர்கள் கத்திகளால் சண்டை போடலாம். கூரான தடிகளால் குத்துப்படலாம். அல்லது இனந்தெரியாத பழங்களையும் கிழங்குகளையும் இலைகளையும் சுவைத்துப் பார்த்துப் பிரச்சினைப்படலாம். அல்லது குளத்திலோ ஆற்றிலோ நீந்த முனைந்து மூழ்கிவிடலாம்.

### வீட்டிற்குள் சில ஆபத்துக்கள்

1. நெருப்பு, கொதிக்கும் பாத்திரங்கள், விளக்குகள், மின்சார பிளக், கஞ்சி, குழம்பு, கொதிநீர் போன்ற கொதிக்கும் உணவுகள் போன்றவற்றால் **சுடுகாயங்கள்** ஏற்படக்கூடும்.

2. உடைந்த கண்ணாடித் துண்டுகள், ஆணிகள், கத்தி,கோடரி, பிளேட், கூரான பலகைத் துண்டுகளால் **வெட்டுக் காயங்கள்** ஏற்படலாம்.

3. நாணயக் குற்றிகள், விதைகள், பட்டன்கள், விதைகள், எலக்ட்ரோனிக் பற்றரிகள் போன்றவற்றை தவறுதலாக விழுங்கும் போது சுவாசப்பையினுள் சிக்கி **மூச்சுத் திணறல்** ஏற்படலாம்.

4. மண்ணெண்ணெய், கலவை மருந்துகள். மாத்திரைகள், நச்சுத் தாவரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவற்றைத் தெரியாமல் குடித்தால் **நஞ்சூட்டப்படலாம்.**

5. யன்னல், கதிரை, மேசை, படிகள், கட்டில் போன்றவற்றில் ஏறும் போது தவறி விழுந்தால் **எலும்பு முறிவு** ஏற்படலாம்.


### விளையாட்டில் விபத்துக்கள்

1. ஆறு, குளம், கிணறு, கடல் ஆகியவற்றில் நீந்தி விளையாட முனையும்போது மூழ்கிவிடக் கூடும்.

2. மரம், மதில், கட்டடம் போன்றவற்றில் ஏறி விளையாடும் போது கீழே விழுவதால் காயங்களும் எலும்பு முறிவுகளும் ஏற்படக்கூடும்.

3. நச்சுப் பழங்களையும், விதைகளையும், கிழங்குகளையும் உண்ணக் கூடும்.

4. நாய், பூனை, பன்றி போன்ற மிருகங்களினதும் பாம்பு போன்ற ஊர்வனவற்றினதும் கடிகளுக்கு ஆளாகலாம்.



### செய்யக் கூடாதன

✚ மூத்த பிள்ளையை சிறு குழந்தையை பார்க்கும்படி தனியே விட்டுவிட்டு செல்லாதீர்கள்

✚ கட்டில், மேசை, ஏணை, கதிரை, குளியல் தொட்டி ஆகியவற்றில் குழந்தையைத் தனியே விட்டு செல்லாதீர்கள் (10 செ. மீ. உயரமுள்ள நீரில் கூட குழந்தைகள் மூழ்கி இறந்துவிடலாம்.)

✚ கூரான தடிகள், கத்தி போன்றவற்றுடன் ஓடி விளையாட அனுமதிக்க வேண்டாம். வாய்க்குள் எதையும் வைத்தபடி ஓடவிடவும் கூடாது.

✚ மண்ணெண்ணெய், கிருமிநாசினிகளை அழகான போத்தல்களில் சேமித்து வைக்க வேண்டாம்.

✚ தகுந்த மேற்பார்வையின்றி நீரில் விளையாடவோ, நீந்தவோ அனுமதிக்க வேண்டாம்.

✚ வோக்கர்கள் பாதுகாப்பானவையல்ல. அவை விபத்துக்கு இட்டுச் செல்லாம். அத்துடன் அவை குழந்தைகளின் ஆற்றலை விரைவில் வளம்படுத்த உதவுபவையல்ல.

### செய்யப்பட வேண்டியவை

✔ யன்னல், படி ஆகியவற்றில் குழந்தை விழுந்துவிடாமல் தடைகள் போடவும்.

✔ பாவிக்கப்படாத மின்சார இணைப்புக்களை அடைத்து விடவும்.

✔ கூரான பொருட்கள், மருந்துகள், இரசாயனப் பொருட்கள், தீப்பெட்டி, விதைகள், நச்சுப் பொருட்கள் ஆகியவை குழந்தைகளுக்கு எட்டாத, கண்ணில் படாத இடங்களில் சேமித்து வையுங்கள்.

✔ அடுப்பு, விளக்கு, மின்சாரம், கொதிக்கும் உணவுகள் ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

✔ நச்சுத் தாவரங்களை உங்கள் வீட்டிலிருந்து அழித்து விடுங்கள். பிள்ளை விளையாடும் இடத்திலிருந்தும் அழித்து விடுங்கள்.

✔ நின்று, கவனித்து, கேட்டு, நிதானமாக வீதிகளை கடக்கப் பழக்கப்படுத்துங்கள்.

✔ தெரியாத போத்தல்களிலிருந்து எதையும் குடிக்காமல் இருக்கவும், அறியாத பழங்கள் கிழங்குகளை உண்ணாமலிருக்க பழக்குங்கள்.

✔ விளையாட்டு இடங்கள் ஆபத்தற்றவையாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

✔ கிணறுகளை மூடி வையுங்கள்.

**ஆதாரம்: *Child Health Diakgue***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிரகபலன் : கணித்துச் சொல்பவர்



**மேஷம்:** தோல்வியைக் கூட சாமர்த்தியமாய், 'மற்றவர்களால் ஏற்பட்டது' என்கிற பலர் நம்மிடையே இருக்கிறார்கள். உடல் நலம் அதிக கவலை தராது. குடும்பத்தில் சுப காரியங்கள் ஏற்படும். வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவீர்கள். தொழில் சார்ந்தோருக்கும் நற்பயனுண்டு. குடும்பப் பெண்களுக்கு, வேலைப் பளு அதிகரிக்கும். தொழில் புரிவோர் நன்னடத்தைக்கு அதிக பாராட்டுக்கள் பெறுவீர்கள். குழந்தைகளுக்கு சளி காரணமான நோய்கள் ஏற்படும். மாணவ - மாணவியர் திரும்பவும் ஒருமுறை பாடங்களை அலசிப்பார்க்க வேண்டிய தருணம். வெற்றி மிக அருகிலிருக்கிறது.

**Give people more then they expect and do it cheerfully.**



**ரிஷபம்:** மற்றவர்களோடு ஆத்மார்த்தமாகப் பழகுவோமா னால் அநேகமாக மன வேதனைதான் மிஞ்சும். பிரித்தறிந்து பழக வேண்டும். உடல் நலம் மீண்டும் உபாதையடைய ஏன் வழி பார்க்கிறீர்கள்? குடும்ப நிலை குழப்பமில்லாமல் ஓடும். வியாபாரிகள் பங்குதாரர்களோடு பனிப்போர் நடத்த வேண்டியிருக்கும். தொழில் புரிவோர் நல்ல வாய்ப்புக்களை நழுவ விட வேண்டும். குடும்பப் பெண்களுக்கு உறவுப் பெண்களால் தொல்லை. தொழில் புரிவோர், மேலதி காரிகளோடு தர்க்கத்தைக் குறையுங்கள். குழந்தைகள் முரண்டு பிடிக்கும் போது மனரீதியில் தாக்கமேற்படாதவாறு கையாளுங்கள். மாணவ - மாண வியர் குழாமுக்கு சிறந்த தருணம். காண்பியுங்கள் அந்தத் திறமையை.

**Talk slowly - Never mind! - But think quickly.**



**மிதுனம்:** நமது கோபத்துக்கு மட்டுந்தான் சரியான காரணமி ருக்கிறது என்றால் கவனம் - விரைவில் மாரடைப்பும் கூடவே வரும். உடல் நலம் பெறும். தொடர்ந்து கவனமாகப் பேணுங் கள். குடும்பச் சூழலில் அந்நியர் தலையீடு - தலையிடி! வியா பாரிகள் சமலாபம் பெறுவீர்கள். தொழில் செய்பவர்கள், புதிதாக கடன் வாங்குவதை எக்காரணம் என்றாலும் தவிர்க்கவும். குடும்பப் பெண்களு க்கு சிறு வியாபார சிந்தனை ஏற்படலாம். மதிப்பளியுங்கள். வெற்றிதான். தொழில் புரிவோர் தொழில் மாற்றம் ஏற்பட்டால் தயங்க வேண்டாம். சிறார் கள் பிடிவாதம் காட்டுவார்கள். தொடராது. பயம் வேண்டாம். மாணவ - மாண வியர் அரட்டையடிக்கும் நேரமல்ல. அதற்காகவா இத்தனை சிரமம்? கல்வி, கல்வி - அதுவே அரட்டையாகட்டும்.

**Remember - that your character is your destiny!**



**கடகம்:** தலைவனாக இருக்கலாம்! அது பல காரணிகளால் கிடைப்பது! தலைவணங்க வேண்டும் என்று நினைப்பது - தற் கொலைக்கொப்பானது. உடல்நலத்தில் - உட்கொள்ளும்சமாச் சாரம் அதிக பங்கெடுக்கிறது. குடும்ப சூழல் அமைதியும், மகிழ் ச்சியுமடையும். வியாபாரிகள், ஊழியர்களோடு சுமுகமாகப் பழகுங்கள். தொழில் புரிவோர் - அகம்பாவப் போக்கினால் அல்லலுறுவீர்கள். குடும்பம் சார்ந்த பெண்டிர் - துயர நிகழ்வுகளால் சோகமடைவீர்கள். தொழில்சார் பெண்கள் - திருட்டுகளால் பொருள் இழப்படைவீர்கள். சிறார்கள் கண் சார்ந்த நோய்களுக்குட்படலாம். சிறிய பொருட்களை கைக்கெட்டா தூரத் தில் வைக்கவும். மாணவ, மாணவியர்கள் - உற்சாகத்தை பரீட்சை வரை மட்டுமல்ல - தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளுங்கள்.

**Open your arms to change! - But don't let go of your values.**



**சிம்மம்:** பல வேலைகள் செய்யப் பழக வேண்டும் என்று கூறி விட்டு அவர் வேலையை மட்டும் செய்ய வேண்டுமென்றால்....? புரிந்தால் புண்ணியமுண்டு. உடல்நிலை நிறையவே தேறியி ருக்கும். வாழ்த்துக்கள். குடும்பம் உங்களது முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் தருணம். வியாபாரிகள் பல வகை சிரமங் களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். தொழில் புரிவோர் கண்டதெல் லாம் தங்கமென்று நினைக்காது இருப்பதைக் காப்பாற்றுங்கள். குடும்பப் பெண்களுக்கு நற்செய்திகள் கிட்டும். தொழில் புரியும் பெண்கள் வெளியூர் பயண வாய்ப்புக்கள் வரும். தொழிலை விட்டு விலக வேண்டாம். கவனம்! சிறார்கள் அமைதியாக இருப்பார்கள். மாணவ மாணவியர் இன்னும் தத் தமது பொறுப்புக்களை உணராவிடின் உணருங்கள். இதுதான் தருணம்.

**Don't let little dispute injure a great friendship.**



**கன்னி:** அடித்தளம் இல்லாத கட்டிடம் - அமைதி இல்லாத மனம் - கிடைத்ததுதான் சரியென்ற பிடிவாதம் - இவை குறிக் கோளையே தப்பாக்கிவிடும். உடல்நலம் களைப்பால் தளர் வடையும். குடும்பம் உங்களது அருகாமையின்மையால் நலிவ டையும். வியாபாரிகள் புது ஏற்பாடுகளை விலக்குங்கள். தொழில் புரிவோர் சிறிது மனிதாபிமானத்தை கடைப்பிடியுங்கள். பிரச்சினைகளை அப்பால் வெல்லலாம். குடும்பப் பெண்கள் கூட கோபப்பட்டு பிரச்சினைப்படுவீர்கள். தொழில் புரிவோருக்கு தொழிலே பறிபோகும் நிலை. குழந்தைகள் அண் மையும், அன்புமின்றி குழம்பும் தருணம். கவனம். மாணவ மாணவியர் களுக்கு, தான் செய்வதே சரியென்று, பரீட்சையில் முட்டை! - வேண்டாம்..! அவதானம்தான் தேவை.

**Remember! - that great achievements involve greate risk!...!**



**துலாம்:** குரலும், தோற்றமும், நேர் பார்வையும் - உம்மென்ற முகமும், இதயங்களை அடக்கலாம். வெல்ல முடியாது - ஒரு துளி அன்பைக் கூட. உடல்நிலை மோசமடையும் அறிகுறி. அவதானம். குடும்ப நிலவரம் உங்கள் கையில். கவனமாக கையாள வேண்டும். வியாபாரிகள் தரகர்களோடு சம்பந்தம் வைக்க வேண்டாம். தொழில் புரிவோர், கீழ்மட்ட ஊழியர்களால் அல்லல்படுவீர் கள். சச்சரவுகளை தவிர்க்கவும். குடும்பப் பெண்களுக்கு அதிக பலன் களில்லை. மற்றவர்களுக்கு (Guarantee) உத்தரவாதங்கள் கொடுக்க வேண்டாம். குழந்தைகள் - பல் நோயால் பெரிதும் அல்லல்படலாம். அவ தானியுங்கள். மாணவ - மாணவியர் "டியூஷன்" என்று பெயர் பண்ணுவீர் கள். பார்க்கலாம் - படிப்பா, அரட்டையா என்று!

**Approach love and cooking with reckless abandon.**



**விருச்சிகம்:** என்ன? எல்லாம் போகப் போகிறதே என்று கோபம் வருகிறதா? வரும்! இதுதான் எனக்கு எல்லாமே என்று எண் ணியதால்! உடல் நிலையில் களைப்பும் - உபாதைகளும் இருக் கும். குடும்பச் சூழலில் பலவிதமான தெளிவுபடுத்தல் அவசி யம். வியாபாரிகள் நேரம் - வியாபாரம் இரண்டையும் குழப்பிக் கொள்வீர் கள். தொழில் புரிவோர் மன சஞ்சலத்தால் குழம்புவீர்கள். குடும்பப் பெண் கள் கூறிய பொய்களால் தண்டனையடைவீர்கள். தொழில்சார் பெண்டிர், அளவுக்கதிகமான அகம்பாவத்தால் அல்லல்படுவீர்கள். சிறார்கள் கடு மையான விபத்துக்களை ஏற்படுத்திக் கொள்வார்கள். அவதானியுங்கள். மாணவ, மாணவியர் சுற்றாடல் சூழலை மறந்து படிக்க முடியுமாயின் படியுங்கள். வேறு வழியில்லை.

**Spend some time - ALONE!**



**தனுசு:** நண்பர்களையும் மற்றவர்களையும் குழப்பிக் கொள்ள வேண்டாம். அந்த நண்பர்களிலேயும் நல்ல நண்பர்களை இழக்கவே கூடாது. உடல் நலம் கூடிய விரைவில் கெட நீங் களே வழியமைப்பீர்கள் போலிருக்கிறது! குடும்பத்தோடு கொஞ் சம் கூடுதலாக ஒன்றப் பாருங்கள். வியாபாரிகளுக்கு சம பலன். தொழில் பார்ப்போர் அவதானமாக அனுசரித்துப் போக வேண்டும். குடும்பப் பெண்கள் சுபகாரிய செலவுகளுக்குள்ளாவார்கள். தொழில்சார் பெண்கள் - சக ஊழி யர்களின் பொறாமைக்குள்ளாவார்கள். சின்னஞ்சிறுசுகள் சிரமம் தராது தமது பாட்டில் தாமிருப்பார்கள். மாணவ மாணவியர்க்கு பெரிதாக கூற யாதுமில்லை. கல்வியை... உணர்ந்து கொண்டால் அதுவே போதும்.

**Judge your success by what you had give up - in order to get it!**



**மகரம்:** பிறவியிலேயே கற்பனைப் பொய் சொல்லும் பழக்கம் - பரவாயில்லை. அதையே உண்மையாகப் பார்க்க நினைத் தால்...? உடல் நலம் - உணவில் தங்கியிருக்கிறது. குடும்பச் சூழல் - குழப்பங்களின் தாக்கம் குறைவதாயில்லை. வியாபா ரிகள், கூடுதல் லாபமடையலாம் என்று குழம்ப வேண்டாம். தொழில் புரிவோருக்கு தற்போதைக்கு குறிப்பிடும்படியான முன்னேற்றமில்லை. குடும்பப் பெண்கள் - அதிக ஆடம்பரப் பொருள்களின் ஆசையால் குழம்பு வீர்கள். தொழில்சார் மகளிருக்கு சமபலன்களுண்டு. சிறார்கள் சுமுக மான சிந்தனையில் இருப்பார்கள். உற்சாகப்படுத்துங்கள். மாணவ மாண வியர் இன்னும் கொஞ்சம் சிரத்தையெடுத்தால் நன்று.

**In disagreements - fight fairly! - No name calling!**



**கும்பம்:** நம்மைப் பற்றி நன்றாகவே புரிந்தவர்களிடம் நாமும் கொஞ்சம் மனம் விட்டுப் பேசலாம். பிழையில்லை - அதுவும் வேண்டாமென்றால்...? உடல் நிலையில் மாற்றத்தை நீங்கள்தான் ஏற்படுத்த வேண் டும். குடும்பச் சூழலில் ஏற்பட்ட குழப்பங்களையும் மாற்றலாம். முயற் சித்தால்! வியாபாரிகள் ஆடம்பரச் செலவுகளுக்குள்ளாவீர்கள். (தேவை யா?) தொழில் புரிவோர் இனியில்லை என்று பிரத்தியேக பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வீர்கள். குடும்பப் பெண்கள் - சேமிப்பை இழப்பீர்கள் - தேவையில்லாமல்! தொழில் புரியும் மாதர் - ஆறுதலடையலாம். கடன்க ளைக் கட்டினால்! சிறார்களுக்கு பல உபாதைகள் ஏற்படும். கவனமாகக் கண்காணியுங்கள். மாணவ குழாமா? சொல்லவே வேண்டாம்! படிப்பை விட எத்தனையோ...? எவர் எம்மைத் தட்டிக் கேட்க?

**Call your mother - or good friends and say - Hello!**



**மீனம்:** ஐந்து பேரை அழைத்து - அதை அமைப்பாக்கி விட்டு தலைக்கு ஆபத்தென்றால்.. அந்த ஐந்து பேரும் பிழைத்துக் கொள்வார்கள்...! நம் கதி?! உடல் நிலை இன்னும் முன்னேறி னால் குடும்பச் சூழலில் பிரச்சினையிருக்காது. வியாபாரிகள் வீண் - ஆடம்பரச் செலவுகளைக் குறையுங்கள். தொழில்புரிவோர் - விருந்து விடுதி என்பதை கொஞ்சம் தள்ளிப் போடவும். குடும்பப் பெண்கள் பொருளாதாரப் பின்னணியில் தவிப்பீர்கள். தொழில் புரியும் பெண்கள் கடன் தொல்லைகளுக்கு ஆளாவீர்கள். சிறார்கள் - சம நிலையில் இருப் பார்கள். அவதானிப்பும் அவசியம். மாணவ - மாணவியர்க்கு கட்டுப்பாட டனான கல்வியுணர்வு அவசியம்.

**3R :- Respect: yuorself / Respect: Others and Responsibility for all your actions!**

கிரகாச்சாரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தணியாத தாகம்

நூலாசிரியர் : சில்லையூர் செல்வராசன்
வெளியீடு : கமலினி செல்வராசன்
9, றன்சிவி ஒழுங்கை, கொழும்பு -04, இலங்கை
விலை : ரூபா 185/- பக்கம் : 137



காலம்சென்ற சில்லையூர் செல்வராஜனின் படைப்பாற்றல் திறனுக்குச் சான்று பகரும் மறக்க முடியாத வானொலி நாடகம்தான் தணியாத தாகம். 1977, 78ம் ஆண்டுகளில் இலங்கைத் தமிழ் நேயர்களை வானொலியோடு அசையாது கட்டிப்போட்ட, மக்களின் உள்மன உணர்வுகளை உருக்கி, விழிகளில் கண்ணீர்த் திவலைகளாக வரவழைத்த அந்த மிகப் பிரபலயமான வானொலி நாடகத்தின் இரண்டாம் பதிப்பு நூலுருவாக அவரது துணைவியார் கமலினி செல்வராசனால் வெளிக்கொணரப் பட்டுள்ளது.

வானொலி நாடகங்கள் மக்களின்மனங்களைகொள்ளையிட்டிருந்த ஒரு காலம் எழுபது, எண்பதுகளில் இருந்தது. அக்கால நாடகங்களும் மக்களின் வாழ்வோடு பிணைந்தவையாக இருந்தன. அன்றுவானொலிமட்டுமேஒரேஜனரஞ்சகஊடகமாக இருந்தது மட்டுமே இதற்குக் காரணமாக இருக்கவில்லை. அல்லது எமது சமூக வாழ்க்கை அவ்வளவு எந்திரத் தனமாக இருக்கவில்லை என்பதோ, தாராளமான ஓய்வு நேரம் கிடைத்திருந்தது என்பதோ உண்மையாயினும் அவற்றை விடஅந்நாடகங்களைத்தரமாகவும் மனங்களைக் கசியவைக்கக் கூடியவையாகவும் எழுதிய, நடித்த, படைத்த பிரக்ஞைமிக்க கலைஞர்களின் அர்ப்பணமிக்க பங்களிப்புகளுமே இதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

இன்றைய காலங்களில் அத்தகைய நாடகங்களும் அருகிவிட்டது. அவற்றை ரசிக்கும் பொறுமையும் ஆர்வமும் மங்கி வருகிறது. அவற்றை இன்றைய உலகமயமாக்கப்பட்ட மின்னியல் ஊடகத்துறை கபளீகரம் செய்து விட்டது.

இந்நிலையில் நம்மிடையேஒரு அர்த்தபூர்வமானசமூகச்சித்திரத்தைவடித்துவைத்தசில்லையூரின் கைவண்ணம் இனிமையான ஒரு காலத்தின் பதிவாக இப்போது ஆவண வடிவில் எம் கைகளுக்கு வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

கலையிலக்கியம் சம்பந்தப்பட்ட சகல துறைகளிலும் பிரகாசித்து மறைந்தசில்லையூர் செல்வராசன் அழுத்தமான, ஆழுமைமிக்க படைப்பாளியாக மட்டுமல்ல, சமூகப் பிரக்ஞை கொண்ட முற்போக்குவாதியாகவும்விளங்கியவர். மனித நேயத்தை வெளிக்கொணரும் அவரது இந் நாடகம் மெல்லிய மன உணர்வுகளின் வெளிப்பாடான, உயிர்ப்புள்ள ஒரு வாழ்க்கைச் சித்திரமாகப் பரிணமித்தது.

கலை இலக்கியத்தில் உயர் ரசனையை வேண்டி நின்றவர் செல்வராசன். அவர் முற்போக்கு முகாமைச் சார்ந்தவர் என்பதற்காக பழந்தமிழ் இலக்கியத்தின் சிறப்பான அம்சங்களை நிராகரிப்பவருமாக இருக்கவில்லை. அவற்றை உள்வாங்கி வளப்படுத்த வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்.



அதேவேளை தன்னுள்ளே மிளிர்ந்த ஆற்றலுக்கேஉரித்தானகலைச்செருக்கோடும் அவர் மிளிர்ந்தார். கலைஞன் எவருக்கும் தலை குனிய மாட்டான் என்ற மிடுக்கு அவரிடம் இருந்தது.

இலங்கைத் தமிழ் கலை இலக்கியத்தின் ஒரு காலகட்டத் தலை மகனாகத் திகழ்ந்த அவரது இப் படைப்பு வாசகர்களால் வரித்துக்கொள்ளப்படும் என்பது எம் எதிர்பார்ப்பு.

## கிராமத்துக் கனவுகள்

நூலாசிரியர் : எம். எச். எம். ஷம்ஸ்
34, கோட்டகொட, வெலிகம
விலை : ரூபா 120/- பக்கம் : 146



இலங்கையின் இன்றைய மூத்த கலையிலக்கிய வாதிகளில் ஒருவராகத் திகழ்கின்ற, சமூகப்பிரக்ஞைகொண்ட படைப்பாளியானஎம்.எச்.எம். ஷம்ஸ் அவர்கள் வெளியிட்டுள்ள முதலாவது சிறுகதைத் தொகுதி கிராமத்துக் கனவுகள்.

இந் நூலின் சிறுகதைகள் வெறும் கற்பனைக் கதைகளல்ல, வரலாற்றின் எச்சங்களான உண்மைகளைக் கோர்க்கவே இங்கு கற்பனை பயன்பட்டது என்கிறார் நூலாசிரியர் ஷம்ஸ்.

வெண்புறாவே என்ற புகழ்பெற்ற தொலைக்காட்சிப் பாடலின் மூலம் ஜனரஞ்சகமாக அறிமுகமான ஷம்ஸ், கலையிலக்கிய உலகுக்குநீண்டகாலமாகசேவையாற்றி வருபவர். புனைகதை, கவிதை, விமர்சனம், ஆய்வுக் கட்டுரை, மதச் சீர்திருத்தம், ஓவியம், இசை, புகைப்படக் கலை, பத்திரிகைத்துறை வானொலிநிகழ்ச்சிகள் என இவர் தடம்பதித்துள்ள தளங்கள் பல.

சிங்கள கலை இலக்கிய, மற்றும் சினிமா, தொலைக்காட்சி நாடகத் துறைகளின் சிறப்பான அம்சங்களை, தான் பணிபுரியும் தினகரன் பத்திரிகையில் சாரளம் என்ற பெயரில் அவர் தந்து வருவது அக்கரைக்குரிய முயற்சியாகவுள்ளது.

இன்றைய இளைய தலைமுறையினரின் படைப்புக்களை உற்சாகப்படுத்தி, வழிகாட்டி வரும் ஷம்ஸ் தனது இச் சிறுகதைத் தொகுதியை வெளிக்கொணர இத்தனை காலம் காத்திருக்க நேர்ந்ததன் காரணம் அவரது ஏழ்மையும், யாரையும் யாசிக்காத பண்பும் தான்.

மூத்த, அனுபவம் வாய்ந்த, ஆழ்ந்த வாசிப்பும், ரசனையும் கொண்ட ஷம்ஸ் இன்னும் ஒரு துடிப்பான இளைஞனைப்போல ஓய்வில்லாதுஇயங்கிக்கொண்டே இருப்பது அவருக்கு அலாதியான மிடுக்கை வளங்குவதாயுள்ளது. அது அவரது படைப்புக்களிலும் இளமை துள்ள மிளிர்கிறது.

ஷம்ஸின் சிறுகதைகளில் பிரபுத்துவம், குருத்துவம், ஒடுக்குமுறை போன்றவற்றுக்கெதிரானசத்தியாவேசமும் சமூக நீதிக்கான சங்கநாத முளக்கமும் பிரசார நெடியற்று கலைத்துவ மணத்துடன் ஓங்கி நிற்குமென இந் நூல் குறித்த தனது குறிப்பில் எழுதுகிறார் கலாபூஷணம் ஜவாத் மரைக்கார்.

### சாஹிர் ஹுஸைனின் எனதுயிரின் முடிவிற்காக...

கடந்த இதழில் அறிமுகப்படுத்தப்பட்ட இந் நூலுக்கான அட்டைப்படம் தவறுதலாக மாறிப் பிரசுரமாகிவிட்டது. அந்நூலுக்கான அட்டைப் படத்தை இங்கே தந்துள்ளோம்.



**நூல் அறிமுகப் பகுதியில் தங்கள் நூல்களும் இடம்பெற வேண்டுமானால் புதிதாக வெளியான உங்கள் ஒவ்வொரு நூலினதும் இரண்டிரண்டு பிரதிகளை அனுப்பி வைக்க வேண்டும்.**



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து

பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்

# நீண்ட கால வைப்புச் சான்றிதழ்கள்

**4 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **15%**

**5 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **16%**

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

## பெறும் நன்மைகள்:

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| காலம் | 4 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன் நஷனல் வங்கி**
*உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி*

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# பூத்துச் சிரித்திடும் ரண்கெகுளு அதிர்ஷ்டம்

உங்களது ரண்கெகுளு சேமிப்புக் கணக்கின் மூலம் பெறுமதியான ஏராளம் பரிசுகளை வெல்ல இப்பொழுது அரியதொரு வாய்ப்பு.

**முதலாம் பரிசு**

10 மல்டி மீடியா கொம்பியூட்டர்கள்

**இரண்டாம் பரிசு**

100 மௌண்டன் பைசிக்கிள்கள்

**மூன்றாம் பரிசு**

10,000 ரண்கெகுளு பாடசாலைப் பைகள்





ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது தற்போதுள்ள ரண்கெகுளு கணக்கில் 1999 ஜூன் மாதம் 30ந் திகதியன்று ஆகக்குறைந்த கணக்கு மீதியாக 3,000 ரூபாவை பேணுங்கள். நீங்களும் ரண்கெகுளு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறுவீர்கள்.

FIRST & FORWARD

இனியுமென்ன தாமதம். உங்கள் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இன்றே நீங்களும் இலங்கை வங்கியில் ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே ரண்கெகுளு கணக்கொன்று உங்களிடமிருந்தால் மேலும் மேலும் சேமியுங்கள்.

ஞாபகமிருக்கட்டும். சேமிப்பதால் உங்களுக்கும் வெற்றி. நாட்டுக்கும் வெற்றி.

இலங்கை வங்கி

ලංකා බැංකුව Bank of Ceylon

புதிய நூற்றாண்டின் - தேசத்தின் ஒளிவிளக்கு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்